விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 11 ஞாயிற்றுக்கிழமை (23.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 066

## ஆவணப்படத்திற்கு இந்தியாவில் தடை

(யாழ்ப்பாணம்)

நோ பயர் ஸோன் ஆவணப படத்திற்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவின் சனல் 4 ஊடகத்தினால் வெளியிடப் பட்ட இலங்கை தொடர்பான சர்ச்சைக்குரிய நோ பயர் ஸோன் மற்றும் கில்லிங் பீல்ட்ஸ் ஆவணப்படங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்திய மத்திய திரைப்படச் சபை நாட்டின் திரையரங்குகளில் சனல் 4

23 ஆம் பக்கம் பார்க்க..

# பிரிவினையை ஏற்படுத்த விக்னேஸ்வரன் முயற்சி

## ஜாதிக ஹெல உறுமய உறுமல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திற்கு விமான சேவை அதிகாரத்தை பெறும் விக்னேஸ்வரனின் பிரிவினைவாத யோசனைக்கு, இடமளிக்கக் கூடாது என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

யாழ் - பலாலி, திருகோணமலையின் சீனன்குடா ஆகிய விமான நிலையங்களில் இருந்து இந்தியாவுக்கு நேரடியான விமான சேவைகளையும், தலைமன்னாரில் இருந்து ராமேஸ்வரத்திற்கு கப்பல் சேவையையும் ஆரம்பிக்குமாறும், இலங்கைக்கு வரும் கபபல்கள் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வரும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என மூன்று யோசனைகளை வடக்கு மாகாண சபை நிறைவேற்றியுள்ளது.

இந்த துறைகள் இலங்கையின் மத்திய

24 ஆம் பக்கம் பார்க்க..

## பேரறிவாளனை விடுவியுங்கள்; முருகன், சாந்தனை தூக்கிலிடுங்கள்

### இப்படிக் கூறுகிறார் இளங்கோவன்

(சென்னை)

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு ரத்து செய்யப்பட்ட பேரறிவாளனை மட்டும் விடுவிப்பதில் நியாயம் இருக்கிறது. முருகன், சாந்தன் ஆகிய இருவருக்கும் தூக்குத் தண்டனை கொடுத்தால்தான் நீதி நிலைக்கும் என்று மூத்த காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் கூறியுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தூக்கை ஆயுள் தண்டனையாக்கியது உச்சநீதிமன்றம்.

இதைத் தொடர்ந்து ராஜிவ் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் இந்த மூவர் உட்பட 7 பேரையும் விடுதலை செய்ய தமிழக அரசு முடிவு செய்தது.

ஆனால் இதற்கு

24 ஆம் பக்கம் பார்க்க..

## ஆணின் சடலம் குளத்தில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

குளத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலத்தை கோப்பாய் பொலிஸார் நேற்று மாலை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

யாழ். கல்வியங்காடு சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடியிலுள்ள காலிங்கராஜன் குளத்திலிருந்தே மேற்படி சடலத்தை நேற்று மாலை 6.15 மணியளவில் கோப்பாய் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சடலம் ஆண் ஒருவருடையது எனவும் சடலமாக மீட்கப்பட்டவர் யார் என்பது இனங்காணப் படவில்லையெனவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

குளத்திலிருந்து துர்நாற்றம் வீசியதை

24 ஆம் பக்கம் பார்க்க..

# விரைவில் நாங்கள் விடுதலை பெறுவோம்

## ஒட்டு மொத்த தமிழினமும் எங்கள் பக்கம்



(சென்னை)

**ராஜிவ் காந்தி கொலை வழக்கில் நியாயமின்றி தண்டனை பெற்ற நாம் அனைவரும் விரைவில் விடுதலை பெறுவோம். ஒட்டு மொத்த தமிழினமும் எங்கள் பக்கம் உண்டு என சிறையில் வாடும் சாந்தன் உணர்ச்சிகரமாக பேட்டியளித்துள்ளார்.**

ராஜிவ் கொலை குற்றச் சாட்டில் சாந்தன், முருகன், பேரறிவாளன் மூவருக்கும் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை உச்ச நீதிமன்றம் ரத்து செய்ததை அடுத்து, தமிழக அரசும் அவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டிருக்கிறது. அதற்கு முன், சிறையில் இருக்கும் சாந்தனுக்கு அவருடைய வழக்கறிஞர் மூலமாக சில கேள்விகளைக் கொடுத்தனுப்பி எடுக்கப்பட்ட பேட்டியில்,

**கேள்வி :** ராஜிவ் காந்தி வழக்கு பற்றி?

**பதில் :** நியாயமான முறையில் நடந்திருக்க வேண்டிய ஒன்று. முக்கியமான யாரும் கைது செய்யப்படவில்லை என்று சிறப்புப் புலனாய்வுக் குழுவில் பணியாற்றிய இரண்டு பேரே

23 ஆம் பக்கம் பார்க்க..

## 79 நேற்றும் 2

(மன்னார்)

திருக்கேதீஸ்வரம் மாந்தை மனித புதைகுழியில் இருந்து இதுவரை 79 மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் 29 ஆவது தடவையாக புதை குழியில் அகழ்வுப் பணிகள் இடம் பெற்றபோது மேலும் 2 மனித எலும்புக் கூடுகள் உள்ளமை

23 ஆம் பக்கம் பார்க்க..

# ஜனாதிபதி பங்கேற்கும் வைபவத்தில் வெடிகுண்டு வைக்க போவதாக மிரட்டல்

## தமிழ் மாணவனை சிக்க வைக்க முயற்சி!



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ள உள்ள வைபவம் ஒன்றில் குண்டு வெடிக்கப்பட உள்ளதாக கிடைத்துள்ள மொட்டை கடிதம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்றைய தினம் புத்தளம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் திறப்பு விழாக்கள் நடைபெறவுள்ளன.

புத்தளம் சஹிரா கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மகிந்தோதய விஞ்ஞானக் கூடம் திறந்து வைக்கப்பட உள்ளது.

சஹிரா கல்லூரியில் நடைபெறும் இந்த திறப்பு விழா நிகழ்வில் குண்டு வைக்கப்பட உள்ளதாக புத்தளம் தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு நேற்றுமுன்தினம் கிடைத்த கடிதம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில்

23 ஆம் பக்கம் பார்க்க..



ராஜிவ் கொலை வழக்கில் தண்டனையை அனுபவித்து வரும் 7 தமிழர் விடுதலையை எதிர்க்கும் காங்கிரஸ் தலைவர் சோனியா, துணைத் தலைவர் ராகுல் காந்தி ஆகியோரின் கொடும்பாவிகள் நேற்று தமிழகம் புதுவையில் எரிக்கப்பட்டபோது...

உலகின் அதி சிறந்த LED தொலைக்காட்சிகள்




SMGUA32F4100 பண்டமாற்று முறை விலைக்கழிவு 6000/-
SMGUA28F4100 வட்டியற்ற கொடுப்பனவு 50,999/-
SMGUA46F4600 பண்டமாற்று முறை விலைக்கழிவு 43000/-
SMGUA22F5100 பண்டமாற்று முறை விலைக்கழிவு 3000/-
SMGUA41F6400 பண்டமாற்று முறை விலைக்கழிவு 22,000/-

50% வரை மின்சக்தி சேமிப்பு
பார்வைக்குப் புதுமைகள்

(C-6561)

SISIL WORLD
இன் கிளைகள் :
இல. 106, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 9291
இல. 17/3 கண்டி வீதி, கிளிநொச்சி. தொ.பே. 021 228 3755
இல. 125, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். தொ. பே. 021 224 2335

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்ததால் வடக்கில் நிம்மதியை உருவாக்கியுள்ளோம்

## நாமல் ராஜபக்ஷ பெருமிதப் பேச்சு

(கொழும்பு)

வடக்கில் சகல இடங்களிலும் குண்டுகள் வெடித்தால் அங்குள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் சகோதரர்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேறினர்.

அத்தோடு பயங்கரவாத அழிப்பினால் பலரது உயிர்கள் அழிக்கப்பட்டு அந்தயுகம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதனால்தான் தற்போது வடக்கு மண்ணில் கால்களை வைத்து கௌரவமாக வாழக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கொத்தொட்டுவ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் பொம்மைகளை போன்ற தலைவர்களே சில நாடுகளுக்கு தேவைப்படுகின்றனர். அந்த நாடுகள் கூறுவது போல் நடந்து கொண்டால் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்து விடும். ஆயினும் அவர்கள் நேர்மையாக பணியாற்றும் தலைவர்களை விரும்புவதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட கால ஆட்சி குறித்து பேசும் போது சந்திக்கு சந்தி இளைஞர், யுவதிகள் கொலை செய்யப்பட்டு கிடந்ததை மட்டுமே தாய், தந்தையர்களால் பேச முடியும்.

அன்று ஆட்சி செய்தவர்களும், புரட்சியில் ஈடுபட்டவர்களும் ஆயிரக்கணக்கில் இளைஞர், யுவதிகளை கொலை செய்தனர். நாட்டு மக்களை முட்டாள்கள் என நினைக்க வேண்டாம் என நாங்கள் எதிர்க் கட்சிகளிடம் கேட்டுக்கொள்கிறோம்.

பலர் நினைப்பது போல் இந்த தேர்தல் வெறுமனே சாதாரண தேர்தல் இல்லை. எமது தேர்தல் மேடை பேச்சாளர்கள் பலர் எதிர்க் கட்சிகளை பற்றி பேசுவது வேதனையாக உள்ளது.

எனினும் இந்த தேர்தலில் எதிர்க கட்சிகள் பற்றி பேசாமல் எம் முன் இருக்கும் சர்வதேச சவால் சம்பந்தமாக பேசுகிறோம் என்றார்.

மேலும் பேசிய அவர், ராஜபக்ஷ அரசாங்கத்தின் வெளியுறவுக் கொளகைகள் நாட்டின் நலனை அடிப்படையாகக் கொண்டது எனவும் முன்னைய ஆட்சியாளர்கள் சுயநலம் நோக்கி செயற்பட்டனர் எனவும் ராஜபக்ஷ ஆட்சியில் அபிவிருத்தி ஏற்பட்டு மக்கள் நன்மைகளைப் பெற்றனர் என நாமல் ராஜபக்ஷ பெருமையாகக் கூறினார். (செ-9)


விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815,0215671532


# யாழில் கடந்த வாரம் 210 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலத்தில் பல்வேறு குற்றச் செயல்களுடனும் தொடர்புடைய 210 பேரை கைதுசெய்துள்ளதாக யாழ் மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் றொகான் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

யாழில் ஊடகவியலாளர்களுடனான வாராந்த சந்திப்பு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குட்பட்ட 09 பொலிஸ் நிலையங்களிலும் 126 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி அதிக சக்தி வாய்ந்த வெடி மருந்து வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 2 பேரும் கத்தியால் குத்தி காயப்படுத்திய சம்பவத்துடன் 2 பேரும் குடிபோதையில் வாகனம் செலுத்திய 11 பேரும் அடித்து காயப்படுத்திய சம்பவத்துடன் 36 பேரும் மோசடிகள் சம்பந்தமாக 02 பேரும் சிறுகுற்றங்கள் சம்பந்தமாக 13 பேரும் கைதாகி நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் பிரதான பாதையை மண் கல்லு பறித்து தடை செய்தமை சம்பந்தமாக 2 பேரும் சந்தேகத்தின் பெயரில் 19 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் 21 பேரும் வாகன விபத்து சம்பந்தமாக 3 பேரும் சட்டவிரோதமாக வீட்டில் பிரவேசித்தது நட்டம் ஏற்படுத்திய 2 பேரும் திருட்டு 4 பேரும் பொது இடத்தில் அநாகரிகமாக நடந்து கொண்டமை தொடர்பாக 2 பேரும் துணிகள் இன்றி இருந்தமை காரணமாக 2 பேரும் பண மோசடி சம்பந்தமாக ஒருவருமாக மொத்தம் 126 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் சிறு குற்றங்கள் சம்பந்தமாக 9 பேர், பிடியாணை சம்பந்தமாக 8 பேர், சந்தேகத்தின் பேரில் 24 பேர், ஏனைய குற்றங்கள் சம்பந்தமாக 43 பேருமாக 84 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர் என்றார். (அ-9)


தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்

CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-6569)



உடனடித் தேவை

யாழ் நகரில் உள்ள காரியாலயத்திற்கு அனுபவம் வாய்ந்த STAFF'S தேவை

01. Account Assistant (Male/ Female) (Book Keeping + Computer) அறிவுள்ளவர்கள்.

02. Asst. Store Keeper (Auto Licence உள்ளவர் விரும்பத் தக்கது)

03. Store Helper's (Auto Licence உள்ளவர் விரும்பத் தக்கது)

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

0773478427

(5671)


# அரசியல் ரீதியில் முரண்பட்டாலும் மக்கள் பிரச்சினைகளில் ஒன்றாவோம்

## அங்கஜன் தலைமையிலான கூட்டத்தில் ஐங்கரநேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசுக்கும் இடையில் அரசியல் ரீதியில் பல பிரச்சினைகள் இருந்தாலும் மக்களின் பிரச்சினை என்று வரும்போது நாங்கள் அந்த பேதங்களை மறந்து செயற்படுகின்றோம் என வடக்கு மாகாண விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உருளைக் கிழக்கு உற்பத்தியாளர்கள் எதிர் நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கூட்டம் வட மாகாண சபை உறுப்பினரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் யாழ்.கிறீன் கிறாஸ் ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கிலுள்ள விவசாயிகள் தற்போது பல நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றனர். அதிலும் யாழ்.மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் நிலை மிகவும கவலைக் கிடமாகவுள்ளது. ஒரு பக்கம் வறட்சியால் பாதிக்கப்படுகின்றனர் மறுபக்கம் உற்பத்திகளுக்கு கிடைக்க வேண்டிய பணம் கிடைப்பதில் பல இடையூறுகளும் ஏற்பட்டுவருகின்றன.

இதேவேளை யாழ்.மாவட்டத்திலுள்ள உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களும் வெங்காய உற்பத்தியாளர்களும் தமது உற்பத்தி பொருட்களுக்கான உரிய விலை கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்னர்.

இந்நிலையில், உருளைக் கிழங்கு உற்பத்தியாளர்களின் நெருக்கடி நிலையை உணர்ந்து எமது மாகாண சபையின் உறுப்பினர் அங்கஜன் சதோச நிறுவனத்தின் ஊடாக உருளைக்கிழங்கை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

மத்திய அரசாங்கத்திற்கும் வடமாகாண அரசுக்கும் இடையில் அரசியல் ரீதியில் பல பிரச்சினைகள் இருந்தாலும் மக்களின் பிரச்சினை என்று வரும்போது நாங்கள அந்த பேதங்களை மறந்து செயற்படுகின்றோம். அவ்வாறே அங்கஜனுக்கும் அவரது அரசியல் நிலைப்பாட்டிற்கும் எங்களுக்குமிடையில் பல வேறுபாடுகள் உள்ளன. இருப்பினும் மக்களின் பிரச்சினை என்று வரும் போது அதனை மறந்து நாம் செயற்படுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சதோச நிறுவனத்தின் தலைவருடன் தொடர்பு கொண்டு இரண்டு நாட்களுக்குள் 400 மெற்றிக்தொன் உருளைக் கிழங்கை கொள்வனவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக உள்நாட்டு வர்த்தகப் பிரதி அமைச்சர் ஹேமல் குணசேக உருளைக் கிழங்கு உற்பத்தியாளர்களிடம் உறுதியளித்திருந்தார்.

இதுவரை 1500 மெற்றிக்தொன் உருளைக்கிழங்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இன்னும் 400 மெற்றிக்தொன் மட்டும் இருப்பில் உள்ளது. இதனை சந்தைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஹேமல் குணசேகரவிடம் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்திருநதனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கலந்துரையாடலில்கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகத்துறை பிரதி அமைச்சர் ஹேமல் குணசேகர,மாவட்ட உருளைக் கிழங்கு உற்பத்தியாளர்கள்மற்றும் வெங்காய உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (செ-6)

# அவுஸ்.பிரதமருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(சிட்னி)

அவுஸ்திரேலியா பிரதமர் டோனி அபட்டின் அகதிகளுக்கான புதிய அகதிக் கோட்பாட்டினை எதிர்த்து நேற்று ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

இதன்போது மானுஸ் அகதி முகாமை மூடுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

புகலிடம் கோரும் அகதிகளை நாட்டுக்கு திருப்பி அனுப்புவதை கண்டித்தும், தற்போது நடைமுறைபடுத்தியுள்ள T.H.V விசாவை தடை செய்து நிரந்தர வதிவிட விசா வழங்க கோரியுமே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தை அகதிகளுக்காக செயற்படும் அமைப்பான RAC என்னும் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. (செ-11)


NORTH LEAD Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing.
Leading Computer & Accessories Dealer For North

CCTV AND ALARM SYSTEM
உங்கள் காரியாலயங்கள், தொழிற்சாலைகள், மற்றும் வீடுகளின் பாதுகாப்பினை கண்காணிக்க, குறைந்த கட்டணத்தில் ஒருவருட உத்தரவாதத்துடன் ஒரே நாளில் பொருத்தி தருகின்றோம். (CCTV: 4 Channel, 8 Channel & 16 Channels) Mobile View, Online Settings & Installation FREE.. 4channel DVR, 500GB HDD, Cmos 800tvl Sony Night vision Camera, 19" Samsung LED Display, Optical Mouse & Accessories From : 34800/=

CCTV AND COMPUTER HARDWARE TECHNICIAN COURSES
புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன
*Introduction, CCTV Assembling and Installation, Mobile View, Online Settings, Trubleshooting.. Operating System, Hardware (Assembling, Windows installation & Trubleshooting) Software Installation, New Hardware device Introducation,* என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும். (8 Students in a Batch)

COMPUTER & ACCESSORIES SALES
Intel Dual Core 3rd Gene Processor : 8500
Intel 61, I-7 Support Mother Board : 7800
500 GB Toshiba Hard Disk : 6900
2GB DDR III Kingstan Ram : 3550
24x Samsung DVD Writer Box : 2750
Porch ATX High End Casing : 2650
19" Samsung, V.Sonic, HP, AOC LED: 12650
Dual Core Full Set: 47500, I-3 Full Set: 56000

COMPUTER REPAIRING & SERVICES
சகல விதமான கணனிகளும் (Laptop & Desktop) CPU, Monitor, LED TV, Tablet PC, Printer, UPS என்பன உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துத் தருகின்றோம்.

No: 328, Stanley Road, Jaffna.
(Near to Ariyakulam Junction)
Tel : 021-222 4459, 0774192275

Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel)
Tel : 021-206 0909, 0772533390

(C-6574)



உங்கள் கவலைகளை மனம் விட்டுப் பேச நம்பிக்கை யான ஒரு நண்பர் தேவையா?

மு.ப. 9.00-பி.ப. 1.00 வரை அழையுங்கள்
021 222 8117

கைகொடுக்கும் நண்பாகள்
(இரகசியம் பேணப்படும்)

(இ-5522)



நிரந்தர வேலைவாய்ப்பு

கொழும்பை அண்மித்த பகுதிகளில் Tea, Paint, Tin Plastic Bag. கோழி இறைச்சி, Battery, Brush போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல், பொதியிடல் போன்ற பிரிவுகளில் 18-48 வரையான ஆண், பெண் இருபாலாருக்கும் 18000/= - 25000/= சம்பளத்துடன் உணவு, தங்குமிட வசதியுடன் நிரந்தர வேலைவாய்ப்பு. (5631)

தொடர்புகளுக்கு :- 076 699 1993


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் அமைதியா இருக்கிறோம்

## பொதுபலசேனா

பொதுநலவாய நாடுகளின் மாநாடு காரணமாக கடந்த காலங்களில் அமைதியாக இருந்தாகவும் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடர் காரணமாக தற்பொழுது அமைதியாக இருப்பதாகவும் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நாட்டுக்கும், இனத்திற்கும், பௌத்த சாசனத்திற்கும் ஏற்படும் அநீதிக்கு முன்னால் தொடர்ந்தும் வாய்யை மூடிக் கொண்டிருக்க முடியாது எனவும் சிங்களவர்கள் அதளபாதாளத்தில் விழுந்து கிடந்தாலும் நாட்டின் தலைவர்கள் அது பற்றி கவனத்தில் எடுப்பதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மேல் மட்டத்தில் முறையிட்டதும் சில வீண்பேச்சு மன்னர்கள் எம்மை ஒதுக்கி வைக்க முயற்சித்தனர். நாட்டில் நடக்கும் அநீதிகளை பேசினால் ஜெனிவாவில் நாங்கள் தோற்று விடுவோம் என்கின்றனர்.

நாட்டில் இன்று நடப்பவைகள் இவர்களின் கண்களுக்கு புலப்படாது. வாக்கும், தேர்தலும் மட்டுமே இவர்களுக்கு தேவைப்படுகிறது.

இறுதியில் பொதுபல சேனாவின் செயற்பாடுகள காரணமாகவே ஜெனிவாவில் தோல்வி ஏற்பட்டது என கூற தொடங்கினர் என்றார்.(அ-9)

# மீனவர்களை விடுவிக்குமாறு கோரி இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம்

இலங்கை சிறையிலுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி இராமேஸ்வரத்தில் மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் இலங்கை-இந்திய மீனவர் பேச்சுவார்த்தையை துரிதப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் கடந்த 31 வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து இலங்கை கடற்படையால் சிறைபிடித்துச் செல்லப்பட்டு வருகின்றனர். சிறைபிடிக்கப்படுவதுடன் மீனவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி வலைகள் உள்ளிட்ட அவர்களின் வாழ்வாதாரமிக்க பொருட்களையும் இலங்கை படையினர் சேதப்படுத்தி விடுகின்றனர். இந்த அத்துமீறல்களை தடுக்கும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசுகள் இலங்கை அரசுடன் பேசி மீனவர்களின் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு ஆர்ப்பாட்டத்தின்போது கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. (அ-9)

# வாரம் ஒரு தகவல்

## ஒரு காதல் கதை

“அப்பா உங்களிடம் ஒரு கேள்வி”

“என்ன கேட்கப் போகிறாய்?”

“வாழ்க்கையில் 3 முக்கியமான விடயங்கள் என்ன தெரியுமா?”

“தெரியவில்லையே”

“எனக்குத் தெரியுமே. ஒரு புத்தகத்தில் படித்தேன்”

“என்ன படித்தாய்?”

“வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு விடயம்: யாரையாவது காதலிக்க வேண்டும்.”

“இரண்டாவது முக்கியமான விடயம்: யாராவது நம்மைக் காதலிக்க வேண்டும்.”

“மூன்றாவது முக்கியமான விடயம்: இவையிரண்டும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்.”

“இப்பதான் தெரியுது... நீ எப்படியான விடயங்களை அதிகமாகப் படிக்கிறாய் என்று”

“நான் என்னப்பா... இன்னமும் சின்னக் குழந்தையா? வயதாகி விட்டதல்லவா!”

“புரியுதடா... ஏற்பாடு பண்ணுறேன்”

“நேற்றுக்கூட அம்மா என்னை எங்கே என்று தேடிய போது அவன் எங்கே போயிருப்பான். கழுதை கெட்டால் குட்டிச்சுவர் என்று சொன்னீர்களாமே?”

“ஆமாம். சொன்னேன்”

“இனிமேல் அப்படியெல்லாம் சொல்லாதீங்ருீகப்பா”

“என்னடா சொல்கிறாய்?”

“அதற்கில்லையப்பா. நான் இப்பொழுது வாலிபன். இனிமேல் என்னை கழுதை என்று சொல்லுவது நல்லா இருக்காது என்று நினைக்கிறேன்”

“ஏன்?”

“எதிர் வீட்டுப் பெண்ணை அவளுடைய அப்பா ‘குட்டிச்சுவர்’ என்று சொல்லித் திட்டிக் கொண்டிருக்கிறார். அதனாலே... சொன்னேன்.”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# ராம்ஜெத்மலானி மருத்துவமனையில்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க சென்னை உயர்நீதிமன்றத்திலும் டில்லி உச்சநீதிமன்றத்திலும் வாதாடிய பிரபல வழக்கறிஞர் ராம்ஜெத்மலானி சென்னை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சென்னையில் நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கியிருந்த மூத்த வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி தவறி விழுந்ததால் மயக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவரது உடல்நிலை சீராக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனைபெற்றோரை விடுவிக்கக் கூடாது என்று நினைக்கிற முட்டாள்கள் தான் மத்தியில் இருக்கின்றனர் என்று மூத்த வழக்கறிஞர் ராம்ஜெத்மலானி சாடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ-9)

# மின்னல் தாக்கி ஒருவர் மரணம்

மின்னல் தாக்கியதில் மாணிக்கக்கற்கள், அகழும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானதுடன் 5 பேர் படுகாயமடைந்து பெல்மதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக காவத்தை மற்றும் இரத்தினபுரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து காவத்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காவத்தை பொலிஸ் பிரிவிலுள்ள பெல்மதுளை குட்டாம்பிட்டிய பகுதியில் சுமார் 20 அடி குழியில் மாணிக்கக் கற்கள் அகழும் பணியிலீடுபட்டிருந்தவர்களே மின்னல் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். (அ-9)

# இராசி பலன்

23.02.2014

(மாசி 11, ஞாயிற்றுக்கிழமை )

சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு

நவமி பின்னிரவு 4.08 மணிவரை

அனுசம் காலை 6.49 மணிவரை

கேட்டை பின்னிரவு 5.34 மணிவரை

இராகுகாலம் 5.00-6.30 மணிவரை

சுபநேரம் 9.30-11.00 மணிவரை

**மேடம்** பயணங்களால் தேகநலன்கள் பாதிக்கப்படலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**இடபம்** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், கௌரவமான நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், பகைவர்கள் விலகுவர்.

**கடகம்** பூர்வ புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் சில திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் வளர்ச்சிபற்றிச் சிந்திப்பீர்கள்.

**சிங்கம்** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், கல்வி நலன்கருதி புதிய முடிவுகள் எடுப்பீர்கள், முயற்சிகளில் அதிக பிரயாசை எடுக்க வேண்டிய நாள்.

**கன்னி** குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களின் ஒத்தாசைகள் கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்** விவாதங்கள் இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும், உறவினர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், போசன நன்மையுண்டு, உற்சாகமான நாள்.

**விருச்சிகம்** மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றி மறையும், பெரியோரின் நன்மதிப்பைப் பெறுவீர்கள், முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், போசன நன்மையுண்டு.

**தனுசு** எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம், அரசு வழியில் ஆதரவுண்டு, பயணங்கள் கைகூடும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மகரம்** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும்.

**கும்பம்** எதிலும் உற்சாகமாக செயற்படுவீர்கள், உங்களின் செல்வாக்கு மேலோங்கும், ஆரோக்கியமான நாள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன நன்மையுண்டு.

**மீனம்** தொழில் சம்பந்தமாக முக்கியமான தீர்மானங்கள் எடுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 30 | 60 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 100 |
| தக்காளி | 20 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 30 |
| கோவா | 30 | 50 | 40 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 25 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 30 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 90 | 60 |
| பெரிய வெங்காயம் | 50-80 | 70 | 60 |
| பாகற்காய் | 60 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 40 | 90 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 50 |
| பயற்றங்காய் | 60 | 150 | 60 |
| லீக்ஸ் | 40 | 90 | 80 |
| பீற்றூட் | 30 | 70 | 40 |
| கறிமிளகாய் | 60 | 150 | 80 |
| முருங்கைக்காய் | 300 | -- | 400 |
| போஞ்சி | 30 | 80 | 50 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 10 |
| தேசிக்காய் | 15-40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 70 | 70 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிப்பெயர்ப் பலகை தமிழில்; கடிதம் எழுதினார் சிவஞானம்


(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் நிர்வாகக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகளின் வாகனங்களில் அவர்களது பதவி பெயர்ப்பலகை தமிழ் மொழியில் பொருத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென சகலருக்கும் பணிப்புரை வழங்க வேண்டுமென வடக்கு மாகாண அவை தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கடிதம் மூலம் வட மாகாண பிரதம செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள அதிகாரிகள் தமது வாகனங்களில் பெயர்ப்பலகைகளை தமிழில் எழுதாதது பற்றி தமது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து இது தொடர்பான அறிவுறுத்தலை பிரதம செயலாளருக்கு கடிதம் மூலம் அவைத் தலைவர் அறிவித்துள்ளார்.

அத்தோடு இந்தக்கடிதத்தின் பிரதிகள் யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு,வவுனியா, கிளிநொச்சி,மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அவைத்தலைவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண சபையில் மேற்படி விடயத்தை வலியுறுத்தி தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)




# நிபுணர்குழுவின் அறிக்கை எமக்கு விரோதமானதாக இருக்கக்கூடாது

## விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிப்பு

இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர்கொண்டுவருவது தொடர்பாக வடக்கு மாகாணசபையினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவின் அறிக்கை எமது நிலைப்பாட்டுக்கு விரோதமாக இருக்குமே யானால் எங்களுடைய வாழ்வுக்காக உச்சக்கட்ட, சாத்வீகவழியில் உறுதியான போராடடத்தில் ஈடுபட்டுபோவதாக கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் கொண்டுவருதல் தொடர்பில் தமது நிலைப்பாட்டை அறிவிக்கும் கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பிரதிநிதிகளின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தற்போதைய நிலையில், வறட்சி காரணமாக எங்களுடைய அரிசியை நாமே உண்ண முடியாத நிலை காணப்படுகின்றது.

சராசரி ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை வறட்சி வந்தவண்ணமே உள்ளது. எனவே, அரசி தட்டுப்பாடு என்பது தொடரும் அபாய நிலையே எதிர்கொள்ளப்பட்டு வருகின்றது. விவசாய சமூகம் சார்ந்து இதனை சிந்திக்காது எதேச்சதிகாரத்தனமாக யோசிப்பதை சம்பந்தப்பட்டவர்கள் கைவிடவேண்டும்.

இரணைமடு குடிநீர்த் திட்டம் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் மிகத் தெளிவாக தெரிவித்திருந்தோம். அவர் எம்மிடம் கருத்துத் தெரிவிக்கும் போது, இரணைமடு விடயம் தொடர்பில் முடிவெடுப்பதற்காக நிபுணர்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், நிபுணர்குழுவின் அறிக்கையின் அடிப்படையிலேயே நீர் விவகாரம் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

குறித்த நிபுணர்குழு தற்போது அறிக்கைகளை இறுதி செய்திருப்பதாக அறிகிறோம். குறித்த அறிக்கையின் பிரதியை நாங்கள் பார்வையிடுவதற்கு கோரியிருக்கின்றோம்.

இதுவரையில் அது எங்களிடம் கையளிக்கப்படவில்லை. இரணைமடு தொடர்பிலான ஆசிய அபிவிருத்தி வங்கியுடனான ஒப்பந் தமும் கிளிநொச்சி விவசாயிகளாகிய எம் மிடம் கலந்தாலோசிக்கப்படாமலேயே கைச் சாத்திடப்பட்டுள்ளதை இந்த இடத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

தற்போது இறுதி செய்யப்பட்டுள்ள நிபுணர் குழுவின் அறிக்கை எமது நிலைப்பாட்டுக்கு விரோதமாக இருந்தால், எங்களுடைய வாழ்வுக்காக உச்சக்கட்ட, சாத்வீகமான, உறுதியான போராட்டத்தில் குதிப்போம் என்றனர்.

இந்த சந்திப்பில் இரணைமடு விவசாய அமைப்புக்களின் சம்மேளனச் செயலாளர் எம். சிவமோகன் உள்ளிட்ட விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கு கொண்டிருந்தனர். (அ-6)






வடமாகாண ஆளுநர் செயலகத்தினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட 16 ஆவது சர்வதேச நிழற்படக் கண்காட்சி யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுகிறது

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறையினால் நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப் பிரதேச வைத்தியசாலைக்காக 4 வைத்தியர்கள் கடமையில் அமர்த்தப்பட்டனர்.

ஆயினும் அதில் ஒரு வைத்தியரை தொண்டைமானாறு ஆரம்ப சுகாதார வைத்தியசாலைக்காக மாற்றிவிட்டனர்.

இந் நிலையில் வைத்தியசாலையிலுள்ள மூன்று வைத்தியர்களில் ஒருவர் இரவு கடமையாற்றி வருவதோடு மற்றவர் கிளினிக் நோயாளர்களையும் மற்றொரு வைத்தியர் வெளி நோயாளர்களையும் கவனித்து வருகின்றனர்.

இவ்வாறான முறையில் கடமையில் ஈடுபட்டுவரும் வைத்தியர்களுக்கு கிளினிக் நோயாளர்கள் 250 இற்கு மேற்பட்டோரும் வெளி நோயாளர்கள் 350 இற்கு மேற்பட்டோரும் வருகை தருவதனால் விடுதிகளிலுள்ள நோயாளர்களை கவனிப்பதற்கு வைத்தியர்கள் தேவையாகவுள்ளது.

இது தொடர்பில் பல தடவைகள் கோரிக்கை விடப்பட்டபோதிலும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

எனவே, இன்னுமொரு வைத்தியரை நியமிக்குமாறு மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-24)

# ஆராதனை விழா

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஆராதனை விழா இன்று காலை 9.30 மணிக்கு மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் காலை9.30 மணிக்கு சுவாமிகளின் பஞ்சரத்தின கீர்த்தனைகள் இடம் பெறவுள்ளன.

தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு மன்ற மாணவர்களின் நிகழ்வுகள், சிறப்பு இசையரங்கம் என்பன இடம்பெறவுள்ளதாக மன்ற நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)

# வித்தகபுரம் கிராமத்தில் சட்டவிரோத மண் அகழ்வு

தெல்லிப்பழை வித்தகபுரம் கிராம சேவையாளர் பகுதியில் சட்டவிரோத செம்மண் அகழ்வு இடம்பெற்று வருவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய பிரதேசங்களிலுள்ளவர்கள் வித்தகபுரம் பகுதியிலுள்ள அரச காணிகளிலும் தனியார் காணிகளிலும் செம்மண்ணை அகழ்ந்து உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்கின்றனர்.

இதனால் அப்பகுதி குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் மழைகாலங்களில் நீர் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக அன்றாடம் செம்மண் அகழ்வு மக்கள் நடமாட்டம் இல்லாத வேளைகளிலும் இரவு நேரங்களிலுமே இடம்பெற்று வருகின்றன.

இந் நடவடிக்கையினால் காணிகள் சேதமடைவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, வலி.வடக்கு பிரதேச சபையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-28)

# 32 ஆவது ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் (றூட்) 32 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் இன்று காலை 8.30 மணிக்கு கலட்டி, 16/2, சீனியர் ஒழுங்கையிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாவட்ட செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் கி.கருணாகரன், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என செயலாளர் இ.ஓங்காரரூபன் அறிவித்துள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகளை அமுல்படுத்தாமை குறித்து ஜெனீவாவில் அதிக கேள்வி எழுப்பப்படும்

## ஆங்கில செய்தித்தாள் சுட்டிக்காட்டு

**எதிர்வரும் ஜெனீவா மனித உரிமைகள் அமர்வின் போது இலங்கை மீது போர்க்குற்றச்சாட்டுக்களை விட போருக்கு பின்னர் நல்லிணக்கம் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க குழுவின் பரிந்துரைகள் தொடர்பிலேயே அழுத்தங்கள் காத்திருக் கின்றன என கொழும்பு ஆங்கில செய்தித்தாள் ஒன்று குறிப்பிட்டுள்ளது.**

இலங்கை அரசாங்கம் அரசியல் ரீதியாக உள்நாட்டில் செயற்படுகிறதே தவிர, சர்வ தேசத்தில் அது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளது.

குறிப்பாக கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு பொறுப்பாக உள்ள ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தமது குழு தொடர்பில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார்.

எனினும் தேசிய கீதத்தை தமிழ் மாண வர் தமது சொந்த தாய் தமிழ் மொழியில் இசைக்க விடாமை, பயங்கரவாத தடை சட்டம் இன்னும் அமுலில் உள்ளமை, அதன் கீழ் பல நூற்றுக்கணக்கானோர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை

தனியார் காணிகள் இன்னமும் வலிகா மம் வடக்கு உட்பட்ட இடங்களில் இராணு வத்தினரால் திருப்பி வழங்கப்படாமை,

18ஆவது அரசியல் அமைப்பின் விடய ங்கள் ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட் டுள்ளமை,

திருகோணமலை மூதூரில் 17 தன்னா ர்வ தொண்டர்களின் கொலைகள் தொடர் பில் உரிய விசாரணைகள் நடத்தப்படாமை,

திருகோணமலையில் ஐந்து மாண வர்கள் கொலையில் உரிய விசாரணை செய்யப்படாமை,

பொலிஸாருக்கு பதிலாக இராணுவத்தி னரை போராட்டங்களின் போது ஈடுபடுத் துவது.குறிப்பாக வெலிவேரியா பிரச்சினை போன்ற பலகாரணங்கள் காணப்படுகின் றன.

எனவே, இது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காமல் உள்நாட்டில் அரசியலை மையமாகக்கொண்டு மாத்திரம் பிரசாரங்களை மேற்கொள்வது காத்திரமான தாக இருக்காது.

இந்தநிலையில் எதிர்வரும் 25ஆவது மனித உரிமை பேரவையிலும் இந்த விட யங்களே இலங்கைக்கு எதிராக முன்வை க்கப்படவுள்ளன.

எனவே, குறித்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் இருக்கும் வரை இலங்கை அரசாங்கத்தின் மீது சர்வதேசத்தி னால் தொடர்ந்தும் அழுத்தங்கள் இருக்கும் என்பதை நிராகரிக்கமுடியாது என்று ஆங் கில செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது. (அ-9)

# மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றமில்லை

## ஆசிய சட்ட வளங்கள் நிலையம் குற்றச்சாட்டு

இலங்கையில் மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு அதிலிருந்து எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டு வருகின்றன. எனினும் இந்த புதை குழிகளை தோண்டுவதில் உரிய நடைமுறைகள் கைக்கொள்ளப்பட வில்லை என ஆசிய சட்ட வளங் கள் நிலையம் குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும் அவை தொடர்பில் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து அரசாங்கம் இன் னும் முன்னேற்றம் காணவில்லை என்றும அவறறை உதாசீனப்படுத்தி வருவதாகவும் அந்நிறுவனம் சுட்டிக்காட்டியுளளது.

இது தொடர்பில் அந்த நிலையம் ஐக்கிய நாடுகளின் மனிதவுரி மைகள் ஆணைக்குழு வுக்கு நேற்று அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து ள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

இந்த புதைகுழிகளை தோண்டு வதில் உரிய நடைமுறைகள் கைக் கொள்ளப்பட வில்லை. அத்துடன் தோண்டப்படும் மனித புதைகுழி களில் இருந்து வெளிப்படும் எலும்பு க்கூடுகளுக்கு உரியவர்கள் யார் என்ற விடயம் குறித்து உரிய விசார ணைகள் முன்னெடுக்கப்படவில்லை.

மாத்தளையில் மாத்திரம் 150 பேரின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அது கொலை செய்யப்பட்டவ ர்கள் புதைக்கப்பட்ட குழி என்று நீதிமன்ற சட்டவைத்திய விசார ணைகளிலும் உறுதிப்படுத்தப்பட்டு ள்ளது.

எனவே, அது ஜே. வி .பி.கிளர்ச்சிக்காலத் தில் புதைக்கப்பட்டவை என்று எடுத்துக் கொள்ளமுடியும்.

எனினும் அது தொடர்பில் உரிய விசார ணைகள் முன்னெடு க்கப்பட வில்லை.

இந்த புதைகுழி தோண்டப்பட்டு மனித உடல்கள் புதைக்கப்பட்டமை குறித்த குற்றம் சுமத்தப்பட்டுள்ள பல அதிகாரிகள் இன்று இலங்கை அரசாங்கத்தின் உயர் பதவிகளில் உள்ளனர்.

இந்த மனித எச்சங்கள் தொடர் பில் இரசாயன பகுப்பாய்வுகளுக் காக சட்டத் தரணிகளின் எதிர்ப்புக ளுக்கு மத்தியிலும் சீனாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அதேபோல திருக்கேதீஸ்வர புதைகுழி விடயமும் இன்னும் ஆரம்ப விசாரணைகளி லேயே உள்ளது.

அத்துடன் இந்த புதைகுழி தோண்டப்படுவ தற்கு புல்டோசர் போன்ற வாகனங்கள் பயன் படுத்த ப்படுவது சரியான முறையல்ல.

இதன் காரணமாக மனித எச்சங்களின் உண்மையான தன்மை கள், அடையாளங் கள் மறைக்க ப்படவாய்ப்புள்ளன.

எனவேபுதைகுழிகளைதோண்டு வதற்கான உரிய சர்வதேச நடை முறைகள் கைக் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்,

இதேவேளை பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட வர்கள் தொடர்பான ஐக்கிய நாடுக ளின் அமைப்பு இந்த விடய த்தில் தலையிட்டு விசாரணைகளை நடத்த வேண்டும்.

இல்லையேல் உண்மைகள் மறைக் கப்படும் என்று ஆசிய சட்ட வளங்கள் நிலையம் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. (அ-9)

# நோர்வேயின் கோரிக்கை அரசாங்கத்தால் நிராகரிப்பு

வடக்கில் உள்ள படையினரைக் குறைக் குமாறு நோர்வே அரசாங்கம் விடுத்த கோரி க்கையை இலங்கை அரசாங்கம் நிராக ரித்துள்ளது.

வடக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ள 12 ஆயி ரம் துருப்பினரின் எண்ணிக்கையை குறை க்குமாறு, இலங்கைக்கான நோர்வே தூது வர் க்ரேட் லோடன் கோரியுள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத் திடப்பட்டு 12 ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலையில் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். எனினும், தேசிய பாதுகாப்பு விவகாரத்தில் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு நோர்வேயும் ஆதரவளிக்கும் என அரசாங்கத்திற்கு தகவல்கள் கிட்டியுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-9)

# ஆஸி.போர்க்கப்பல் கொழும்புக்கு வந்தது

அவுஸ்திரேலியாவின் கடற் படை போர்க் கப்பலான 'மெல்போன்' நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

நல்லெண்ண விஜயத்தை மேற்கொ ண்டே இந்த கப்பல் விஜயம் அமைந்துள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கப்பலு க்கு இலங்கையின் கடற்படை யினர் விசேட வரவேற்பை நடத்தியுள்ளனர்.

கப்பல் இலங்கையில் தரித்திருக்கும் காலத்தில் இரண்டு தரப்பு கடற்படையி னருக்கும் இடையில் விசேட கலந்துரையா டல்கள் இடம்பெறவுள்ளன.

இந்தக்கப்பல் 138 மீற்றர் நீளத்தைக் கொண்டது. இதில் 26 அலுவலர்களும் 195 கடற்படையினரும் பயணிக்கின்றனர். (அ-9)

# சங்காபிஷேகம்

(கிளிநொச்சி)

பரந்தன் கோரக்கன்கட்டு துர்க்காதேவி ஆலயத்தின் மண்டலாபிஷேக பூர்த்தியை முன்னிட்டு சங்காபிஷேக நிகழ்வு இன்று காலை இடம்பெறவுள்ளது.

இதன்படி காலை 7.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி தொடர்ந்து 10 மணிக்கு அபி ஷேகம் விசேட மண்டல பூர்த்தி பூசைகள் என் பன இடம்பெறவுள்ளன. (அ-9)

# தவல பீஷண நாடகம்

தர்மசிறி பண்டாரநாயக்காவின் நெறியா ள் கையில் உருவான தவல பீஷண என்ற நாடகம் இன்று ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

பத்து விருதுகளை வென்ற மேற்படி நாட கத்திற்கான அனுமதி இலவசமாகும். (அ-9)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா: 4 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: B.Com, MBA, PHD (Following) / விரிவுரையாளர்<br>தொ.இ: B/2840 | பிறப்பு: 1982 இந்து, கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 25.5 செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Computer Software Engineering / Computer Programmer (சொந்தம்)<br>தொ.இ: G/2854 |
| பிறப்பு: 1967 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: 18.5<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, Dip. in Accounting / மேற்பார்வையாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: B/2841 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 12 சூரி., செவ் 6 இல்<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>தொ.இ: G/2859 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 45.5 செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L / சொந்த வியாபாரம்<br>தொ.இ: B/2843 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: 14.5 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L, Dip. in IT, Dip. in English / Administrative Assistant<br>தொ.இ: G/2862 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 52 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: AAT / கணக்காளர் (UK)<br>தொ.இ: B/2845 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 16.5 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: B.Com / அரச உத்தியோகம்<br>தொ.இ: G/2863 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பௌத்தமயமாக்கும் அரசின் கொள்கைக்கு எதிராக நள்ளிரவில்கூட போராடவேண்டியுள்ளது

## அமெரிக்க அதிகாரியிடம் சிவமோகன் எடுத்துரைப்பு

(பூந்தோட்டம் )

இன்று இரவு எங்களிடம் உள்ள நிலம் நாளைக்காலை நம்மிடம் இருக்காது என வட மாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி மிச்சல் ஏர்வினுக்கும் வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகனுக்கும் இடையில் கடந்த வியாழக்கிழமை வுனியாவில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் ஏர்வினிடம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பரம்பரை வழித்தோன்றலாக தமக்கு உரித்துடைய நிலம் இன்று தம்மிடம் இருக்குமா? என்ற பயத்தோடுதான் ஒவ்வொரு பொழுதும் தமிழ் மக்களுக்கு புலருகின்றது.

காலை நீட்டி படுத்திருக்கும் நாம் சற்று கண்ணயர்ந்து காலை மடக்கி விட்டோம் என்றால் போதும் மீண்டும் காலை நீட்டுவதற்கு அந்நிலம் நம்மிடம் இருக்காது பறி போயிருக்கும். அத்தகைய வேகத்தில் அரசின் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தமிழர் தாயக பிரதேசங்களில் தீவிரம் பெற்றுள்ளன.

அதி தீவிரமாக முனைப்பு பெற்றுள்ள தமிழர் பூர்வீக பண்பாட்டு பாரம்பரிய நிலங்களை பௌத்தமயமாக்கும் அரசின் கொள்கைக்கு எதிராக நள்ளிரவில்கூட போராட வேண்டிய நிலைக்கு தமிழர்கள் நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். நிலம் எங்கள் வாழ்வுரிமை.

எனவே, நிலத்துக்கான போராட்டம் என்பது எங்கள் வாழ்வுரிமைக்கான போராட்டமாகும். இந்த போராட்டத்தின் நியாயப்பாடுகளை விளங்கிக்கொண்டு சர்வதேச நாடுகள் எமக்கான அங்கீகாரத்தை தர வேண்டும் என்பதே ஒவ்வொரு தமிழ் குடிமகனதும் குடிமக்களதும் எதிர்பார்ப்பாகும்.

எங்களுடைய எதிர்பார்ப்புகள் ஈடேறும் வரை எமக்கான அங்கீகாரத்தை பெறும்வரை தமிழ் இனத்தினுடைய இருப்புக்கான போராட்டத்தை நாங்கள் நடத்துவது பயங்கரவாத செயலாகாது.

உங்கள் மண்ணில் நீங்கள் வாழ, ஆள முடியாத ஒரு சூழலில் அது தொடர்பில் உங்களுடைய எண்ணங்கள், எதிர்வினையாற்றல்கள் எப்படியிருக்குமோ அதே உணர்வுடன் கூடியதே எங்கள் போராட்டமும். அதனுடன் ஒத்த காரிய கருமமாற்றல்களும் ஆகும்.

நிலம் எனும் கருவி இல்லாமல் இந்த உலகில் எந்த ஜீவராசிகளும் உயிர் வாழமுடியாது எனும் போது இதற்கு விதிவிலக்காக எப்படி தமிழ் மக்கள் மட்டும் உயிர் வாழமுடியும்.

பொழுது விடிந்ததும் படைபட்டாளத்துடன் நாங்கள் தென்னிலைங்கையில் நிலம் பிடிக்க ஒருநாளும் புறப்பட்டு போனதில்லை.


நம் நிலத்தில் நாம் வாழ்வதற்காக எங்கள் வீரர்கள் சிந்திய இரத்தம், இன்று நாங்கள் சிந்திக்கொண்டிருக்கின்ற கண்ணீர் எங்கள் உணர்வுகளுக்கு எல்லாம் சர்வதேச சமூகம் மதிப்பளிக்கும் என்று நாங்கள் பெரிதும் நம்புகின்றோம்.

இச்சந்திப்பின் போது அரச படைகளால் கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் , கருநாட்டுக் கேணி ஆகிய பகுதிகளில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பற்றிய தகவல் திரட்டையும் சிவமோகன் ஏர்வினிடம் கையளித்தார்.

ஒலுமடு பிரதேசசபைக்கு உரித்துடைய ஆயுர்வேத வைத்திய நிலையம் ,ஆரம்ப சுகாதார நிலையம் என்பன அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு நகரப்ப குதியில் சிவில் சமூக செயற்பாடுகளுக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ள இராணுவ படைத் தளம் வாவட்டி, பண்டார வயல், கேப்பாப்பிலவு ஆகிய பகுதிகளில் அரச படைகளால் அபகரிக்கப்பட்டுள்ள தமிழ் விவசாயிகளின் காணிகள், மல்லாவியில் தனிநபர் காணியில் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையம், வவுனியாவில் இடம்பெற்றுள்ள கலாவோபஸ் வெள சிங்கள குடியேற்றம், ஒதியமலையில் அரசால் திட்டமிட்டு தனியார் நிறுவனங்களுக்கு தாரைவார்க்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு உரித்துடைய டொலர்பார்ம், கென்பார்ம் தொடர்பிலும் அவர் முறையிட்டுள்ளார். (அ-9-266)





கிளிநொச்சி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் பாண்ட் அணியின் ஆற்றுகை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாண்ட் அணியினரின் ஆற்றுகை நிகழ்வு இடம்பெறுவதையும் அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உள்ளிட்ட விருந்தினர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# சுயதொழில் கடனுக்கான திறன் விருத்தி செயலமர்வு

(கிளிநொச்சி)

புனர்வாழ்வு பெற்று விடுதலையாகிய கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தோருக்கான சுயதொழில் கடனுக்கான திறன் விருத்தி செயலமர்வு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் நடத்தப்படவுள்ளது.

இதற்காக அமைச்சின் உயர் அதிகாரிகள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளனர்.

சுயதொழிலுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்களிலிருந்து ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் தலா 100 பேர் வீதம் இதற்கென தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் பெயர், விபரங்களை பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமென மாவட்ட புனர்வாழ்வு உத்தியோகத்தர் மு.கயோதரன் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப்பிரிவில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை மாவட்டச் செயலகத்திலும், பூநகரி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தோருக்கு மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையும் இந்த திறன்விருத்திச் செயலமர்வு நடைபெறவுள்ளது. (அ-9-254)

# வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காசோலை வழங்கல் நிகழ்வு நாளை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புனரமைப்புச் செய்யவேண்டிய நிலையிலுள்ள இந்து மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் சொத்துக்களுக்கும் இறப்பு,காயம் என்பனவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்குமான காசோலை வழங்கும் நிகழ்வு நாளை நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைப்பின் அனுசரணையுடன் புனர் வாழ்வு அதிகார சபையின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இந்நிகழ்வு இடம் பெறவுள்ளதுடன், இதில் புனர்வாழ்வு அமைச்சரும் பிரதி அமைச்சரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதனடிப்படையில் இந்து ஆலயங்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நாளை காலை 8.30 மணிக்கு முள்ளியவளை மேற்கு கல்யாண வேலவர் ஆலயத்திலும் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கான காசோலைகள் புனித யூதாததேயு ஆலயத்தில் காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அத்தோடு, பாதிக்கப்பட்டவர்களிற்கான நஷ்டஈட்டுக் காசோலை வழங்குதல் அன்றைய தினம் பிற்பகல் ஒரு மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, ஏற்கனவே அறிவித்தல் கிடைக்கப் பெற்றவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை, கிடைக்கப் பெற்ற கடிதம் என்பனவற்றுடன் தவறாது சமுகம் அளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9-267)

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பொதுக் கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவு பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பகிரங்க சேவை நம்பிக்கை நிதிய தலைவர் பொன். தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பூநகரி பிரதேச செயலர் சி.சத்தியசீலனும் சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலக கணக்காளர் பி.பிரேமச்சந்திரனும் பூநகரி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வி.சொக்கநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். இவ் வருடத்திற்கான நிர்வாகத் தெரிவு இடம் பெறவுள்ளதால் சகல அங்கத்தவர்களையும் புதிதாக இணையவுள்ள ஓய்வூதியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-9-84)

# டெனிஸ்வரனின் பதாகை மீது ஓயில் வீச்சு

(பூந்தோட்டம் )

மன்னார் இரணை இலுப்பைக் குளத்தில் அமைந்திருந்த வட மாகாண அமைச்சர் பா. டெனிஸ்வரனின் பதாகை மீது இனந்தெரியாதோரால் ஓயில் வீசப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் அப்பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

வட மாகாணசபை முடிவடைந்த பின்னர் அமைச்சர் எமது கிராமத்திற்கு வருகை தரும் போது இக் பதாகை அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு இனந்தெரியாத சிலர் கழிவு ஓயிலை வீசி பதாகையை சேதப்படுத்தியுள்ளதுடன் மீண்டும் றசூத் வருவான் எனவும் எழுதப்பட்டுள்ளதுடன் அவதூறாகவும் எழுதப்பட்டுள்ளது. எனினும் அப்பகுதி மக்கள் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடுகளை இதுவரை மேற்கொள்ளவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-9-266)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சீர்மியர் (உளவள ஆலோசகர்) பயிற்சி நெறிக்கான

## விண்ணப்பம் கோரல்

## (Diploma in counseling)

✷ மேற்படி பயிற்சி 8 மாத கால விரிவுரைகளையும் 4 மாதகால செய்முறைகளையும் கொண்டது.

✷ பயிற்சி நடைபெறும் இடம்: சிவபூமி ஞான ஆச்சிரமம், குப்பிளான்.

✷ பயிற்சி: திங்கள், புதன், வெள்ளி (காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை)

✷ விண்ணப்பதாரி க.பொ.த. (உ/த) பரீட்சையில் குறைந்தது 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

✷ 20 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

✷ பயிற்சி முடிவில் நடைபெறும் எழுத்துப் பரீட்சை வாய்மொழிப் பரீட்சை, விடய முன்வைப்பு, பரீட்சை ஆகியவற்றில் சித்தி அடைவதோடு பத்துச் சீர்மிய நபர்களுடன் செய்த உரையாடல் ஒப்படை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

✷ விண்ணப்பதாரிகள் அனைவரும் நேர்முகப் பரீட்சையிம்னூடாக தெரிவு செய்யப்படுவர்.

✷ பயிற்சி கட்டணமாக ரூபா 11, 000

✷ முழுப்பெயர், பிறந்த திகதி, விலாசம், தொலைபேசி இலக்கம் கல்வித் தகைமை, பிற தகைமைகள் ஆகிய விபரங்களோடு விண்ணப்பங்களை சிவபூமி, **கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்** என்ற முகவரிக்கு 10.03.2014 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

✷ மேலதிக விபரங்களுக்கு 0776909718 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

**சிவபூமி,**

**கோண்டாவில் கிழக்கு.**

(5658)

### காணி விற்பனைக்கு

தலையாழியில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0766834703,

(5652)

### வீடு வாடகைக்கு

மானிப்பாய் கார்கில்ஸ் பூட் சிற்றியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் வசதியான 4 அறைகள் கொண்ட வீடு நற்சூழலில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0779001523

(ஞாயிறு பிற்பகல் 2 மணி-6 மணிவரை)

(5669)

### காணி விற்பனைக்கு

புலோலி கிழக்கு பல்லப்பை பருத்தித்துறையில் 10 பரப்பளவு காணி (வெறுங்காணி) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

0774200327,

0777044923

(சி/6570)


T.P.:- 0212223378
Fax:-0212227829
Email: valampurii@yahoo.com


### ஒப்பந்தகாரர் தேவை

யாழ்ப்பாணத்தில் கொங்கிறீட் தூண் விநியோகம், முட்கம்பிவேலி நிர்மாணம்/ திருத்த வேலை, கட்டட திருத்தவேலை என்பவற்றில் அனுபவமுள்ள ஒப்பந்த காரர் தேவை.

தொடர்பு:- 545, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு-10. 0779001523

(5669)

### தேவை

கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவராயின் பல வெற்றிடம். (அம்பாந்தோட்டை/ கொழும்பு/ தெஹிவளை/ கம்பஹா/ கண்டி/ நுவரெலியா/ அநுராதபுரம்/ யாழ்./ மாங்குளம்) மேசன்/ தச்சு/ பெயின்டர்/ வெல்டர்/ கம்பி/ பாஸ்/ செடலின்பாஸ் (1200/- 1600/-) கையுதவியாளர் (900/- 1100/-) உணவு+ தங்குமிடம் வழங்கப்படும். விரைவாக ஆட்கள் தேவை.

தொடர்பு:- 0775561883

(சி/6567)

### வேலை வாய்ப்பு

சம்பளம் 18000/= -38000/= (தொழில் அடிப்படையில்) ஜேம்/ கோடியல்/ பிஸ்கட்/ சோயா/ காமெண்ட் மற்றும் பல தொழிற்சாலைக்கு 18-50 வயது ஆண்- பெண் தேவை. (உற்பத்தி/ லேபல்/ பொதியிடல்/ களஞ்சியப் பிரிவு) உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். நண்பர்கள்+ குழுக்களாக ஒரே தொழிற்சாலைகளில் (வடக்கு/ கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களுக்கு விசேடம்) வருகை அன்றே தொழிலுக்கு சேரலாம்.

தொடர்பு:- 0778430179

(சி/6568)

1717 FOLLOW US www.mobitel.lk




மொபிடெல் இடமிருந்து மிகவும் சிறந்த IDD கட்டணங்கள்

| ரீலோட் / ரீசார்ஜ் பெறுமதி | கிடைக்கப் பெறும் IDD அழைப்புகளின் பெறுமதி | கிடைக்கப் பெறும் சர்வதேச SMS பெறுமதி | கிடைக்கப் பெறும் மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| ரூ. 189 | ரூ. 300 | ரூ. 100 | ரூ. 400 |
| ரூ. 589 | ரூ. 900 | ரூ. 400 | ரூ. 1,300 |

கட்டணங்கள் அரச வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உட்பட்டவை. *நிபந்தனைகளுக்குட்பட்டது.

Sri Lanka Telecom Mobitel


(சி-6565)


# புதிய யோசனைகள், புதிய சந்தைகள்...

## சாவகச்சேரி பால்பண்ணை அபிவிருத்தி நிலையத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தல்.

சாவகச்சேரியில் அமைந்துள்ள பால்பண்ணை அபிவிருத்தி நிலையம் இன்று ஜேர்மன் தூதுவர், அதிமேதகு டாக்டர் ஜர்கன் மோஹாட் (Dr.Jurgen Mohard) அவர்களின் முன்னிலையில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர் திரு. எஸ். அருமைநாயகம் அவர்களினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படும். GIZ - SME அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி அலுவலகத்துக்கான Tetra Laval Food உடன் ஒன்றாக இணைந்து கார்கில்ஸ் (சிலோன்) PLC இனால் இணைந்த கருத்திட்டமாக இந்தப் பிராந்தியத்தில் முன்னணி பால் பதனிடுவோர், பால் பண்ணையாளர்களுடன் இணைந்து வெப்ப மண்டல பிராந்தியத்தில் பால் பண்ணைத் தொழிலில் வல்லுநர்களையும் ஒன்றாகக் கொண்டு வருகின்றதாகையால் பால்பண்ணை அபிவிருத்தியில் புதிய அத்தியாயமொன்று ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.







பண்ணைக் கைத்தொழிலில் அண்மைக்கால அபிவிருத்திகளில் சாவகச்சேரி மற்றும் மீசாலையில் உள்ள 400 க்கும் மேற்பட்ட பண்ணையாளர்களுக்கு தனிப்பட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வழி கிடைக்கும் என்பதுடன் எவ்வாறு தமது பால் உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதென்பது மற்றும் பண்ணைக் கைத்தொழிலில் அண்மைக்கால அபிவிருத்திகள் பற்றிய அறிவையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மேலும் அவர்கள் முன்னணியில் உள்ள நாடளாவிய பால் பதனிடுவோர் மற்றும் சிரேஷ்ட சந்தைச் சங்கிலியுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளனர்.

அதன் மூலம் பண்ணையாளர்களுக்கு அவர்களது பால் உற்பத்திகளுக்கு கவர்ச்சிகரமான விலைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். இவ்வாறான தலையிடுதலின் ஊடாக பண்ணையாளர்கள் அவர்களது வருமானங்களில் ஆகக் குறைந்தது 50 சதவீத அதிகரிப்பை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகவே பண்ணையாளர்கள் பால் பண்ணையை அவர்களது முதன்மை வருமானத்திற்கு ஆதாரமாக இரண்டாம் நிலை வருமானமாக நகர்த்துவதற்கு இயலக் கூடியதாக இருக்கும்.

தொடர்ச்சியான பண்ணைப்பயிற்சி அளித்தல் மற்றும் ஏனைய உதவிகள் வழங்குவதன் ஊடாக பால் பண்ணை நடாத்துவதன் மூலம் பால் உற்பத்தி மற்றும் வருமானங்களை அதிகரித்துக்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குவதன் பொருட்டு GIZ SME அபிவிருத்தி நிறுவனத்தினால் நான்கு கால்நடை மருத்துவர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். தனிப்பட்ட பண்ணையாளர்களுக்கு தனிப்பட்ட ஆலோசனைகள் வழங்குதல், பகுப்பாய்வு அடிப்படையில் பால் மாதிரிகளை பரீட்சிப்பதற்கு பண்ணையாளர்களுடன் அவர்கள் மிக நெருக்கமாக பணியாற்றுவார்கள்.

பங்களாதேஷ் நாட்டில் Tetra Laval மூலம் பயிற்சியளிக்கப்பட்ட கால்நடை மருத்துவர்களும் செயற்கை முறை சினைப்படுத்தல், தடுப்பூசியேற்றல், முறையான குடற்புழு நீக்கம் போன்ற சிறந்த நடைமுறைகளை பண்ணையாளர்களுக்கு அறிமுகம் செய்தல், உயர் விளைச்சலை உற்பத்தி செய்யக் கூடிய திறமை உள்ள புதிய வகை புல்லை பண்ணையாளர்களுக்கு அறிமுகம் செய்வதன் ஊடாக அவர்களும் கவனம் செலுத்துகின்றனர்.

அதன் மூலம், தரமான மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கும் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான பண்ணையாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு உதவிசெய்வதன் பொருட்டு ஒவ்வொரு வருடமும் கார்கில்ஸ் நிறுவனம் நேரடியாகப் பணியாற்றுகின்றது.

தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் அல்லது கார்கில்ஸில் விற்பனை செய்யப்பட்ட உற்பத்திகளின் தரத்தைப் பேணுதல் கம்பனியின் நூற்றாண்டுக்கும் மேலான வர்த்தகம் செய்தல் மற்றும் செயற்பாடுகளை அடைவதற்கான முக்கியமான அளவுகோலாகும். கொள்வனவு செய்யப்பட்ட, பதனிடப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட உணவுகளின் அதி உயர்ந்த தரம், பாதுகாப்பு, சுற்றாடல் மற்றும் சமூக தரங்கள் என்பனவற்றை அடைவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கார்கில்ஸ் அர்ப்பணித்துள்ளது.

german cooperation DEUTSCHE ZUSAMMENARBEIT
giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH
PROTECTS WHAT'S GOOD Tetra Pak
SINCE 1844 Cargills

(சி-6571)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது கதிர்வேலன் காதல் - திரைவிமர்சனம்




வழக்கமாக காதலுக்கு ஏற்படும் பிரச்சினையை சமாளித்து அதை சுபமாக்கி காதலியை வீட்டிலுள்ளவர்கள் சம்மதத்தோடு கைபிடிக்க நினைக்கும் காதல் கதை தான், இது கதிர் வேலன் காதல்.

ஆனால் இந்த கதிர்வேலன் அதை எப்படி சுவாரஸ்யமாக செய்கிறார் என்பதே இப்படத்தின் சிறப்பம்சமாகும். படம் அதிர்ச்சியான காட்சியோடு தொடங்குகிறது. உதயநிதியின் அக்கா சாயாசிங் வீட்டை எதிர்த்து காதல் திருமணம் செய்தவர். அதனால் காதல் என்றாலே உதய நிதியின் அப்பா நரேனுக்கு வெறுப்பு.

சாயாசிங் தன் கணவரோடு கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டுக்கு வர அக்கா கணவரிடம் பேசி சமாதனம் செய்து வைக்க மதுரையிலிருந்து கோயம்புத்தூர் வருகிறார் உதயநிதி. அக்கா வீட்டின் எதிர் வீட்டிலிருக்கும் நயன்தாராவை பார்த்ததும் காதலில் விழுகிறார். ஆஞ்சநேய பக்தரான உதயநிதி அந்த நேரத்தில் அங்கு சந்திக்கும் தன் பால்ய நண்பன் சந்தானத்தின் உதவியோடு தன் காதலில் வெற்றி பெற போராடுகிறார்.

நயன்தாராவின் நண்பரான சுந்தர் ஒருபக்கம் அவரை அடைய நினைக்கிறார். உதய நிதியின் அக்கா கணவருக்கும் நயன்தாராவின் அப்பா ஜெயப்பிரகாஷ்க்கும் ஜென்ம பகை. நரேன் தன் மகன் உதயநிதிக்கு பெண் பார்க்கிறார். உதயநிதி தன் காதலுக்கு இருக்கும் அவ்வளவு சிக்கல்களையும் முறியடித்து நயன்தாராவை கைபிடித்தாரா என்பதே மீதி கதை.

உதயநிதி இரண்டாவது படத்தில் நடனத்தில் முன்னேறி இருக்கிறார். இயல்பாக நடிக்க முயற்சிப்பது அழகாக இருக்கிறது. ரொம்ப நாளைக்கு கண்ணாடி போட்டுக் கொண்டு நடிப்பது கைகொடுக்காது என்பதை அவர் நினைவில் கொள்ள வேண்டும். நயன்தாராவின் அழகு நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போகிறது. அவர் வரும் காட்சிகளை தனித்திறனோடு திறமை யான நடிக்கும் அளவுக்கு மிகவும் தேறிவிட்டார்.


சந்தானம் வந்த பிறகே படம்களை கட்டுகிறது. தன்னை நம்பியவர்களை கைவிடாமல் அவர் அற்புதமாக நடித்துள்ளார். அதுவும் உதயநிதி காதலுக்காக நரேனிடம் பேசப்போகும் காட்சியில் அசத்தல் நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். ஆஞ்சநேயர் வேடத்தில் வரும் லொள்ளுசபா சாமிநாதனும், மிமிக்ரி ஆர்டிஸ்ட்டாக வரும் மயில்சாமியும் கொஞ்ச நேரமே வந்தாலும் கலக்கியுள்ளனர்.

சாயாசிங், உதய நிதியின் அம்மாவாக வரும் சரண்யா, நண்பராக வரும் முருகதாஸ், நயன்தாரா தோழியாக வந்து சந்தானத்தின் காதலியாக மாறும் கேரளப்பெண், வில்லத்தனம் காட்டும் சுந்தர் ஆகியோர் கிடைத்த பாத்திரத்தில் கச்சிதமான நடிப்பை காட்டியுள்ளனர்.

சாயாசிங்கின் கணவராக வரும் நபர் மிக அழகாக இருப்பதோடு நடிக்கவும் தெரிந்தவராக இருக்கிறார். நரேன் அருமையான நடிகர் என்பதை ஒவ்வொரு முறையும் நிரூபித்துக் கொண்டு இருக்கிறார். ஜெயப்பிரகாஷும் அவருடைய மனைவியாக வருபவரும் நிறைவாகவே செய் திருக்கிறார்கள்.

ஒளிப்பதிவாளர் பாலசுப்பிரமணியம் ஒளிப்பதிவில் காட்சிகள் உயர்தரமாக இருக்கிறது. சாதாரண குடும்ப படம் என்று விட்டு விடாமல் கவனம் எடுத்து ரசனையாக பதிவு செய்திருக்கிறார். ஹாரிஸ் ஜெயராஜ் இசையின் சில தொய்வு பின்னணி இசை சில இடங்களில் ஏற கனவே கேட்ட உணர்வு. பாடல்கள் கேட்க நன்றாக இருக்கிறது.

ரொம்ப நாளைக்கு பிறகு குடும்பத்தோடு பார்க்கிற அழகான படத்தை தந்திருக்கிறார் இயக்குநர் SR. பிரபாகரன். சண்டைக்காட்சிக்கு வாய்ப்பிருந்தும் அதை செய்யாமல் முழுமையான



குடும்ப படத்தை தந்திருக்கிறார். கடைசி காட்சியில் முதல் காட்சிக்கான புதிரை அவிழ்க்கும் இடத்தில் நம்மால் சிரிப்பை அடக்க முடியாது. அதே போல் நரேனுடன் உதயநிதி விவாதம் செய்யும் இறுதிக் காட்சி வசனாங்களும் நரேனின் நடிப்பும் தாக்கத்தை உண்டு பண்ணுகிறது.

இயக்குநர் முதல் பத்து நிமிடங்களுக்கு நிறைய திருப்பங்களை தந்து விட்டு அடுத்து திரைக்கதை மெதுவாக நகர்த்துவது கதைக்குள் எளிதில் உள்ளே போக முடியவில்லை. இருந்தாலும் அந்த நேரத்தில் சந்தானம் வந்து காப்பாற்றி விடுகிறார் என்று சொல்ல வேண்டும். எடிட்டிங்கில் இன்னும் ஷார்ப் செய்திருக்கலாம். இரண்டரை மணி நேர படம் என்பதால் படத்தின் நீளம் மிக அதிகம் என்றே சொல்ல தோன்றுகிறது.

எல்லோரும் ஏற்று கொள்ளும்படியான காதலை காட்டிய விதத்தில் கதிர்வேலன் காதல் வெற்றி பெற வேண்டிய காதலே.

**மொத்தத்தில் இது கதிர்வேலன் காதல் காமெடி கலாட்டா...**

# வில்லியாக விரும்பும் தமன்னா



அஜீத்துடன் ஆரம்பம் படத்தில் ரீ-என்ட்ரி ஆன நயன்தாரா தற்போது பிசியான கதாநாயகி ஆகி விட்டது போன்று, வீரம் படத்தில் என்ட்ரியான தமன்னாவும் தெலுங்கு, இந்தி என பிசியாகத்தான் இருக்கிறார். இந்தியில், அக்சய்குமார், சைப் அலிகான் போன்ற ஹீரோக்களுடன் டூயட் பாடி வருபவர், தெலுங்கில் அனுஷ்கா-பிரபாஸ் நடிக்கும் பாகுபாலி மற்றும் மகேஷ்பாபு நடிக்கும் ஆக்டு போன்ற படங்களிலும் நடிக்கிறார்.

ஆக, இரண்டு மொழியிலுமே முன்னணி ஹீரோக்களுடன் நடித்துக்கொண்டிருக்கிறார் தமன்னா.

இந்த நிலையில், தொடர்ந்து காதலிப்பது, கவர்ச்சி காட்டுவது என்று நடித்த அவருக்கு போரடித்து விட்டதாம். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு இப்படி ஹீரோக்களின் தோளில் தொங்குவதும், முதுகில் ஏறுவதுமாக நடிப்பது என்று தனது மனக்குமுறலை சில டைரக்டர்களிடம் கொட்டி தீர்த்து வருகிறார் தமன்னா.

அப்படியென்றால் அடுத்து எந்த மாதிரி திறமை காட்டும் ஆசை உள்ளது? என்று கேட்பவர்களிடத்தில், ஆக்சன் செய்யணும், அடுத்தபடியாக கெட்டபெண் அதான் வில்லியா நடிக்கணும். இப்படியெல்லாம் நடிக்கிறபோது, இன்னும் வெரைட்டியா நடிக்க முடியும். ஹீரோயினின்னா வட்டத்தை விட்டு தாண்ட முடியாது.

ஆனால் வில்லின்னா வட்டத்துக்குள்ள நிற்காமல் எப்படி வேண்டுமானாலும் நடிக்கலாமே? அப்படி நடிக்கிறபோது வித்தியாசமான பர்பாமென்ஸ் காட்டி ஸ்கோர் பண்ணலாம் என்று தனது மனதில் இருக்கும் ஆசையை கொட்டி வருகிறார்.

தமன்னாவின் இந்த நடிப்பு தாகத்தை கேட்டவர்கள், நேரம் வரும்போது உங்களுக்குள் இருக்கிற கெட்டபெண்ணை களத்தில் இறக்கி விடுவோம் என்று வாக்குறுதி அளித்துள்ளார்களாம்.

யார் யாரு எது எதுக்கு ஆசைப்படுவது என்று விவஸ்தை இல்லாமல் போய்விட்டது என்று சிலர் கிசுகிசுப்பதாகவும் கேள்வி..!

## கந்தப்பு ஜெயந்தனின் அழகிய புயலே



அண்மையில் வவுனியா கந்தப்பு ஜெயந்தனின் "அழகிய புயலே" வீடியோ பாடல் வெளியாகியுள்ளது.

பாடலுக்கான வரிகளை கவி பிரசாந்த் எழுதியிருக்க, இசையமைத்து பாடியிருக்கிறார் கந்தப்பு ஜெயந்தன்.

கந்தப்பு ஜெயந்தனோடு இணைந்து பாடலை பாடியுள்ளார் வாசுகி.

மேலும் கந்தப்பு ஜெயந்தன் மற்றும் மிதுனா ஆகியோர் இந்த பாடலில் நடித்துள்ளனர்.

பாடலுக்கான ஒளித்தொகுப்பினை ரஜீவனும், எடிட்டிங்கினை ஜசிகித்தும் செய்திருக்கிறார்கள்.

நம்ம ஊரில் உறங்கி இருக்கும் சினிமா இப்பொழுது தான் மெல்ல துயிலெழுகிறது அதற்கு அனைத்து சமூகமும் ஆதரவினை தெரிவித்து அந்த கலைஞர்களை வரவேற்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலகியது தூக்குக் கயிறு



## உணர்வு ததும்பிய உறவுகளின் உள்ளத்திலிருந்து





ராஜீவ்படுகொலையில்குற்றம்சாட்டப்பட்டு, தூக்குக் கயிறைத் தொட்டு விட்டுத் திரும்பியிருக்கும் ஏழு பேரின் விடுதலை, பலரின் மனதில் பால் வார்த்திருக்கிறது. ஒரு கொலைக்கு இன்னொரு கொலை பதிலாக இருக்க முடியாது என்கிறது சட்டப் புத்தகங்களில் மறைந்திருக்கிற மனிதம். இரக்க மனங்களின் எதிர்பார்ப்பும் ஆதங்கமும் கலந்த தவிப்பு முரட்டுச் சிறைக் கதவுகளை நெகிழ வைத்திருக்கும் இந்தச் சூழ்நிலையில், விடுதலையை எதிர்நோக்கியிருக்கும் சம்பந்தப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களின் மன உணர்வின் கண்ணீர்ப் பதிவு இது.

நீர் வற்றிய கண்கள், சுருங்கிய தோல், காலையில் இருந்து பலரையும் சந்தித்த களைப்பு... எதையும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் அன்போடு அழைக்கிறார் சோமணி. 23 ஆண்டு காலமாக தன் மகன் முருகன், மருமகள் நளினியின் விடுதலைக்காகத் தவமாய் தவமிருந்தவர். மரணத் தின் விளிம்பில் இருந்து தன்னு டைய மகன் உயிர்பிழைத்து விடு வான் என்ற செய்தி அவருடைய கண்களில் புது ஜீவனைத் தந்துள்ளது.

**“கனவு, எதிர்காலம் எல்லாமே அரித்ரா!“**

சோமணியின் உணர்ச்சிக் குவியலில் இருந்து... ““ரொம்ப சந்தோஷமா இருக்கு. முதல்வரின் இந்த அறிவிப்பு உயிர் வந்த மாதிரி இருக்கு. ஒன்றரை மாசம் முந்தி லண்டனில் இருந்து வந்தேன். திரும்ப உசுரோட போவாமான்னு சந்தேகம் இருந்துச்சு. எப்படியும் மகனும், மருமகளும் விடுதலை ஆயிடுவாங்கன்னு நம்பிக்கை இருக்கு. மனசு நிம்மதியா இருக்கு. பெத்த பிள்ளையைத் தகப்பன் பிரிஞ்சிருக்கிறதும் தகப்பனைப் பிள்ளை பிரிஞ்சிருக்கிறதும் மிகவும் கொடுமை.

,ஜெயில்ல என்னைப் பார்த்துட்டு நளினி ஆர்வத்தோடு ஓடி வந்தா. நளினி கேட்ட முதல் கேள்வி, “அரித்ரா போட்டோ கொண்டு வந்தீங்களா?’. “ஐயோ அம்மா... இருந்த பரபரப்புல நான் அதை மறந்துட்டேன்’னு சொன்னேன். புள்ளையோட புகைப்படத்தைக்கூட பார்க்க முடியாதவளாயிட்டேன்னு நளினி கதறி துடிச்சிட்டா.

அரித்ராவுக்கு இப்போது 22 வயது. லண்டனில் மருத்துவக் கல்லூரியில் நான்காவது வருஷம் படிக்கிறா. இலவசமா மருத்துவம் பார்க்கணும், யார் கிட்டேயும் காசு வாங்கக் கூடாதுன்னு அடிக்கடி சொல்லிட்டே இருக்கிறாள். இன்னும் தன்னோட அடையாளத்தை மறைச்சி வாழ்ந்திட்டிருக்கா. லண்டன்ல இருக்கிற தன் சக தோழர்கள் அவளை ஒதுக்கிடுவாங்களோன்னு ரொம்ப பயப்படுறா.

முருகன், நளினி ரெண்டு பேருக்கும் இப்ப இருக்கிற ஒரே நினைப்பு... அரித்ரா. அவங்களுடைய ஒரே சந்தோஷம், கனவு, எதிர்காலம் எல்லாமே அரித்ராதான். அதனால, லண்டன் போக வேண்டிய சூழல் உள்ளது. பாஸ்போர்ட், விசா கிடைக்கணும். பல பிரச்னைகள் இருக்கு. இனி வரும் காலத்தை தங்கள் பாசமகள் அரித்ராவோடு செலவு செய்யணும்னு இருவரும் விரும்புறாங்க. விடுதலைக்குப் பிறகு இருவரையும் திருப்பதி கோயிலுக்குக் கூட்டிட்டுப் போகணும். வேலூர்ல நண்பர்கள் உதவியோடு முருகன் - நளினிக்குத் திருமணத்தை நடத்தி, இருவரின் விடுதலைக்குக் காரணமான அனைவரையும் திருமணத்துக்கு அழைத்துச் சாப்பாடு போட்டு நன்றி கூற ணுமனு ஆசை“ என்றார்.

**“என் மகன் என் தலைவன்!“**

குயில்தாசன் - அற்புதம்மாள் தம்பதியினரின் மகன்தான் பேரறிவாளன். சென்னைக்கும்வேலூருக்குமாய் பேரறிவாளனின் விடுதலைக்காக அற்புதம்மாள் அலைந்துகொணடிருககிறார். பேரறிவாளனின் தந்தை குயில்தாசனிடம் பேசினோம்.

“பார்வை இழந்த ஒருவனுக்குப் பார்வை கிடைத்ததுபோல, பாலைவனப் புயலில் சிக்கி திசை தெரியாமல் நடந்து கொண்டிருந்தவனுக்குச் சோலை தென்பட்டது போல இருக்கிறது இந்தத் தீர்ப்பு. நீதியரசர் சதாசிவத்துக்கும் அவருடைய குழுவினருக்கும் இந்த நேரத்தில் தலை வணங்குகிறோம். உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய 24 மணி நேரத்தில் தூக்குத் தண்டனையை இரத்துசெய்து என் மகனை மீட்டுக் கொடுத்த தமிழக முதல்வரை வணங்குகிறேன்.



பேரறிவாளன்

குயில்தாசன்

அற்புதம்மாள்

பேரறிவாளன் எனக்கு மகன் அல்ல. என்னுடைய தலைவன். சிறுவயதிலே எல்லோருக்கும் தொண்டாற்றக்கூடிய சிறந்த மாண்புகளைக் கொண்டவன். பெயருக்கு ஏற்றார் போல் அனைவருக்கும் உதவி செய்து, ஊருக்காகப் பயன்பட்டுள்ளான். வீணாகக் காலத்தைக் கழிக்காமல் தொண்டு செய்துள்ளான். பிறருக்குக் கல்வி கொடுத்துள்ளான். ஒழுக்கத்தில், பேச்சில் அவனிடத்தில் எண்ணற்ற மாற்றங்கள். தலைமைப் பண்புகளை ஏற்று சிறந்த மனிதனாக உருவெடுத்திருக்கிறான். திராவிடக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள் நாங்கள். அரசியலை நுகர்ந்தது கூட கிடையாது. எங்களால் போலியாக முகம் காட்டி நடிக்கத் தெரியாது.

ஒரு தந்தையாக மனைவி, குழந்தைகளோடு என் மகனைக் காண வேண்டும் என்ற ஆசை எனக்கு உள்ளது. பேரறிவாளனுக்கு வரப்போகும் பெண் அவரைப் போலவே போராட்ட குணம்கொண்டு இருக்க வேண்டும். அவர்கள் நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டும். நால்வரும் இந்த சமூகத்துக்காக ஏதாவது செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பது என்னுடைய கனவு“ என்றார்.

“நளினியின் விடுதலைக்காக உயிரைப் பிடித்துக்கொண்டு காத்திருக்கிறேன்!“

நளினியின் தந்தை சங்கர நாராயணனுக்கு சொந்த ஊர், நெல்லை மாவட்டம் சங்கனாங்குளம். காவல்துறையில் இன்ஸ்பெக்டராக சென்னையில் அவர் பணியாற்றிக்கொண்டு இருக்கும் போது, ராஜீவ் படுகொலை சம்பவம் நடந்தது. பொலிஸ் விசாரணை, சி.பி.ஐ. வழக்குப் பதிவு என நளினி மீது அடுத்தடுத்து அதிரடி நடவடிக்கைகள் பாய்ந்ததும் பெற்ற பாசததை உதறி, மகளுடனான உறவைத் துண்டித்தார் சங்கர நாராயணன்.

ஆறு வருடங்களுக்கு முன்பு ஒருமுறை வேலூர் சிறைக்குச் சென்று மகளைப் பார்த்துக் கண்ணீர் வடித்தார். உடல்நலக் குறைவு காரணமாக அதன் பின்னர் அவரால் சென்னைக்குச் செல்ல இயலாமல் வீட்டிலேயே முடங்கிவிட்டார்.

“ரொம்ப மகிழ்ச்சியாக இருக்குங்க. நளினியைப் பார்த்து ரொம்ப நாளாகிப் போச்சு. அவளை மறுபடியும் பார்க்க முடியுமா என்கிற ஏக்கம் இருந்துக்கிட்டே இருந்துச்சு. இப்போ அந்தத் துயரம் மனதில் இருந்து போயிடுச்சுங்க. என்னோட பேத்தியை நான் இதுவரைக்கும் பார்த்ததே இல்லை. அந்தக் குழந்தை இப்போ லண்டனில் டாக்டருக்குப் படிச்சுக்கிட்டு இருக்கு. ஒட்டு மொத்த குடும்பமும் இனியாவது ஒன்றாக இருக்க வாய்ப்பு கிடைச்சுருக்கு. இதுக்காகத் தமிழக அரசுக்கு நன்றி சொல்லியே ஆகணும்.

என்னோட இன்னொரு பொண்ணும் பையனும் சென்னையில் இருக்காங்க. அவங்க நளினியை வரவேற்பாங்க. முடிஞ்சா சென்னைக்குப் போவேன். அல்லது அவங்க இங்கே வந்து என்னைப் பார்ப்பாங்க. பல வருஷத்துக்குப் பிறகு மகளைச் சந்திக்க இருப்பது, உடம்பில் புது வலுவைத் தந்திருக்கு“ என்றார் நெகிழ்ச்சியுடன்.

**“ரவியோட நினைப்பிலயே அவங்க அப்பா இறந்துபோனார்!“**



ராஜேஸ்வரி



ரவிச்சந்திரன்

அருப்புகோட்டையில் வாழ்ந்து வருகிறார் ரவிச்சந்திரன் தாயார் ராஜேஸ்வரி. கணவனை இழந்து விட்டார். சிறையில் வாடும் மகனின் நினைவை மட்டுமே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கும் அவருடைய குரலில் நெகிழ்ச்சி. “ரொம்ப சந்தோஷமா இருக்கு. முதல்வர் அம்மாவுக்கு, உச்ச நீதிமன்ற நீதிபதி ஐயாவுக்கு ரொம்ப நன்றிக் கடன்பட்டு இருக்கோம். நாங்க இந்த 23 ஆண்டுகளாகப் படாத கஷ்டங்கள் இல்லை. ரவிச்சந்திரன் நினைப்பிலயே அவர் அப்பா இற ந்து போயிட்டார். அவங்க அப்பா இறந்ததற்குத்தான் பரோல்ல வெளியே வர முடிந்தது. என் காலம் முடிவ தற்குள்ள அவன் வெளியே வந்து டுணும்னு வேண்டாத கோயில் இல்லை.

**“மகளை என் கையில் அள்ளிக்கொள்வேன்!“**

நளினியின் தாயார் பத்மா சென்னையில் இருக்கிறார். அவர் மனம் நெகிழ பேசினார். ““நான் வணங்கிய கடவுள் என்னைக் கைவிடவில்லை. முதலமைச்சர் ஜெயலலிதா அம்மாவின் இந்த நடவடிக்கையை மனிதநேயம் என்ற வார்த்தைக்குள் அடக்கிவிட முடியாது. அவருடைய இந்த நடவடிக்கை எங்களுடைய இதயத்தை நிரப்பி உள்ளது. என் உடலின் ஒவ்வொரு செல்லும் அவருக்கு நன்றி சொல்கிறது. எங்களுக்காகப் போராடிய தலைவர்கள், தமிழ் உள்ளங்கள், பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள் என்று அனைவருக்கும் நான் இந்த நேரத்தில் நன்றியைச் சொல்கிறேன். நன்றி என்ற வார்த்தையால் இப்போதைய என்னுடைய உணர்வை சொல்லிவிட முடியாது.

என் மகள் வெளியே வந்ததும், அவளை என் கையில் அள்ளிக் கொள்வேன். அவள் அவளுடைய மகளை அள்ளிக்கொள்வாள். ஒரு மனிதனின் உயிரை எடுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. அரசாங்கத்துக்குகூட அந்த உரிமை இல்லை. இனி இந்த நாட்டில் தூக்குத் தண்டனையே கூடாது. என்னுடைய பேத்தி அரித்ராவிடம் இந்தத் தகவலை இன்னும் தெரியப் படுத்தவில்லை. அவள் தேர்வுக்குப் படித்துக்கொண்டிருப்பதால், தேர்வு முடிந்ததும் தெரியப்படுத்தலாம் என்று இருக்கிறேன்““ என்றார். 23 ஆண்டு சிறையில் இருந்தவர்களுக்கும் குடும்பங்கள இருக் கின்றன. அதில் கண்ணீரும கவலையுமாக மனிதர்கள் இருக்கின்றனர். தவிப்பும் ஏக்கமுமாக சில மனங்கள் இருக்கின்றன.

ஜூனியர் விகடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

728

## புரிந்து கொள்ளாத மக்கள்

அன்னாவரம் என்ற கிராமம் மலைகள் சூழ்ந்த இயற்கை எழில் நிறைந்த கிராமம். அங்கிருந்த விவசாயிகள் பல நூதனமான பயிர்களை விவசாயம் செய்து வந்தனர். பலவிதமான கிழங்குகளையும், பழமரங்



களையும் மூலிகைகளையும் பயிர்செய்து, அவற்றையே தங்கள் முக்கிய உணவாகவும் கொண்டு இருந்தனர்.

அந்த கிராமத்தில் குணவர்மன் என்ற இளைஞன் வசித்து வந்தான். சிறுவயது முதலே, அவன் தீவிர சிந்தனையாளனாக இருந்தான். எப்போதும், எதைப் பற்றியாவது சிந்தித்துக் கொண்டேயிருந்தவனை, கிராமத்தினர் சோம்பேறி என்று இளக்காரம் செய்தனர். அவனுடைய வாழ்க்கையின் கண்ணோட்டமே வேறுவிதமாக இருந்தது. கிராமத்து மனிதர்களுடைய வாழ்க்கைமுறை அவனுக்குப் பிடிக்கவில்லை.

"கடவுள் கொடுத்த பகுத்தறிவை நன்கு பயன்படுத்த வேண்டும். கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் உலகில எத்தனையோ இருக்கின்றன" என்பதுபோன்ற அவனுடைய புதுமையான சிந்தனைகள் கிராமத்தினரின் மூளையில் நுழையவில்லை.

தன்னுடைய புதிய கருத்துகளை யாரும் ஏற்காததால் சலிப்படைந்த குணவர்மன் ஒருநாள் தன் தந்தையிடம், "அப்பா! இங்குள்ள மக்கள் இயந்திரம போல் இயங்குகின்றனர். இங்கிருந்தால் என் வாழ்க்கை வீணாகிவிடும்! தண்டகாரண்யக் காட்டில் புஜங்கர் என்பவர் நடத்தும் குருகுலத்தில் சேர்ந்து, என் கல்வி அறிவை அபிவிருத்தி செய்துகொள்ள விரும்புகிறேன். பிறகு அங்கிருந்து திரும்பி வந்து, எந்த கிராமத்தினர் என்னை ஏளனம் செய்கின்றனரோ, அவர்கள் எனக்கு மரியாதை செலுத்துமாறு செய்வேன்!" என்று கூறி விட்டு, தண்டகாரண்யத்தை நோக்கிச் சென்றான்.

புஜங்கரின் ஆசிரமத்தை நெருங்கிக் கொண்டு இருக்கையில், ஒரு தேர் அவன் பின்னால் வந்தது. அவனிடம் வந்து தேரை நிறுத்திய தேரோட்டி, "தம்பி! நீ எங்கு செல்கிறாய்?" என்று கேட்க, குணவர்மன் பதில் சொலலவும், அவன், "நானும் அங்குதான் செல்கிறேன்! நீயும் தேரில் ஏறிக்கொள்! மன்னரின் தாய்க்கு உடல் நிலை சரியில்லாததால், புஜங்கரை அழைத்துச் செல்ல நான் வந்திருககிறேன்!" என்று கூறிவிட்டு குணவர்மனைத் தன்னுடன் அழைத்துச் சென்றான்.

குருகுலத்தை அடைந்ததும், குணவர்மன் புஜங்கரை கால்களில் விழுந்து வணங்கித் தன் விருப்பத்தை வெளியிட்டான்.

அதற்கு அவர், "மகனே! என்னிடம் சீடனாகச் சேர வேண்டுமெனில், அதற்கு முன் ஜம்புகாரண்யத்தில் என் பழைய மாணவர் வினயர் ஒரு குருகுலம் நடத்தி வருகிறார். அங்கு சென்று இரண்டு ஆண்டுகள் பயின்ற பிறகு நீ இங்கு வா!" என்றார். "குருவே! உங்களுக்கு என் அறிவுத் திறமையில் சந்தேகம் என்று நினைக்கிறேன். வேண்டுமானால், நீங்கள் என் அறிவை சோதித்துப் பாருங்கள்!" என்றான்.



"மகனே! இப்போது நான் அரண்மனைக்குச் செல்ல வேண்டிஇருக்கிறது. திரும்பி வர எனக்கு ஒரு வாரம் ஆகும்! அதுவரை இந்த இரண்டு கிரந்தங்களை உன்னிடம் தருகிறேன். இவற்றை கவனமாகப்படி! இவற்றினுடைய கருத்தை நீ நன்றாகப் புரிந்துகொண்டால் மட்டுமே, நீ என் சீடனாக அமையத் தகுதியுள்ளவன்' என்று கூறிவிட்டு அரண்மனை தேரில் ஏறிச் சென்றுவிட்டார்.

உடனே, மற்ற சீடர்கள் அவனிடம், "இரண்டு ஆண்டுகளாக இவற்றைப் புரிந்து கொள்ள நாரங்கள் படாதபாடுபடுகிறோம். அப்படி இருக்க, உன்னால் ஒரு வாரத்தில் புரிநதுகொள்ள முடியுமா?" என்று அவனை பயமுறுத்தினர்.

ஆனால் குணவர்மனோ, "இதை நான் ஒரு சவாலாக ஏற்றுக் கொள்கிறேன்!" என்று சொல்லிவிட்டு, கிரந்தங்கள் இயற்றப்பட்டிருந்த ஓலைச்சுவடிகளை ஆழ்ந்து படிக்கத் தொடங்கினான். நான்கே நாட்களில, அவற்றின் சாரத்தை குணவர்மன் நன்றாக கிரகித்துக் கொண்டான்.... (தொடரும்)

### அன்னமாச்சாரியார்



தாள்ளபாக்கம் அன்னமாச்சாரியார் 1408 ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி ஆந்திராவிலுள்ள கடப்பா மாவட்டத்தில் தாள்ளபாக்கம் எனும் கிராமத்தில் நந்தவாரிக எனும் தெலுங்கு அந்தண குடும்பத்தில் பிறந்த ஒரு வைணவத் தொண்டர்.

திருமலை திருவேங்கடமுடையான் கோயிலோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த இவர் திருவேங்கடவன் மீது பாடிய பாடல்கள சங்கீர்த்தனைகள் என்ற புகழ்பெற்றவை. தெலுங்கு இலக்கியத்தின் முதல பெண் புலவரான "சுபத்ரா கல்யாணம்" இயற்றிய "திம்மக்கா" என்பவர் அன்னமாச்சாரியாரின் மனையாளாவார்.

அன்னமாச்சாரியார் தென்னிந்திய இசையில் தோற்றுவித்த மரபுகள் பல, பின்வந்தோரால் வளர்க்கப்பட்டு விருத்தியடைந்தன. பஜனை மரபினைத் தொகுத்து வழங்கிய சிறப்பு இவருக்குண்டு. பல்லவி, அநுபல்லவி, சரணம் போன்றவை இவரால் உருவாக்கப்பட்டவை என்று கருதப்படுகிறது. இவருடைய மகன் பெரிய திருமாலாச்சாரியார், பேரன் சின்னையர் ஆகியோரும் தென்னிந்திய இசை வரலாற்றில் முக்கிய இடம் வகிப்பவர்கள். 95 வருடங்கள் வாழ்ந்த அன்னமய்யா பெப்ரவரி 23, 1503 அன்று பரமபதம் அடைந்தார்.

இவர் 32 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை கர்நாடக இசை முறையில் இயற்றியுள்ளார். இவரது பெரும்பாலான பாடல்கள் செப்புத் தட்டுகளில் எழுதப்பட்டு திருப்பதி வெங்கடேஸ்வரர் கோயிலில் உள்ள உண்டிக்கு எதிரில் சிறு அறை ஒன்றில் சுமார் மூன்று நூற்றாண்டுகளாக மறைத்து வைக்கப்பட்டிருந்து பின்னர் 1922 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டன. இவரது பாடல்களில் சுமார் 12 ஆயிரம் மட்டுமே இப்போது கிடைக்கப்பெற்றுள்ளன.

சிருங்கார ரசம், வைராக்கியம், பக்தி என இவரின் கீர்த்தனைகள் வகைப் படுத்தபடுகின்றன. வைணவ ஆசாரியர் இராமானுஜரின் விசிஷ்டாத்வைத கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு வைணவத்தை தழுவிய இவர் கீர்த்தனைகள் பலவும் நாலாயிர திவ்விய பிரபந்தத்தின் பிரதிபலிப்பை சுட்டுகிறது. ஆசாரியர் இராமானுஜர் மீதும் ஆழ்வார்கள் மீதும் சில பாடல்கள் இயற்றியுள்ளார்.

சாதிய கொள்கைகள் நிறைந்த அக்காலத்தில் "ப்ரஹ்மம் ஒக்கடே" என்ற புகழ்பெற்ற பாடல் மூலம் சாதிவேற்றுமைகளை கண்டித்த வெகு சிலரில இவரும் ஒருவர். மொழியாக்கம் செய்யாமலே இவருடைய கீர்த்தனைகளை தொடர்ந்து கேட்பதினாலேயே இதன் பொருள் புரியும் வகையிலும், மிக நளினமான வார்த்தைகளைக் கொண்டே கீர்த்தனைகளை இயற்றி முடித்துள்ளார். கீர்த்தனைகள் தவிர ஒவ்வொன்றும் 100 பாடல்கள் அடங்கிய 12 சாதகங்களையும் இயற்றியிருக்கிறார். இராமனைப் பாடும் மரபிலும் இவருக்குப் பங்குண்டு.



02.2014
23

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1847 - மெக்சிக்கோ-அமெரிக்கப் போர்: மெக்சிக்கோவின் புவெனா விஸ்டா நகரில் அமெரிக்கப் படைகள் மெக்சிக்கோ படைகளைத் தோற்கடித்தன.
- 1870 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: மிசிசிப்பியில் இராணுவ ஆட்சி முடிவடைந்து அமெரிக்கக் கூட்டணியில் மீண்டும் இணைக்கப்பட்டது.
- 1893 - ருடொல்ஃப் டீசல், டீசல் இயந்திரத்துக்கான காபுரிமம் பெற்றார்.
- 1903 - கியூபா குவாண்டானமோ விரிகுடாவை ஐக்கிய அமெரிக்காவுக்கு முடிவற்ற குத்தகைக்குக் கொடுத்தது.
- 1904 - 10 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயின் உரிமையைப் பெற்றுக் கொண்டது.
- 1905 - ரோட்டரி அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.
- 1917 - சென் பீட்டர்ஸ்பேர்க்கில் முதலாவது மக்கள் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதன் மூலம் பெப்ரவரி புரட்சி ஆரம்பமானது.
- 1919 - இத்தாலியில் பெனிட்டோ முசோலினி பாசிசக் கட்சியை ஆரம்பித்தார்.
- 1941 - புளூட்டோனியம் முதற்தடவையாக உருவாக்கப்பட்டது.
- 1944 - செச்னிய மற்றும் இங்குஷ் மக்கள் கட்டாயமாக மத்திய ஆசியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சின் தலைநகர் மணிலா அமெரிக்கப் படைகளினால் விடுவிக்கப்பட்டது.
- 1947 - அனைத்துலக தரநிர்ணய ஸ்தாபனம் (ISO) ஆரம்பிக்கப்பட்டது.
- 1966 - சிரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரசு கவிழ்க்கப்பட்டது.
- 1991 - தாய்லாந்தில் இராணுவத் தலைவர் சுந்தொங் கொங்சொம்பொங் தலைமையில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் பிரதமர் சட்டிச்சாய் சூன்ஹாவென் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1997 - ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையத்தில் தீவிபத்து ஏற்பட்டது.

**பிறப்புகள்**

- 1633 - சாமுவேல் பெப்பீசு, பிரித்தானியக் கடற்படைத் தளபதி (இ. 1703)
- 1868 - டபிள்யூ. இ. பி. டுபோய்ஸ், ஆபிரிக்க அமெரிக்க சமூக உரிமையாளர் (இ. 1963)
- 1915 - எஸ். ராஜரத்தினம், சிங்கப்பூரின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர்
- 1924 - அலன் கோர்மாக், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர். (இ. 1998)
- 1965 - மைக்கேல் டெல், டெல் நிறுவனத்தை ஆரம்பித்தவர்.
- 1954 - ராஜினி திராணகம, இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளரும் பெண் உரிமை செயற்பாட்டாளரும். (இ. 1989)

**இறப்புகள**

- **1503 - அன்னமாச்சாரியார், கர்நாடக இசைக் கலைஞர் (பி. 1408)**
- 1719 - சீகன் பால்க், ஜேர்மனிய மதகுரு (பி. 1682)
- 1821 - ஜோன் கீற்ஸ், ஆங்கிலக் கவிஞர் (பி. 1795)
- 1848 - ஜான் குவின்சி ஆடம்ஸ், ஐக்கிய அமெரிக்காவின் 6ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1767)
- 1855 - கார்ல் ஃப்ரெடெரிக் காஸ், கணிதவியலர் (பி. 1777)
- 1973 - டிக்கின்சன் ரிச்சார்ட்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர். (பி. 1895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....இந்தப் பூசாரிக்குப் பிறகு நிரந்தரமான பூசாரி யாரும் இங்கு இருப்பதில்லையாம். அமாவாசை, பௌர்ணமி தினங்களில் மட்டும் ஒருவர் மாற்றி ஒருவராக இரண்டு பூசாரிகள் இங்கு பூசையைத் தொடருகிறார்கள். மற்ற நாட்களில் பக்தர்கள் தம் விருப்பப்படி பூசை செய்து கொள்கிறார்கள்.

இராமதேவர் வருகைக்கு முன்னரே இவ்விடத்தில் இரட்டை லிங்கங்கள் அமைந்த செய்தியை சதுரகிரி தலபுராணம் தெரிவிக்கின்றது.

வானந்தன் கீழாக வுயர்சதுர கிரிதனிலே வணிகனான

வானந்த சுந்தரற்குச் சங்கரனா வவன் மனைவி

ஆண்டாளுக்குக்

கானந்த ருத்துளவ நாரணனாக் காட்சிதருங் கடவுளானார்

தானந்த விடத்திரட்டையிலிங்க மென நின்ற நிலை

சாற்றலுற்றாம்

-இரட்டை மகாலிங்கச் சருக்கம்

**இரட்டை மகாலிங்கம் தோன்றிய கதை**

வளங்கள் மிகுந்த கோபாலபுரம் என்னும் பட்டினத்தில் சகல ஆகம புராண சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த் ஆனந்த சுந்தரம் என்கிற பெரும் வணிகர் ஒருவர் இருந்தார். சிவ பெருமானைத் தவிர வேறு கடவுள் எதுவும் இந்த உலகத்தில் இல்லை என்னும் கொள்கையுடைய பெரும் சிவபக்தர் அவர்.

அவரது மனைவி ஆண்டாள் மிகச் சிறந்த அழகி. அழகுக்குத் தகுந்த குணவதியுமாவாள். அழகுக்கும், குணத்துக்கும் ஏற்ற கல்வி அறிவும் உடையவள். இவ்வளவு இருந்தும் கணவரின் சைவத்துக்கு மாறாக தீவிர வைணவ பக்தையாக விளங்கினாள். ஸ்ரீநாராயணனையன்றி வேறொரு கடவுளில்லை என்ற கொள்கையுடன் திருமாலையே முழுமுதற் கடவுளாக எண்ணி வழிபடலானாள்.

ஒரே வீட்டில் தினமும் கணவர் ஆனந்த சுந்தரம் சிவபூசை செய்துவர, மனைவியான ஆண்டாளோ தினசரி விஷ்ணு பூசை செய்து வந்தாள்.

மாறுபட்ட கடவுள்களை வணங்கினாலும், இருவரும் ஒற்றுமையாக இனிய இல்லறம் நடத்தி வந்தனர்.



கோரக்கர் குகை

ஒருநாள் தம்பதிகள் இருவரும் ஆகம, வேத, புராண நூல்கள் குறித்து பேசிக் கொண்டிருக்கையில் சிவபெருமானே பரம்பொருள் என ஆனந்த சுந்தரமும், விஷ்ணு தான் பரம்பொருள் என ஆண்டாளும் வாதம் செய்து கொண்டிருந்தனர்.

இருவருமே தத்தம் கொள்கை

**ஆன்மீகம் 42**

களை நிலைநாட்டத் தகுந்த எடுத்துக் காட்டுக்களைத் தந்து விவாதித்துக் கொண்டிருந்ததால் இருவர் நிலையும் ஒரு முடிவுக்கு வராத நிலையில் இருந்தது.

இறை உணர்வுகளைத் தவத்தினால் மட்டுமே அனுபவபூர்வமாக உணர முடியும். ஆதலால் இருவருமே தவம் செய்து அந்த அனுபவத்தைப் பெற விரும்பினர்.

உலகத்தில் ஞானியரெல்லாம் ஆத்ம ஞானத்தை அடைய வேண்டி மலைகளிலும் காடுகளிலும் தவம்புரிந்து, கடவுளுடைய தரிசனக் காட்சியைக் காண்கிறார்களே? அதுபோல நாமும் அரிய தவத்தைச் செய்து இதன் உண்மையைத் தெளிவோம் என்று முடிவு செய்து அவர்களது நகருக்குப் பக்கத்திலிருக்கிற சித்தகிரி என்னும் சதுரகிரிக்குச் சென்று சிறந்த தவமுனிவரான இராமதேவர் வனத்தில் பெரிய பசுத்தொழுவத்திற்குச் சமீபத்தில் அமர்ந்து உணவு ஏதும் உண்ணா மல் நீண்ட நாட்களாக பெரிய தவத்தைச் செய்து கொண்டிருந்தனர். இவ்விருவர் தவத்தைக் கண்டு மகிழ்ந்த சுந்தரமகாலிங்கர் அவர்களது சந்தேகங்களைப் போக்கத் திருவுளங்கொண்டு அவர்கள் முன்னே வந்து காட்சியளித்தார்.

(தொடரும்)




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



**54**

....வாகினி டப்பிங் தியேட்டர் நிலத்தைத் தொட்டு முத்தமிட்டார். வெளியே வந்ததும் நிறைய பேர் நின்றனர். பொலிஸ் பாதுகாப்பு வேறு. இரவு 11 மணி இருக்கும். சிலர் அங்கு வந்து மாலை போட்டனர்.

அப்போது கேட்டார் தலைவர்: "இந்த மாலை எனது திரை வாழ்க்கையின் முடிவுக்கா அல்லது ஆட்சியின் நாளை துவக்கத்துக்கா?"

எல்லோரும் மலைத்தனர்.

"இதுக்கு பதில் நானே சொல்கிறேன். இந்த சினிமா வாழ்க்கைக்கு நான் ரொம்ப கஷ்டப்பட்டு வந்தேன். எதுக்குன்னா கிடைச்ச வாழ்க்கையை காப்பாத்துறக்காக அரசியலுக்கு விரும்பி வரலே. ஒரு சபதத்துலே வந்தேன்.

சிலபேர் அதிகாரம் தன்கையிலே இருக்கிறதே பிறரை அழிக்கிறதுக்குன்னு நினைச்சாங்க. இல்லே... மத்தவங்களை கௌரவிக்கவும், காப்பாத்துறதுக்கு தான்னு காட்டத்தான் இதுலே குதிச்சேன்... வெற்றியடஞ்சுட்டேன்.

என் சினிமா வாழ்க்கையிலே மகாராஜனா, ஏன் ஒரு சக்கரவர்த்தியாகூட இருந்துட்டேன். நாளைக்கு அடையப்போறது மா மன்னன் எப்படி என் பிரமோஷன்? நாளைக்கு மந்திரியானாலும் வெறும் மந்திரி பதவிதான். ராஜாவை விட மந்திரி கீழேதான்.

இன்னிக்கி மைக்கை தொட்டும், இந்த மண்ணைத் தொட்டும் முத்தமிட்டது ஒரு இடைக்கால பிரிவுக்காகத்தான்... மீண்டும் வருவேன். இந்த படம்தான் என் திருப்திப்படம்.

எனது முதல் படம்- சதிலீலாவதி. அதில் ஒரு காவல் அதிகாரியா வருவேன். கடைசி படம் மன்னன்... எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆர் தான். அதுக்கு நீங்க எல்லோரும் தந்த மகத்துவத்தை நான் மறக்கமாட்டேன். நன்றி வணக்கம்."

செம்மல் விடைபெற்று, காவலர் புடைசூழ புறப்பட்டுவிட்டார். காரின் பின்புற சிவப்பு விளக்கில் நீர் முட்டிய பல்ரது கண்கள் ரத்தச் சிவப்பாய் தெரிந்தன...

**நான் ஆணையிட்டால்**



எங்கள் வீட்டுப்பிள்ளை படத்தில் எம்.ஜி.ஆர்.

நாடகமே உலகம். நாளை நடப்பதை யாரறிவார்? இந்த நியதியை மாற்றியவர் செம்மல்.

நாளை நடக்கப் போவதை அறிந்துதான் திரையில் பாடினார். திரை மூலம்தான் மக்களுக்குத் தூதுவிட்டார். எங்கள் வீட்டுப் பிள்ளையில் பாடியதைச் செயலாக்கினார். ஆணையிடும் நாளைக் கண்டார். அந்த நாளை உருவாக்கினார்.

பதவிக்கு முன் தகுதி. இது ,செம்மல் தனக்கே விதித்த விதி. ஆட்சிக்குள்ள பல குறிப்புக்களை எடுத்தார். ரஸ்ஸல் எழுதிய பவர் என்ற புத்தகத்தை மொழி பெயர்த்துக் கேட்டார். அது சட்டம். அரசியல் பற்றிய நூலாக இருந்ததால் திரு.மோகனரங் கம் அவர்களிடம் இப்பணியைச் செய்யச் சொன்னார் செம்மல்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெனிசுலாவைப்போன்று இலங்கைக்கும் அழுத்தம்

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

(கொழும்பு)

வெனிசுலாவைப் போன்றே இலங்கை அழுத்தங்களை எதிர் நோக்கி வருவதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித் துள்ளார்.

வெனிசுலாவின் ஜனாதிபதி நிகலோஸ் மாடுரோவின் ஆட்சியை கவிழ்ப்பதற்கு அமெரிக்கா கடுமை யான முயற்சி மேற்கொண்டதாக வும், அதேவிதமான முனைப்பு க்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெனிசுலாவின் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக அமெரிக்கா உள்ளூர் சக்திகளுக்கு பணம் வழங்கி யதோடு மனிதவுரிமைப் பிரச்சி னையை காரணம் காட்டி நாட்டு க்குள் கலகத்தையும் குழப்பங் களையும் ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் இரட்டை நிலைப்பாட்டினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றென தெரிவித்துள்ள அவர்,

நாட்டுக்கு எதிராக சூழ்ச்சி செய்த மூன்று அமெரிக்க இராஜதந்திரி களை நாட்டை விட்டு வெளியேறு மாறு வெனிசுலா கோரியிருந்ததா கவும் இத் தீர்மானம் வரவேற்க ப்பட வேண்டியது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-9)

# பகிரங்க விவாதத்திற்கு வருமாறு வர்த்தக அமைச்சருக்கு அழைப்பு

இலங்கையில் ஐயாயிரம் ரூபா வுக்கு ஐந்து ரூபா பெறுமதியான பொலித்தீன் பை ஒன்றில் மாத்திரமே அத்தியாவசிய பொருட்களை கொள் வனவு செய்ய முடியும் என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ள தென நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ செய்தியாளர் சந்திப் பொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன ஸ்டன் பெர்ணான்டோ அண்மையில் ஒரு யூரியா பை ஒன்றில் பொருட் களை கொண்டு வந்து, அதனை செய்தியாளர்கள் மத்தியில் காட்டி இந்த 50 கிலோ எடையை கொண்ட பையில் உள்ள பொருட்கள் ஐயாயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப் பட்டது என்று கூறினாா.

ஏற்கனவே நாடாளுமன்ற உறுப் பினர் கரு ஜெயசூரிய, ஐயாயிரம் ரூபா வுககு ஐந்து ரூபா பையிலேயே பொருட்களை கொள்வனவு செய்யும் அளவுக்கு இலங்கையில் பொருட் களின் விலைகள் அதிகரித்திருப்பதை சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையி லேயே ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ 50 கிலோ பையில் பொருட்களை கொண்டு வந்து காண்பித்திருந்தார்.

அதில் கோழி இறைச்சி, பால்மா, பருப்பு, அரிசி, மாசி உள்ளிட்ட பொருட் களையும் காண்பித்த அவர் கரு ஜெயசூரியவுக்கு ஒரு ரூபா பை அள வுக்கு கூட மூளையில்லை என்று குறிப்பிட்டார்.

இந்தநிலையில் நேற்று முன் தினம் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் தகவலை நிராகரித்தார்.

அமைச்சர் கொண்டு வந்த பொருட் களுக்கு சிட்டையை காட்டவில்லை என்றுஹரின்பெர்ணான்டோ கூறினார்.

எனினும் தாம் இன்று ஐயாயிரம் ரூபாவுக்கான நான்கு பேர் சாப்பிடக் கூடிய மூன்று நாட்களுக்கான பொருட் களை ஐந்து ரூபா பையில் கொண்டு வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதில் இரண்டு கிலோ அரிசி பருப்பு, மாசி, கிழங்கு, டின் மீன் மற் றும் இரண்டு தீப்பெட்டிகள் உட்பட்ட பொருட்களே உள்ளதாக ஹரின் பெர் ணான்டோ தெரிவித்தார்.

எனவே இந்த பொருட்களின் விலைகள் அதிகரிப்பு தொடர்பாக பகி ரங்க விவாதத்துக்கு வருமாறு ஹரின் பெர்ணான்டோ, ஜோன்ஸ்டன பெர்ணா ண்டோவுக்கு சவால் விடுத்தார (அ-9)

# ஆயுதக்குழுக்களை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இயங்கும் ஆயு தக் குழுக்களை கட்டுப்படுத்து வதற்கான நடவடிக்கைகளை அர சாங்கம் மேற்கொண்டிருப்பதாக அரசாங்க தகவல் திணைக்களத் தின் அறிக்கை ஒன்றில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற் றும் நல்லிணக்க ஆணைக்குழுவின பரிந்துரையை அமுலாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

யுத்த காலத்திலும், யுத்த காலத் தின் பின்னரும் பல்வேறு ஆயுதக் குழுக்கள் நாட்டின் பல பகுதிகளில் இயங்கி வந்தன.

அவற்றை கட்டுப்படுத்தும் தேசிய வேலைத்திட்டம் ஒன்று முன்னெடு க்கப்படுகிறது.

இது தொடர்பில் அரசாங்கத்தினால நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு ஒன்று வழங்கிய அறிக்கையின அடிப் படையில், அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வின் பரிந்துரை அடிப்படையில், இல ங்கையில் சட்ட ஒழுங்கை பாதுகாக் கும் வகையில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது என அவ்வறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (அ-9)

# சந்தனக் கட்டை கைப்பற்றப்பட்டுள்ளது

டுபாய் நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட கொள்கலனில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந் தொகை யான சந்தன கட்டைகளை, சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பு வழியாக பிறிதொரு நாட்டுக்கு எடுத்து செல்வதற்காக கொள்கலன் மாற்றப்பட்ட போது அதில் சந்தன கட்டைகள் மறைத்து வைக்கப்பட்டிருப்பது கண்டுப் பிடிக் கப்பட்டதாக சுங்க திணைக்களத்தின பேச்சாளர் லெஸ்லி காமினி தெரி வித்துள்ளார்.

10 ஆயிரத்து 360 கிலோ கிராம் எடை கொண்ட இந்த சந்தன கட் டைகள் 200 பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.


இதன் பெறுமதி 220 மில்லி யன் ரூபா எனவும் சுங்க திணைக் களத்தின் பேச்சாளர் தெரிவித்துள் ளார். (அ-9)


# எழுவரின் விடுதலையை கண்டித்து உண்ணாவிரதம்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழ க்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 7 பேரை யும் விடுதலை செய்வதற்கு தமிழக அரசு எடுத்துள்ள முடிவை கண் டித்து ராஜீவ் காந்தியுடன் உயிரி ழுந்த 15 தமிழர்களுக்கும் நீதி கேட் டும் இளைஞர் காங்கிரஸ் சார்பில் சென்னையில் உண்ணாவிரதம் நடத்தப்படுகின்றது.

அண்ணாசாலை மின்சார வாரியம பின்புறம் உள்ள வீதியிலே உண் ணாவிரதம் நடத்தப்பட்டுள்ளது. உண் ணாவிரத பந்தலை சுற்றி ராஜீவ் காந்தி மார்பில் சிறுபிள்ளையாக ராகுல்காந்தி சாய்ந்து இருக்கும் காட்சி, ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்து படு கொலை செய்யப்பட்டு கிடந்த காட்சிகள என்பன பதாகைகளாக வைகக்ப்பட் டுள்ளன.

உண்ணாவிரதத்துக்கு இளைஞர காங்கிரஸ் பொதுச்செயலாளர் நாசே ராஜேஷ் ஏற்பாடு செய்து தலைமை தாங்கிகொண்டுள்ளார். (அ-9)





யா/ஆனைப்பந்தி மெ.மி வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் நடை பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பழைய மாணவன் ஜோ.சிவராம சர்மாவுக்கு அதிபர் ஞாபகப்பரிசு வழங் குவதையும் படங்களில் காணலாம்.

# சுபீட்சமான வாழ்வுக்காகவே மக்கள் அரசை ஆதரித்தனர்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

நாட்டின்உயர்பொலிஸ்பதவிகளை வகிக்கும் அதிகாரிகளே கூலிப படை யாகசெயற்படும்போதுசட்டம்ஒழுங்கை எவ்வாறு நிலை நாட்ட முடியுமென ஜே.வி.பி கேள்வி எழுப்பியுள்ளது.

கம்பஹாதிவுலபிட்டிய பிரதேசத் தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன் றில் பங்கு கொண்ட போதே ஜே.வி. பியின் பிரசார செயலர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார். மேலும் கருத்து வெளியிடுகையில்,

சுபீட்சமான எதிர்காலத்தை கருத்திற் கொண்டே மக்கள் இந்த அர சாங்கத்திற்கு வாக்களித்தனர். எனினும், உயர் பொலிஸ் அதிகார1 கள பணத்திற்காக கொலை செய் கின்றனர்.

இவ்வாறான ஓர் பின்னணியில நாட்டின் சட்டம் ஒழுங்கு பற்றி பேசுவதில் அர்த்தமில்லை.

எதிர்வரும் மார்ச் மாதம் 28ஆம் திகதி இலங்கை நேரப்படி மாலை 7 மணியளவில் ஜெனீவாவில் நாட்டுக்கு எதிரான தீர்மானம் குறித்த வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

29ஆம் திகதி காலையில் மேல் மற்றும் தென் மாகாணசபைத் தேர் தல்கள் நடைபெறவுள்ளன.

அரசாங்கம் தேர்தல் தினத்தை எவ்வாறு தீர்மானித்துள்ளது என்பது இப்போது உங்களுக்கு விளங்கியி ருக்கும்.

தேர்தல் நடைபெறும் தினத்தை தேர்தல ஆணையாளர் அறிவிப்பத ற்கு முன்னதாகவே அமைச்சர் மஹிந்த யாபா அபேவர்தன அறி வித்திருந்தமை தனது பணி களை புறந்தள்ளிவிட்டு தேர்தல் ஆணை யாளரின் கடமைகளை அவர் செய்ய முயற்சிக்கின்றமையை காட்டுகின் றது.

அரசாங்கத்தினால் மக்களின் மெய்யான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாத நிலைமை ஏற் பட்டுள்ளது.

போர் இடம்பெற்ற காலத்தில் செலவு காரணமாக பொருட்கள்சேவை களுக்கான விலையை குறைக்க முடியவில்லை என அரசாங்கம் அறி வித்திருந்தது.

போர் இடம்பெற்ற 2008-2009 ஆம் ஆண்டில் ஒரு கிலோ சீனி 42 ரூபாவாகும்.

தற்போது போருக்கான செலவுகள் இல்லை எனினும் ஒரு கிலோ சீனியின் விலை 105 ரூபாவாகும்.

நாம் பயன்படுத்தும் சீனி பெரு மளவு இறக்குமதி செய்யப்படு கின் றது. இந்த இறக்குமதி செய்யப் படும் ஒரு கிலோ சீனிக்கு 30 ரூபா வரி அறவீடு செய்யப்படுகின்றது என் றார். (அ-9)

# மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கக்கூடாது

## ஜெயலலிதாவின் செயல் உதாரணமாம்

இலங்கையின்வடக்கு மாகாணம் இந்தியாவின் 30ஆவது மாநிலம் அல்ல என தேசிய சுதந்திர முன் னணி தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணமானது இந்தி யாவின் ஒரு மாநிலம் அல்ல என் பதனை முதலமைச்சர் விக்னேஸ் வரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு நினைவு படுத்த வேண்டியுள்ளது என கட்சி யின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கப்பல் மற்றும் விமான சேவைகளை நேரடியாக ஆரம்பிப்பது தொடர்பில் வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


இந்த தீர்மானங்கள் அரசியல் சாசனத்திற்கு விரோதமானது. காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் வடக்கு மாகாணசபை தேர்தலை நடத்தினால் பிரிவினை வாதம் தலைதூக்கும் என சுட்டிகாட்டியிருந தோம்.

அதேபோல்வடக்கு மாகாண சபை பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றது.


தமிழக முதல்வர் ஜெயலலிதா எமக்கு பாடம் கற்பித்துள்ளார். இம் மாநில அதிகாரங்களை பயன்படுத் தியே அவர் ராஜீவ் கொலையாளி களை விடுதலை செய்ய அவர் முயற்சிக்கின்றார்.

இலங்கையில் மாகாண சபை களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங் கினால நாடு பிளவுபடக் கூடிய அபா யம் காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலய இல்லமெய்வல்லுநர் திறனாய்வு விளையாட்டு போட்டி நிகழ்வில் யாழ்.கல்வி வலய பணிப் பாளர் செ.உதயகுமார், நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவர் அ.இரவீந்திரதாசன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் விளையாட்டு வீரர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.






நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றபோது...

யாழ்.கரவெட்டி, கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வீராங்கனை ஒருவருக்கு கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.






யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் அணிநடை நிகழ்வையும் வெற்றிபெற்ற லின்ஸ் இல்ல மாணவன் வெற்றிக்கேடயம் பெறுவதையும் ப்டங்களில் காணலாம்.








கிளி/இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு திருமதி இ.சூரியகுமாரி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் அணிநடை நிகழ்வையும் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.





பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க. த.க.பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைபோட்டி அதிபர் அருட் சகோதரி மேரிலாசர் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினரான சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப் படுவதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வையும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை காப்பாற்றுமா இந்தியா?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எப்போதெல்லாம் இலங்கை விவகாரம் தலையெடுக்கிறதோ, அப்போதெல்லாம் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்ற கேள்வி எழுவது வழக்கம். இதுபோருக்குப் பிந்திய நிலை மட்டுமல்ல, போரின் போதும் கிட்டத்தட்ட இதே நிலைதான் இருந்தது.

1980களின் நடுப்பகுதியில் போர் தீவிரம் பெறத் தொடங்கிய காலத்தில், இலங்கையின் பொலிஸ் விசேட அதிரடிப்படைக்கு பிரித்தானியா பயிற்சி அளித்தது. இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி, பிரித்தானியப் பிரதமர் மார்க்கிரட் தட்சருக்கு அந்தப் பயிற்சிகளை நிறுத்தும்படி அப்போது அழுத்தம் கொடுத்திருந்தார்.

இலங்கை அந்தக் காலகட்டத்தில் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட மேற்குலகின் பக்கம் நின்றது. இந்தியாவோ, ரஷ்யாவின் பக்கம் சார்ந்திருந்தது.

இப்போது நிலைமை தலைகீழாகிவிட்டது. கிட்டத்தட்ட அமெரிக்காவின் பக்கம் இந்தியா நிற்கிறது. ரஷ்யா, சீனாவின் பக்கத்தில் இலங்கை இருக்கிறது.

என்றாலும், 1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் கையை மீறி எதுவுமில்லை என்ற நிலை உருவாகிவிட்டது.

இந்தியாவின் கருத்தை அறியாமல், இலங்கையில் போரின் போதும் சரி, சமாதான முயற்சிகளின் போதும் சரி, எந்தவொரு நாடும் நேரடியாகத் தலையிட விரும்பியதில்லை. இப்போதும்கூட, இலங்கை மீது தனக்கு எந்த ஆளுமையும் கிடையாது என்று இந்தியா கூறினாலும் இலங்கை விவகாரத்தில் எத்தகைய நகர்வுகளில் இறங்க முன்னரும், இந்தியாவைக் கலந்தாலோசனை செய்ய முனைகின்றன.

அதனால்தான், ஜெனிவாவில் இலங்கை விவகாரத்தை தூக்கிப்பிடிக்க முனையும் போதெல்லாம், இந்தியா எந்தப் பக்கம் நிற்கிறது, அதன் நிலைப்பாடு என்ன என்று கேள்விகள் எழுகின்றன.

அண்டை நாடான இலங்கை மீது இந்தியா, பெரியளவில் செல்வாக்குச் செலுத்தும் நிலையில் உள்ளதாக குறிப்பிட முடியாவிட்டாலும் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதை அறிவது பெரும்பாலான நாடுகளினது எதிர்பார்ப்பாக உள்ளது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா எடுக்கும் முடிவை மதிக்கும் நிலையில், வேறும் பல நாடுகள் இருப்பதும், இத்தகைய கேள்விகள் எழுவதற்கு இன்னொரு காரணம்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை முன்வைக்கும் அமெரிக்காவைப் பொறுத்தவரையில் இதற்கு முந்திய இரண்டு முறை தீர்மானங்களை முன்வைத்த போதும், இந்த முறையும் இந்தியாவினது கருத்தை அறிவதில்- அதன் ஆதரவைத் திரட்டுவதில் முக்கிய கவனம் செலுத்தியது. இப்போதும், அப்படியே செய்து வருகிறது.

கடந்த மாத இறுதியில் ஜெனிவா தீர்மானம் குறித்த ஆலோசனைகளுக்காக கொழும்பு, லண்டன், ஜெனிவா நகரங்களுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், புதுடெல்லிக்குப் பயணம் மேற்கொள்ளாதது பலரது புருவங்களையும் உயர்த்தியது.

ஆனால், ஜெனிவா சென்று, அவர் முக்கியமாக கலந்துரையாடியது இந்தியப் பிரதிநிதி திலிப் சின்ஹாவுடன்தான் என்பது பெரும்பாலும் வெளியே வராத இரகசியம்.

நிஷா தேசாய் பிஸ்வால் தம்மைச் சந்தித்ததை மட்டும், இந்தியன் எக்ஸ்பிரசிடம் உறுதிப்படுத்திய ஜெனிவாவுக்கான இந்தியப் பிரதிநிதி திலிப் சின்ஹா, மேலதிகமாக ஒரு வார்த்தையையும்கூட வெளியிட மறுத்துவிட்டார்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு இந்தியாவினது ஆதரவைப் பெறுவதுதான், இந்தச் சந்திப்பின் நோக்கம் என்பதில் எவ்விதம் சந்தேகமும் இல்லை.

இந்தியாவினது ஆதரவை உறுதிப்படுத்திக் கொண்டால், இந்த தீர்மானத்தை நிறைவேற்றும் முயற்சியில் பாதிக்கிணறைத்தாண்டிவிடலாம் என்றே அமெரிக்கா கருதுகிறது.

இத்தகைய பின்புலத்தில் தான், கடந்த வாரம் புதுடெல்லிக்கு அழைக்கப்பட்ட கொழும்பு ஊடகவியலாளர்களுடன், சவுத் புளொக் விரிவான கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது.

ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், சில விடயங்களைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

அவை அனைத்தும், ஜெனிவாவில் இலங்கைக்கு இந்தியா ஆதரவளிக்காது என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டும் வகையில் அமைந்தவை. இந்தியாவில் அடுத்த மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றத் தேர்தல் வரவுள்ளது. அதில், இந்த ஜெனிவா தீர்மானம் தாக்கம் செலுத்தும் ஒன்றாக இருக்கும். எனவே, ஜெனிவா தீர்மானம் குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டில், நாடாளுமன்றத் தேர்தலின் நிழல் கவிந்திருக்கும் (தாக்கம்) என்று சல்மான் குர்ஷித் குறிப்பிட்டிருந்தார்.

அவர் அவ்வாறு கூறியது, இந்த முறையும் இந்தியா கொள்கை ரீதியான முடிவை எடுப்பதற்குப் பதிலாக முற்றிலும் அரசியல் ரீதியான முடிவையே எடுக்கும் என்பதைத்தான்.

கடந்த இரண்டுமுறை, கூட்டணிக் கட்சிகளின் அழுத்தங்களுக்கு அடி பணிந்தே, இந்திய அரசாங்கம் ஜெனிவா தீர்மானத்தை ஆதரிக்கும் முடிவை கடைசி நேரத்தில் எடுத்தது.

இருந்தாலும், இந்தியா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, அமெரிக்கத் தீர்மான வரைவை நீர்த்துப் போகச் செய்துவிட்டதாக பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

ஆனால், இந்தியா அதை மறுத்தே வந்துள்ளது.

இந்தமுறை, தேர்தலை எதிர்கொள்ளவுள்ள நிலையில், தமிழ்நாட்டில் தமக்கான கூட்டணி ஒன்றை அமைத்துக்கொள்வதற்கும், தேர்தலில் பெருந்தோல்வி ஏற்படாமல் தவிர்த்துக் கொள்வதற்கும் ஜெனிவா விவகாரத்தில் புதுடெல்லி அனுசரித்தே போக வேண்டிய நிலையில் உள்ளது.

அதேவேளை, ஜெனிவா தீர்மானத்தை இந்தியா நீர்த்துப்போகச் செய்துவிடும் என்று இம்முறையும் இலங்கை அரசாங்கம் பலமாக நம்பியதாக தெரிகிறது.

ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமானவராகிவிட்ட அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, சில நாட்களுக்கு முன்னர் அளித்தபேட்டி ஒன்றில், அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா நீர்த்துப் போகச் செய்துவிடும் என்று உறுதியான நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் வெளியிட்ட கருத்துக்கள், அரசாங்கத்தின் இந்த நம்பிக்கையில் மண் அள்ளிப் போட்டுவிட்டதாகவே தெரிகிறது.

அரசாங்கத்தின் ஏமாற்றத்தை கடந்த வாரம் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வெளிப்படுத்தியிருந்தார்.

சல்மான் குர்ஷித்தின் கருத்துக்கள், இந்தியா மற்றொரு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுவதான சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அவர் கூறியிருந்தார்.

இப்போதைய நிலையில், ஜெனிவா என்பது இலங்கைக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் பொறிதான்.

ஜெனிவா குறித்து புதுடெல்லி எடுக்கப்போகும் முடிபு, இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நலன் சார்ந்த ஒன்றாகவே இருக்கும் என்ற கருத்து ஏற்கனவே வலுவடைந்திருந்த சூழலில்தான் அதனை இந்திய வெளிவிவகார அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜெனிவா தீர்மானத்தை ஆதரிக்க இந்தியா முடிவு செய்தால், அது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளை மேலும் சிக்கலடையச் செய்யும் என்று கொழும்பு கருதுவதாகத் தெரிகிறது.

இது இந்தியாவுக்கு சிக்கலானது. அது சீனா பற்றிய பயத்தை இந்தியாவுக்கு மேலும் அதிகரிக்கச் செய்துவிடும்.

இலங்கையில் சீனத் தலையீடுகள் குறித்து, இந்தியா அச்சம் கொள்ளவில்லை என்றும் அதைப் பெரிய விவகாரமாகவே எடுத்துக் கொள்ளவில்லை என்றும் இந்திய வெளிவிவகார செயலர் சுஜாதாசிங் அண்மையில் கூறியது உண்மையான கருத்தல்ல.

இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிக்க மறுத்தால், அவர்கள் சீனாவுக்கு அனுப்பப்படுவார்கள், இலங்கைக்கு இந்தியா உதவ மறுத்தால் அதற்குள் சீனா நுழைந்துவிடும் என்றெல்லாம் கூறி, இலங்கைக்கான இராணுவ, அரசியல் உதவிகள் அனைத்தையும் நியாயப்படுத்தி வந்தது இந்திய அரசாங்கமும் அமைச்சர்களும்தான்.

திடீரென இப்போது, சீனா பற்றி அச்சமில்லை என்று இந்தியா கூறுவது வேடிக்கையானது.

எவ்வாறாயினும் இலங்கைக்கு எதிரான அணியில், வரிசை கட்டப்போகும் இந்தியாவுக்கு எதிரான அணியிலேயே சீனாவும் நிற்கிறது.

ஆனாலும், இந்த முறையும் சீனாவுக்காக உள்ளூர் அரசியல் நலன்களைத் தியாகம் செய்வதற்கு புதுடெல்லியில் ஆளும் காங்கிரஸ் கட்சி தயாராக இல்லை.

ஜெனிவா விவகாரத்தில் இந்திய நிலைப்பாடு, அமெரிக்காவுக்கு சாதகமாக மாறி வருவதையே சல்மான் குர்ஷித்தின் கருத்துக்கள் புலப்படுத்தியுள்ளன.

அதிலும் தீர்மானம் குறித்து மேற்குலகுடன் இலங்கை பேச வேண்டும் என்றும் அவர்களின் நம்பிக்கையைப்பெற வேண்டும் என்றும் ஆலோசனை கூறியுள்ளது.


இதன் மூலம், சர்வதேச நம்பகத்தன்மையை பெறுவதற்கு இலங்கை தவறிவிட்டது என்பதை சல்மான் குர்ஷித் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவையெல்லாம் இலங்கை அரசுக்கு கசப்பான விடயங்களாகவே தெரிகின்றன.

ஆனாலும், சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவு இருக்கும் தைரியத்தில், இலங்கை அரசாங்கம், இந்தியாவின்து கருத்துக்களையும் நிலைப்பாட்டையும் பொருட்படுத்தாமல், ஜெனிவா தீர்மானத்துக்கு சவால் விடுவதிலேயே கவனத்தை செலுத்தி வருகிறது.

இது இன்னொரு முறை, சர்வதேச அரங்கில் மூக்குடைபடுவதற்கான முன்னோட்டமாகவே தெரிகிறது.

-கே.சஞ்சயன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு பாக்.வாகனங்கள்

பாகிஸ்தானில் இந்துஸ் மோட்டர்ஸ் நிறுவனத்தினால தயாரிக்கப்பட்ட 100 டொயடா கொரலா (Altis) கார்களை இலங்கை பொலிஸ் மற்றும் இராணுவத்தினரிடம் கையளிக்கும் வைபவம் நேற்று முன்தினம் இலங்கை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச் சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கலந்து கொண்டதோடு, இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் காஷிம் குரைஷி, இலங்கையின் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயாரத்நாயக்க, இலங்கை பொலிஸ் படை தளபதி என். கே. இலங்கக்கோன ஆகியோர் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர். (அ்-2)

# மொழி, கலாசார பண்பாடுகளூடாகவே இனங்களிடையே ஒற்றுமை ஏற்படும்

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சிங்கள மொழி மாத்திரமின்றி தமிழ் மொழியும் தாய் மொழியாகும். எனவே இந்நாட்டில் இரண்டு தாய் மொழிகள் உள்ளன. அவற்றை கற்று சமூக மாற்றத் திற்கு வித்திட வேண்டும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசு தேவ நாணயக்கார சுட்டிக் காட்டியுள்ளார்.

அரச கரும மொழிகள் திணைக் களத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்நாட்டில் நிலை கொண்டுள்ள இனப் பிரச்சினைக்கு மொழியே பிரதான காரணமாகும். இந்த வைபவத்தில் தமிழ் மொழியில் சித்தியடைந்த சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியில் உரை நிகழ்த்தினர். 3 தமிழ் பாடல்களுக்கு நடன மாடியுள்ளனர்.

இருப்பினும் கடந்த காலங்களில் இவ்வாறான நிலைமை காணப்படவில்லை. இதன் காரணமாகவே இனப்பிரச்சினைக்கான சூழல் அதிகரிக்கப்பட்டது.

வடக்கு தமிழர்களுக்கு சிங்களம் தெரியாது, தெற்கு சிங்களவர்களுக்கு தமிழ் தெரியாது.

இதன் காரணமாக நாடு மொழி ரீதியாக இரண்டாக பிளவு பெற்று காணப்பட்டது.

அதுமாத்திரமின்றி வரலாற்றில் இனப்பிரச்சினை தோன்றியமைக்கும் மொழியே காரணம் என்பது இரகசியமல்ல.

எனவே மொழி ரீதியாக பிளவு பெற்ற இந்நாட்டை அதனூடாக ஐக்கியப்படுத்த வேண்டும்.

ஆகவே இந்நாட்டை மொழி கலாசார பண்பாடுகளினூடாகவே இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.


இனங்களுக்கிடையே இத்தகைய மாற்றத்தினை பாடசாலையினூடாக ஏற்படுத்தினாலேயே எதிர்காலச் சந்ததியினர் இன ரீதியாக பிளவுபடாமல் ஐக்கிய இலங்கைக்குள் ஒற்றுமையாக வாழ்வார்கள்.

நமது சமூகம் ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் வழங்குவதனை போன்று தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

இந்நாட்டில் சிங்கள மொழி மாத்திரமின்றி தமிழ் மொழியும் தாய் மொழியாகும்.

எனவே இந்நாட்டில் இரண்டு தாய் மொழிகள் காணப்படுகின்றன. ஆகவே மொழியினூடாகவே சமூக மாற்றத்தினை வித்திடமுடியும் என்றார். (அ-9)



காலவெளி கலை இலக்கிய சஞ்சிகையின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் பொலிகண்டி கடற்தொழிலாளர் சங்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது...

## செயற்பாட்டு குழுவின் தலைவராக ஜனாதிபதி

பொதுநலவாய நாடுகளின் 2015ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி இலக்கை அடைவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட செயற்பாட்டுக் குழுவின் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் செயலகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது, ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ சம்பந்தப்பட்ட குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், சைப்ரஸ், கிரனடா, சியாராலியோன், டொங்கோவா, தன்சானியா ஆகிய நாடுகளில் தலைவர்கள் இந்த குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (அ-2)

# சமூக வலைத்தளங்களை தடைசெய்யமுடியாது

## ஆராய்ந்த பின்பே நடவடிக்கை கெஹலிய

(கொழும்பு)

சமூக வலைத்தளமான 'பேஸ்புக்' கினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தடுக்கும் வகையிலான கட்டுப்பாடு இலங்கைக்கு அவசியமென தகவல் ஊடகத்துறையமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இருப்பினும் இந்த கட்டுப்பாட்டினை நாட்டின் தகவல் தொழில் நுட்பத்தில் பாதிப்பினை ஏற்படுத்தாத வகையில் எவ்வாறு செயற்படுத்தலாமென்பது குறித்து தான் ஆராயத் தொடங்கியிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு தகவல் ஊடகத்துறைய மைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் போது பேஸ்புக்கின் காரணமாக எமது நாட்டில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு மரணங்கள் குறித்து அமைச்சரிடம் கேள்வி



யெழுப்பப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். பேஸ்புக் இன்று சர்வதேச பிரச்சினையாகியுள்ளது.

இது 95 சதவீத தகவல் சாதனமாகவுள்ள போதும் 5 சதவீதம் பாதிப்பினை ஏற்படுத்தும் ஒரு விடயமாகவே அடையாளம் காணப்பட்டுள்ளது.

பாதிப்புகளை தடுக்கும் வகையில் இதன் பாவனையை இலங்கையில் தடை செய்தால் தகவல் தொடர்பாடல் பாதிக்கப்படக்கூடும். இது சமூக ஊடகத்துடன்தொடர்புபட்ட விடயமாகையால்அவதானத்துடன்கையாள வேண்டியுள்ளது.

எடுத்த எடுப்பிலேயே இது தொடர்பில் அரசாங்கத்தினால் எந்தவொரு முடிவையும் எடுக்க இயலாது. அவ்வாறு எடுக்கும் பட்சத்தில் இலங்கையில் ஊடக சுதந்திரம் இல்லையென்ற கருத்துக்கு அது வழிவகுக்கும்.

எனவே சமூக ஊடகம் தொடர்பிலான பிரகடனத்திற்கமைய நாம் தீர்மானங்களை மேற்கொள்வோம். அது தொடர்பிலான நிலைமைகளை நான் ஆராயத்தொடங்கியுள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பெற்றோர் தமது பிள்ளைகள் இணையத்தளம் மற்றும் பேஸ்புக்கினை எந்தவகையில் உபயோகித்து வருகிறார்களென்பது குறித்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது அவசியமெனவும் பொலிஸ் பேச்சாளருமான பொலிஸ்அத்தியட் சகருமான அஜித் றோஹண கேட்டுக் கொண்டுள்ளார். (அ-2)

## தமிழக அரசின் முடிபுக்கு காய்கறிகள் இலவசமாக வழங்கி கொண்டாட்டம்

(சென்னை)

முருகன், நளினி, சாந்தன் உள்ளிட்ட 7 பேரை தமிழக அரசு விடுதலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதையடுத்து, மதுரை காய்கறி வியாபாரிகள் வினோதமான முறையில் கொண்டாடினர்.

பல ஆண்டுகளாக சிறைத் தண்டனை அனுபவித்து தூக்கு மேடை வரை சென்று திரும்பியுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன் உள்ளிட்ட 7 பேரை தமிழக அரசு வடுதலைசெய்யவுள்ளதாக அறிவிததிருந்ததை அடுத்து மதுரை புதூர் மரக்கறி சந்தை வியாபாரிகள் சுமார் 450 கிலோ தக்காளிகளையும் 50 இற்கும் மேறபட்ட கொத்தமல்லி கட்டுக்களையும், இனிப்புகளையும் பொது மக்களுக்கு இலவசமாக விநியோகித்து கொண்டாடினார்கள்.

இந்த வினோதமான மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

தூக்கு தண்டனையில் இருந்து விடுதலை செய்யபட்ட சம்பவத்தால் தமிழகம் முழுவதும் வெற்றிகரமாக பொது மக்களும் பல்வேறு தமிழ் அமைப்புகளும் கொண்டாடி வருகின்றன.

மதுரை, புதூரிலுள்ள சந்தை வியாபாரிகளும் பொது மக்களுக்கு இலவசமாக தக்காளி மற்றும் கொத்தமல்லி தழைகள் கொடுத்தும், இனிப்புகள் வழங்கியும் தங்களது மகிழ்ச்சிகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆயினும் தற்பொது இவர்களுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

## பகிரங்க விவாதத்திற்கு வாருங்கள்-கிரியெல்ல

மனிதவுரிமைகள் சம்பந்தமாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள சர்வதேச அழுத்தங்கள் தொடர்பாக விவாதிக்க பகிரங்க விவாதத்திற்கு வருமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கடிதம் ஒன்றின் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த விவாதம் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிப்பரப்பப்பட வேண்டும் எனவும் இதன் மூலம் இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் சம்பந்தமாக சர்வதேசத்தில் கொடுக்கப்படும் அழுத்தங்கள் தொடர்பில் உண்மை நிலைமையை அறிந்து கொள்ள முடியும் எனவும் கிரியெல்ல தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனில் தொடரும் கலவரம்; இதுவரை 75 பேர் உயிரிழப்பு



உக்ரைனில் தொடர்ந்து கலவரம் நீடித்து வருவதால் தனது தூதரகத்தை கனடா மூடியுள்ளது.

உக்ரைனில் ஜனாதிபதிக்கு எதிராக போராட்டங்கள் நடந்து வருகிறது. இதுவரையிலும் 75 பேர் பலியாகியுள்ளனர்.

இந் நிலையில் கன்டா தனது தூதரகத்தை தற்காலிகமாக மூடுவதாக அறிவித்துள்ளது.


புகலிடம் தேடி கனடா தனது தூதரகத்திற்குள் போராட்டக்காரர்கள் நுழைய முயன்ற அடுத்த நாளில் இந்த முடிபை எடுத்துள்ளது.

இது தொடர்பாக கனடாவின் வெளி விவகாரத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஆடம் ஹோட்ஜ் கூறுகையில், கனடா தூதரக அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு முன்னெச்சரிக்கையாக தூதரகம் மூடப்பட்டிருக்கும்.

அச்சுறுத்தல், சிறைப்பிடிப்பு அல்லது ஏனைய தொந்தரவுகளில் இருந்து போராட்டக்காரர்கள் விடுபட வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் சுமார் ஒன்றேகால் இலட்சம் கனடா நாட்டினர் வசிப்பதாக கூறப்படுகிறது. (அ)

# வெற்றிகரமாக இலக்கை தாக்கியது ஆகாஷ் ஏவுகணை



தரையில் இருந்து விண் வெளிக்கு பாய்ந்து சென்று தாக்கும் "ஆகாஷ்" ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்தது.

ஆகாஷ் ஏவுகணை முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டது.

60 கிலோ எடையுள்ள ஆயுதங்களை சுமந்து 18 கி.மீ உயரத்திற்கு சென்று, 25 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இலக்கையும் வீழ்த்தும் அதிநவீன ஆற்றல் படைத்த ஆகாஷ ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

ஒடிசாவின் பலசோர் பகுதியை அடுத்த சந்திபூர் சோதனை தளத்தில அமைக்கப்பட்டுள்ள ஏவுகணை தளத்தில் இருந்து இந்த ஏவுகணை ஏவப்பட்டது.

'லக்ஷயா' என்ற ஆளில்லா விமானத்தின் உதவியுடன், தொங்க விடப்பட்ட மிதக்கும் இலக்கினை வெற்றிகரமாக தாக்கி அழித்ததாக இந்திய இராணுவத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# நமோ டீயை தொடர்ந்து வருகிறது ராகா பால்

பாஜக பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியின் டீ பிரசாரத்திற்கு பதிலடியாக, காங்கிரஸ் ராகா பாலை தொடக்கியுள்ளனர்.

நரேந்திர மோடியை டீக்கடைக் காரர் என்று குறிப்பிட்டு , டீக்கடைக் காரர் பிரதமர் ஆகலாமா என்று கேள்வி எழுப்பி காங்கிரஸார் பிரசாரம் செய்தனர்.

இதனையடுத்து டீ அருந்திக் கொண்டே விவாதிக்கலாம் என்று கூறி, நாடு முழுவதும் 1000 டீக் கடைக்காரர்களுடன் விவாத நிகழ்ச்சியை மோடி அதிரடியாக நடத்தினார்.

இந்நிலையில் மோடியின் இந்த டீ பிரசாரத்திற்கு பதிலடியாக ராகுல் காந்தியின் பெயரில் முதல் 2 எழுத்துகளை வைத்து ராகா பால் என்ற பெயரில் பால் விநியோக பிரசாரத்தை உத்திரப்பிரதேச மாநிலம் கோரக்பூர் மாவட்டத்தில் காங்கிரஸார் ஆரம்பித்துள்ளனர்.

இதனிடையே டில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய ராகுல் காந்தி, நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் பிரச்சினையும், போராட்டத்தையும் தமது பிரச்சினையாக கருதி சேவையாற்றி வருவதாக குறிப்பிட்டுள்ளார். (அ)

### உடல் உறுப்புக்களை பாதுகாக்கும் திரவம்; இந்திய மருத்துவர் சாதனை

உடல்உறுப்புகளை பாதுகாக்க உதவும் இரசாயன திரவம் ஒன்றை இந்திய மருத்துவர் ஹேமந்த் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளார்.

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலம் தாதர் பகுதியில் பிறந்தவர் ஹேமந்த் தாட்டே, தற்போது அமெரி க்காவின் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சியாளராக உள்ளார்.

மூளை சாவு அடைந்த ஒருவரது உறுப்புகளில் இதயம், நுரையீரல் உள்ளிட்டவற்றை உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மூலம் 4 முதல் 6 மணி நேரத்துக்குள், சிறுநீரகத்தை 24 மணி நேரத்துக்குள் பொருத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.

அது முடியாத பட்சத்தில் உறுப்புகள் பயனற்றதாகி விடுகின்றன. இந்த பிரச்சினையை தீர்க்க புதிய இரசாயன கலவை பயன்படும்.

பன்றிகளின் உறுப்புகளை புதிய சோமா திரவத்தில் வைத்து பரிசோதித்ததில் வெற்றி கிட்டியுள்ளது, இது விரைவில் பயன்பாட்டுக்கு வர உள்ளது என கூறியுள்ளார். (அ)

# ஊழல் ஒழிப்பு சட்டமூலத்திற்காக அவசர சட்டம்; மத்தியரசு முடிபு

(புதுடில்லி)

மத்திய காங்கிரஸ் அரசு, ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கித்தவித்து வருகிறது. அதனால் கெட்டுப்போன காங்கிரசின் பெயரை மீட்பதற்காக, காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி, ஊழல் ஒழிபபுக்காக சட்டமூலம் உருவாக்கியுள்ளார்.

அவரது கனவுப்படி, ஊழலை காட்டிக்கொடுப்போரை பாதுகாக்கும் மசோதா, நீதித்துறை பொறுப்புணர்வு மசோதா, சரக்கு, சேவை மற்றும் குறைதீர்ப்பை குறிப்பிட்ட காலவரையறைக்குள் பெறும் உரிமைக்கான மசோதா, வெளிநாட்டு அரசு அதிகாரிகளின் இலஞ்சத்தை தடுக்கும் மசோதா, ஊழல் தடுப்பு சட்ட திருத்த மசோதா, பொது கொள்முதல் மசோதா ஆகிய 6 மசோதாக்கள் உருவாக்கப்பட்டன.

இந்த மசோதாக்களை நடந்து முடிந்த பாராளுமன்ற கூட்டத் தொடரில் நிறைவேற்ற மத்திய அரசு திட்டமிட்டு இருந்தது. ஆனால், தெலுங்கானா மசோதா தொடர்பாக எழுந்த அமளியால், சபை பெரும்பாலான நாட்கள் முடங்கின.

இதனால், மேற்கண்ட மசோதாக்களை நிறைவேற்ற முடியாமல், பாராளுமன்ற கூட்டத்தொடர் முடிவடைந்தது. கூட்டத்தொடரை நீட்டிக்கும் காங்கிரசின் யோசனையை எதிர்க்கட்சிகள் ஏற்க மறுத்து விட்டன.

அவசர சட்டம் கொண்டு வரப்பட்டால், அதை சட்டம் ஆக்குவதற்கு 6 மாத காலத்துக்குள் பாராளு மன்றத்தில் சட்டம் நிறைவேற்ற வேண்டும். (அ)

# தெலுங்கானா மாநிலம் இன்னும் பத்து நாட்களில் உருவாகும்

(புதுடில்லி)

ஆந்திராவில் இருந்து தெலுங்கானா மாநிலத்தை உருவாக்க பாராளுமன்றத்தில் சட்டமூலம வந்து நிறைவேற்றப்பட்டது. இன்னும் 10 நாட்களுக்குள் தெலுங்கானா மாநிலம் உதயமாவதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் தெலுங்கானா மாநிலம் ஏற்படுத்தியதற்காக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை தெலுங்கானா தலைவர்கள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

அவர்கள் அனைவரும் சோனியாவை தெலுங்கானா மாநில தொடக்க விழாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தனர்.

அபபோது அவர்களிடம் சோனியா ஒரு எச்சரிக்கையை வெளியிட்டார்.

"சீமாந்திரா பகுதி மக்களுடன் நீங்கள் இணைந்து செயல்பட வேண்டும். அவர்களிடம் பகை உணர்வுடன் நடந்து கொள்ளக் கூடாது. அவர்களுக்கு எதிராக நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் கூட நான் உங்களது தெலுங்கானா மாநிலத்துக்கு வரமாட்டேன்" என்றார். (அ)

## 220 கிலோ கஞ்சா பொதிகள் மீட்பு

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 220 கிலோ கஞ்சா பொதிகள் தூத்துக்குடி கடற்பரப்பில் மிதந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி தாளமுத்துநகர் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவல் ஒன்றின் அடிப்படையில் இவை மீட்கப்பட்டுள்ளன.

ஐந்து பொதிகளாக காணப்பட்ட இவற்றை கடத்திச் சென்றவர்கள், கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள கடற்படை அதிகாரிகளை கண்டதும் கடலில் வீசி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தாளமுத்துநகர் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9)

# ராஜீவ் கொலை வழக்கை மீள விசாரிக்கமாட்டோம்

## ஞானதேசிகன் தெரிவிப்பு



ஜெயின்,வர்மா குழு அறிக்கைபடி ராஜீவ் கொலை வழக்கை மீண்டும் விசாரணை நடத்தும் எண்ணம் இல்லை என்று தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் கூறியுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் அவருடன் கொல்லப்பட்ட 15 தமிழர்களுக்கு நீதி கேட்டு சென்னையில் இந்திய காங்கிரஸ் கட்சியினர் உண்ணாவிரத போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சென்னை காயிதே மில்லத் பெண்கள் கல்லூரி எதிரே நடைபெற்று வரும் இந்த போராட்ட த்தில் காங்கிரஸ் கட்சியின் முன்னணித் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்த ஞானதேசிகன் பிற குற்றங்களைபோல் ராஜீவ் காந்தி கொலை குற்றத்தை எடுத்துக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்டார். கொலையாளிகள் 3 பேரையும் விடுதலை செய்யக்கோருபவர்கள் இந்திய இறையாண்மைக்கு எதிரான வர்கள்.

ஜெயின், வர்மா குழு அறிக்கைபடி ராஜீவ் கொலை வழக்கை மீண்டும் விசாரணை நடத்தும் எண்ணம் இல்லை.

குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட பேரறிவாளனின் வாக்குமூலமே திருத்தப்பட்டதாக சி.பி.ஐ. அதிகாரி கூறியுள்ளார்.

எனினும் மற்றவர்களின் வாக்குமூலங்களில் திருத்தம் மேற் கொள்ளபடவில்லை என்றும் ஞானதேசிகன் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-9)

# மதுரை அகதி முகாம்களில் சிறுநீரக நோய் அதிகரிப்பு

## சுத்தமற்ற குடிநீரே காரணம்

மதுரையில் உள்ள இலங்கை அகதிகள் முகாமிலுள்ளவர்கள் சிறுநீரக நோய்களால் பாதிக்கப்பட்டுளளதாக மனிதவுரிமை நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த நான்கு வருடங்களில் மாத்திரம் 9 அகதிகள் சிறுநீரக நோய்களால் மரணம் அடைந்துள்ளனர்.

சுத்தமற்ற நீர் விநியோகமே இதற்கான முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு மேலூர் மாவட்டத்தின் திருவாதவூர் முகாம் அமைக்கப்பட்டது. ஏற்கனவே வைக்கும் பெரியார் நாகர் முகாமில் இருந்தவர்களே இங்கு மாற்றப்பட்டனர்.

இங்கு 500 வீடுகள் மலசலகூட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. அதேநேரம் குழாய் கிணறுகளும் உள்ளன.

இவற்றை கொண்டே தண்ணீர் தாங்கிகளும் அமைக்க ப்பட்டுள்ளன.

இந்தநிலையில் இந்த மக்களுக்கு சிறுநீரக நோய்கள் ஏற்படுவதற்கு நீரில் சேர்க்கப்படும் நச்சுக் கலந்த மருந்துப்பொருட்களே காரணம் என்று சமஉரிமை அமைப்பின் தலைவர் சி.ஆனந்த ராஜ் தெரிவிதத்துள்ளார்.

தற்போதும் இந்த முகாமில் 9 வயது சிறுமி உட்பட்ட 16 பேர் சிறுநீரக நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இந்த மக்களுக்கு உரிய நன்னீர் வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும் என்று ஆனந்தராஜ் வலியுறுத்தியுள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

## காதலின் துடிப்பு

பூக்களின் மௌனம்
வண்டுக்குத் தெரியாது-சில
பாக்களின் இராகம்
அதைப்படிக்காமல் புரியாது
நிலவின் வெளிச்சம்
இரவுக்குத் தெரியாது- என்
தூக்கத்தின் வலி
எந்த உறவுக்கும் புரியாது
காற்றின் வடிவம்
கண்களுக்குத் தெரியாது- என்
காதலின் மௌனம்- என்
காதலிக்கும் புரியாது

**ஆனந்தரூபி**
**சிறுப்பிட்டி**

## கலங்காதே காதலி

என் உயிர்த் தேவதையே
என் அறிவுக் களஞ்சியமே
என் இதயத் துடிப்பே
உன் வார்த்தை என் வேதமடி
உன் கண்ணில் நீர் வடிந்தால்
என் கண்ணில் உதிரம் வடியுமடி
கலங்காதே காதலியே
என் காதல் தேவதையே
எம்மைப் படைத்தவன்
எமக்கு சிறகு தருவான்
சிறகு முளைத்த
பட்டாம்பூச்சியாய்-நாம்
ஒன்றாக இணைந்து
சிறகடிப்போம் கலங்காதே

**பா.பொன்னொளி**
**அல்வாய்**

## கம்பன் தமிழாய் காதல்

காதல்!
இது காளானல்ல
காலையில் தழைத்து
மாலையில் மறைந்து போக
காதல்;
வானவில்லல்ல,
வர்ணஜாலம் தீட்டி
வானிலே கரைந்து போக
விண்மீன்கள் விழித்திருக்க
முகில்கள் திருடிச் செல்லும் நிலவல்ல,
வளர்ந்து வருவதற்கும்,
தேய்ந்து மறைவதற்கும்
காதல்!
கண்கள் விழித்திருக்க
இதயத்தைத் திருடிச் செல்லும்
கம்பன் தமிழ்போல்
காலத்தையும் கடந்து
மணம் பரப்பும்
காதலில் அழுக்கில்லை
இருந்தால் வெளுத்துக்கொள்ளலாம்
யாராலும் கொளுத்திவிட முடியாது
காதலர்கள் தோற்றுப்போகலாம்
காதல் தோற்காது
தோற்றால் அது காதலல்ல

**ஆர்.எஸ்.ஆனந்தன்**
**தும்பளை**

## இமயம் தொட...

பகையுடன்
அஞ்சாது போரிட்டு
வீழ்வதிலும்- கடினம்
சபையின் முன்னின்று
ஐயமின்றிக் கூறுதல்
ஐயம் களைந்து
ஒப்புர ஒழுகு
உன்னைச் செதுக்க இசை
சாமி சிலையாவாய்
இல்லையேல் நீ
வாசற்கல்லாய் மிதிபடுவாய்

மாவை.நா. கஜேந்திரன்

## நீயென்பதும் நானென்பதும்

நீ என்னை வெறுப்பதற்கு
ஓராயிரம் காரணங்கள்
அடுக்காய் அடுக்கிறாய்,
இருப்பினும்
நானுன்னை
நினைப்பதற்கும் காதலிப்பதற்கும்
ஒரே ஒரு காரணம் சொல்கிறேன்
நீயென்பதும் நானென்பதும்
இரண்டல்ல என்றும்
ஒன்றுதான்

**சிந்து சிவதாஸ்**
**ஐங்கரன் வீதி**

# மௌனத்தின் தேடல் – 192



## பாதச்சுவடு

பழைமை கலையாமல்- உன்
நிலைமை குலையாமல்
கலைந்த வாழ்வதை
நினைந்து உருகாமல்
புதிய யுகமதில்- உன்
பாதத்தை பதித்து விட்டாய்
காலனையும் வென்றிடுவாய்
கலங்காதே தாயே!
தொடரட்டும் உந்தன்
திடமான பயணம்...

முல்லை.கஜன்
மல்லாவி

## புதுமைப்பெண்

பேரப்பிள்ளைகளை
கொஞ்சிக் குலாவும்
வயசிலும்
வயதான பெண்மணியின்
புரட்சிகரமான
சாதனை

இரா.ஜெ.துஷ்யந்த்
அளவாவோடையூர்

## விழிப்பு

பொக்கை வாயுடனும்
புன் சிரிப்புடனும்
குழி விழுந்த அந்த
அழகிய முகத்தில் தெரிகிறது
முதுமையின் வேகம்
ஊன்றி அழுத்தி
முன்னே செல்பவர்களை
முந்திச் செல்லுங்கள்
விலகி ஒடுங்குபவர்களுக்கு
விழிப்பாயிருக்கும்

யு.சோபியா
விசுவமடு

## புதுயுகம்

கை நாடும் கணனிகளும்
முகந்தேடும் முகநூல்களும்
இளசுகள் தேடும் இணையமும்
முழுச வைக்கின்ற காலமிது
புதுயுகம் ஒன்று பிறந்திட்ட இன்று
நீ இப்போதுதானா இந்நிலையில்?
காலன் வலை வீச முன்
காத்திராமல் அனுபவித்திடு
அத்தனையையும் பாரதி
கண்டுவிட்ட புதுமைப்பெண்ணாய்

பி.தனு
பாலிநகர்

## மகிழ்வோம் வாரீர்!

மண் அழைந்து மழலை பேசி
பொன் அணிந்து துணை இணைத்து
சுமை சுமந்து சேய் வளர்த்து
நாம் கண்ட சுகம் யாதோ
இனியாகிலும் ஊர் சுற்றி
மனம் மகிழ்வோம் வாரீர்

நா.தளையசிங்கம்
கொக்குவில்

## பயணம்

காப்பெட் வீதிகள்
காத்துக்கிடக்கின்றன- தினமும்
இரத்தப் பலியெடுக்க
'மிக்' ஆய் போகும் ஊர்திகள்
'பக்' என்று எடுத்துவிடும் உயிரை
பார்த்துப்போ தாயே- உன்
பயணம் இனிதாகட்டும்
மூப்பிலும் உன் தற்துணிவுக்கு
கூப்புகிறேன் இருகரம்

[illegible]

## காலமிது

வடைசுட்டு காக்கைக்கு
ஏப்பமிட்டது அன்று
பல்சரில் சிட்டாய் பறப்பதுவோ இன்று
காலங்களும் மாறும்
அதற்கேற்றாற் போல்
காட்சிகளும் மாறுகிறது
இப்போது உண்மைகள்
எங்கே போய் ஒளிந்து கொள்ளுமோ...?

உதயம்ரூபன்
நயினை

## முன்னுதாரணம்

பாக்கை உடைத்து போட்டு
பொக்கு வாயால் கடிக்கும் வயதிலே
பைக்கில் ஏறி உட்கார்ந்து
போட்டோவிற்கு போஸ் கொடுக்கும்
நீதான் இனிவரும் மூதாட்டிகள்
சமூகத்திற்கு முன்னுதாரணமா?

கவிப்பிரியன்
சுழிபுரம்

## வயது

என்னை விட்டு
வயதுதான் கடந்தது...
தன்னம்பிக்கையுடன்
வித்தையை காட்டி
சாதனையை கடப்பேன்
கடப்பது வயதல்ல...
சாதனையே...

சி.அகல்யா
கொக்குவில்

## துணிவு

தள்ளாத வயதிலும்
தளராத மனதுடன்
தனியாக ஏறி
தயாராக நிற்கும்
தாய்மையை என்னவென்று
சொல்வதம்மா!

திருமதி நி. பன்னீர்ச்செல்வம்
சுழிபுரம் மேற்கு

## முதுமை சாபமல்ல

படுக்கையில் படுக்கவேண்டிய
பாட்டி துடிப்போடெழுந்து
மிடுக்கோடு ஈருளியை
ஓட்டுகின்றாள் துணிவோடு
எதையும் சாதிக்க முடியும்
என்னும் நம்பிக்கையிருந்தால்
வாழ்வை அர்த்தமுள்ளதாக்கலாம்
முதுமை என்பது சாபமல்ல

துரை, தென்மட்டுவில்

## இதயத்தின் இளமை

முதுமை உடலுக்கு தான்
உள்ளத்திற்கல்ல என்பார்கள்
கள்ளம் கபடமில்லாமல்
துள்ளும் இளமைத் துடிப்புடன்
மோட்டார் வண்டியில்
அமர்ந்திருக்கும் மூதாட்டியே
ஆணுக்கு பெண் சரிநிகர்
சமன் என நீ
உணர்த்துகிறாய்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –193



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 26.02.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




அன்பு வாசகர்களே!

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல. 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

*சி.தங்கா, கிளிநொச்சி*

✉ *Hello* அண்ணா

ஒரு வயதுக்கு வந்த பெண் ஒரு ஆண் உடன் கதைப்பதை ஏன் இந்த சமுதாயம் ஏற்பதில்லை என எனக்கொரு அட்வைஸ் சொல்ல முடியுமா?

✎ ஆண், பெண் உறவில் விரிசல் விழும் போது அதிகம் பாதிக்கப்படுவது பெண் தான். இது இயற்கையின் விசித்திர படைப்பு. கண்ணாடி அறையில் நின்று கொண்டு கல் எறிந்தால் கல்லுக்கு எந்த சேதமும் வராது. நம் காலுக்கே வரும். இதை எல்லாம் தாண்டி வாழ்க்கையை வெற்றி கொள்ள இந்த சமூகத்தில் பெண்மை படும்பாடு இருக்கிறதே சொல்லிமாளாது.

*S. விஜிதபாமா, கோண்டாவில்*

✉ மறுமணம் செய்பவர்களுக்கு இதயம் இருக்கிறதா. காதல் முதல் முதலில் வரும போது தான் இதயம் எனக்கு இருக்கிறது என்று கூறுகிறார்கள். அந்தக் காதல தோல்வி அடைந்தால் அவர்களுக்கு இதயம் இல்லையா?

✎ காதலை சுரப்பதற்கு அது ஒன்றும் அருவியில்லை. உதிரத்தை சீராக்கி உயிர் வாழ வைக்கும் கருவி.

*கவிப்பிரியன், சுழிபுரம்*

*Hi* வியா அண்ணா

✉ பெண்களின் கன்னங்களில் விழும் குழியில்தான் பல ஆண்கள் விழுந்து விடுகிறார்கள் எனும் கருத்தைப் பற்றி.

✎ அந்தளவிற்கு அது பாரிய குழியல்ல. ஏனென்றால் நான் பல தடவை அதில் விழுந்து எழுந்து விட்டேன்.

*உ.தர்சிகா, வல்வெட்டி*

*Hi Anna!*

✉ திருமணத்தின் பின்னர் பெண்கள் வேலைக்கு போவதை பற்றி உங்கள் கருத்து என்ன?

✎ பெண்ணுக்கு ஆணுக்கு என்று தனிச்சட்டம் ஒன்றும் கிடையாதே? அவளின் சுயவிருப்பின்றி எதையும் திணித்துவிட யாருக்கும் உரிமை கிடையாது.

## அதிகரித்து வரும் வீதி விபத்துக் களைச் சரிப்படுத்துவதற்கு என்ன செய்யலாம்?

*K. வாணி*

அன்பின் வியா அண்ணா!

✉ இருப்பதைக் கொண்டு வாழப் பழகிக் கொள் என்கிறார்களே. அதன் அர்த்தம் என்ன வென்று கூறுங்களேன் அண்ணா!

✎ இரண்டு நண்பர்கள் இருவரும் சைக்கிள் வைத்திருந்தார்கள். ஒருவன் அதை விற்று விட்டு லீசிங்கில் மோட்டார் சைக்கிள் வாங்குகின்றான். அவனால் பணத்தைக் கட்ட முடியவில்லை. மோட்டார் சைக்கிளும் பறிபோகிறது. மோட்டார் சைக்கிள் பறிபோனவன் வீதியில் நடந்து செல்கின்றான். சைக்கிளில் வந்த அவனது நண்பன் அவனை ஏற்றிக் கொண்டு செல்கின்றான். தன் மனத்துக்குள் இருப்பதை வைத்து வாழப்பழகிக் கொள்ள வேண்டும் என்று சொல்லியபடி.

## இருப்பதைக் கொண்டு வாழப் பழகிக்கொள் என்கிறார்களே.

*கொஞ்சம் சிரிங்கப்பா.*

*ரிப்போர்ட் வாங்க பேஷன்ட் வரலையா?*

*ஐயோ! டாக்டர் அது போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்!*



*அனிதா அனு*

✉ Hai வியா அண்ணா!

காதலித்து வீட்டை விட்டு ஓடிப் போறவர்கள் பற்றி?

✎ ஊசியால் நாம் யாருக்காவது குத்தும் போது அதன் வலி நமக்குத் தெரியாது. ஆனால் நமக்கு யாராவது குத்தும் போதுதான் வலியை புரிந்து கொள்வோம். அதேபோல் தான் நாளை இவர்கள் தாய் தந்தையான பின்னர் இவர்கள் பிள்ளை வீட்டை விட்டு ஓடும்போதுதான் அதன் வலியை உணர்ந்து கொள்வார்கள்.

*வெ.பிரகஸ்பதி, பருத்தித்துறை*

அன்பின் வியா அவர்களே!

✉ இக்கால இளசுகளின் பருவக்காதலைப் பற்றி உங்களுடைய கருத்து யாது?

✎ முகத்தில் வரும் பருவைப் போன்றது தான் பருவ வயதில் நிச்சயம் வந்தே தீரும். பின் மறைந்து விடும். அவசரப்பட்டு அழிக்க நினைத்தால் அழியாத மறையாய் கிடக்கும் அழியாமல்.

*சு.ஜெயரூபன், பருத்தித்துறை*

அன்பின் வியாசரே!

✉ ஒரு நல்ல நட்பு எந்த இடத்தில் தோற்றுப் போகிறது.

✎ உயிரோடு கூடிய நட்பும் அற்ப பொருளோடு ஊசாடக் கெடும்.

*கிரு.செந்தூரன், பருத்தித்துறை*

அன்பின் வியாசரே!

✉ அதிகரித்து வரும் வீதி விபத்துக் களைச் சரிப்படுத்துவதற்கு என்ன செய்யலாம்?

✎ யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தியில் பொருத்தியிருக்கும் வீதிச் சமிஞ்சை விளக்கை பின்பற்றி செல்ல பொறுமையின்றி குறுக்கு மறுக்காக ஓடித்திரிகிறதே நம் சமூகம். என்ன செய்ய ஒரு நிமிடம் பொறுமையாய் நின்று விதிமுறைப்படி நடந்தால் ஏன் வீதியில் விதி முடியப் போகிறது. எல்லாம் ஊழ்வினைப் பயன்தான்.

*வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி*

அன்பின் வியா!

நீங்கள் கண்டபடி திட்டு வாங்கிய இடம் ஏதாவது சொல்லுங்கள்?

1995 ஆம் ஆண்டு நான் ஒரு பேக்கரியில் கணக்காளராக வேலை செய்தபோது, ஒரு இறாத்தல் பவுண் வாங்கிவிடலாம் பாண் வாங்க முடியாது. அவ்வளவு பஞ்சம். காலை 5.30 மணிக்கே பாண் வாங்க நீண்ட வரிசை. வழமையாய் நான் வேளைக்கு வந்து விடுவேன். அன்று 6 மணியாகி விட்டது.

நானும் அவசர அவசரமாய் வரிசையில் நின்ற வரை விலத்தி கடையைத் திறக்கச் சென்றேன். வரிசையில் நின்றவர்கள் நான் வரிசைக்கு இடையில் புகப் போகிறேன் என்று நினைத்து திட்டுதிட்டென்று திட்டித் தீர்த்து விட்டார்கள். கஷ்டப்பட்டு ஒருவாறு ஒருவரிடம் நான் கடையை திறக்கப் போகிறேன் என்று கூறினேன். அவன் சத்தமாய் அண்ணாதான் கடைக்காரர். அவர்தான் எங்களுக்கு பாண் தர வேணும் என்ற பின்னர்தான் திட்டு நின்றது. அந்த நாளை என்னால் மறக்கவே முடியாது.

# வடமாகாண சபை தீர்மானங்கள் அரசாங்கத்திற்கு எதிரான பொறி

## தயான் ஜயதிலக தெரிவிப்பு

வட மாகாணசபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் அரசாங்கத்திற்கு எதிரான பொறியாக கருதப்பட வேண்டுமென முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.


தனியான விமான மற்றும் கப்பல் சேவைகள் குறித்த வட மாகாணசபையின் தீர்மானமானது அரசாங்கத்தை சிக்க வைக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சியாகும்.

இந்த தீர்மானங்கள் 13ஆம் திருத்தச் சட்டத்திற்கு புறம்பானவை. இது தொடர்பில் பதற்றமடைய வேண்டியதில்லை.

அரசாங்கத்தை ஆத்திரமுட்டி மாகாண சபையை கலைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது.

மாகாணசபை கலைக்கப்பட்டால் அது தொடர்பில் இந்திய மத்திய மாநில அரசாங்கங்கள் எதிர்ப்பை வெளியிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவேதான், வடமாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அரசாங்கத்தை சிக்க வைக்கும் பொறியாக கருத வேண்டுமென குறிப்பிட்டேன் என அவர் தெரிவித்துள்ளார். (அ-9)



பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் ஷிராணி திலகவர்தன ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

# தமிழ் நாட்டின் முடிவை வரவேற்கின்றேன் து.ரவிகரன்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நிரபராதிகள் மூவர் மீது விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்து செய்த இந்திய நீதி முறைமையையும் அவர்கள் உள்ளடங்கலான 7 பேருக்கும் விடுதலையை அறிவித்த தமிழ்நாடு அரசின் முடிவையும் வரவேற்பதுடன் நன்றியையும் தெரிவித்துள்ளார் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 23 வருடகாலமாக மேன்முறையீடுகள், கருணை மனுக்கள், கோரிக்கைகள், மக்கள் கொந்தளிப்புகள் என இருதசாப்த கால முயற்சிக்கு செவிசாய்க்கும் வகையில் இன்று எட்டப்பட்டிருக்கின்ற இந்த முடிவு நீண்டகால மக்கள் முயற்சிக்கு கிடைத்த வெற்றி மட்டுமல்லாது மேற்படி முடிவு உலகத்தமிழர் அனைவருக்கும் ஒரு நற்செய்தியாக அமைகிறது எனவும் தெரிவித்தார். (அ-2)

# நான்கு பேரில் ஒருவர் மனநோயால் பீடிப்பு

இலங்கையில் நான்கு பேரில் ஒருவர் மன நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக சட்ட உளவியல் மருத்துவர் ரீ.எஸ்.எஸ். மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் 25 வீதமானவர்கள் ஏதேனும் ஓர் உளவியல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளபோதிலும் இலங்கையில் உளவியல் சிகிச்சை வழங்கக் கூடிய தகைமையுடைய 60 மருத்துவர்களே கடமையாற்றுகின்றனர்.

நாளுக்கு நாள் இடம்பெற்று வரும் குற்றச் செயல்கள் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளை தடுக்க முடியவில்லை. இந்நிலையில குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடாத்த நாடு முழுவதிலும் 25 சட்ட வைத்திய அதிகாரிகளே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை போதுமானதாகவில்லை.

இலங்கையில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை உயர்வடைந்து செல்கின்றது என்றார். (அ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாம் பயங்கரவாதிகளா? முதலமைச்சர் கேள்வி

(யாழ்ப்பாணம்)

நாம் பயங்கரவாதிகள் கிடையாது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தை பயங்கரவாதப் பகுதியாக நோக்குவதனை இலங்கையின் மத்திய அரசாங்கம் கைவிட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச செய்தி ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாகாணத்திற்கு போதியளவு அரசியல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

வடக்கை பயங்கரவாத மாகாணமாக அடையாளப்படுத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாது .

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (எ-11)

# புலிகளை தோற்கடிக்க பலம் கொடுத்தது நாமே

## மார்தட்டுகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

யுத்தம் செய்ய ஒத்துழைப்பு வழங்கிய ஜே.வி.பியை மறந்து விட்டு போர் வெற்றியை மஹிந்த தனக்கு உரிமையான வெற்றியென எழுதி வைத்து கொண்டதாக அந்த கட்சியின் மேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளர் கே.டி.லால் காந்த குற்றம் சுமத்தியுள்ளார்.

கொஸ்கம பிரதேசத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் செய்ய முடியாது, அதற்கு தேவையான வளங்கள் இல்லை எனக் கூறி புலம்பிய மஹிந்தவுக்கு ஜே.வி.பி யும் தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பும், நாட்டை நேசிக்கும் மக்களுமே பலத்தை கொடுத்தனர்.

யுத்தத்தில் வெற்றி பெற்ற பின்னர் அந்த வெற்றியின் உரிமையை மஹிந்த அரசாங்கம் தனதாக்கி கொண்டது.

கிழக்கு மாகாணத்தை விடுவிக்கும் போதும் தொப்பிகலையில் தாக்குதல் நடத்தப்பட்ட போதும் மக்கள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புகளை வழங்கினார்கள்.

ரணில் விக்ரமசிங்க அணியில் பலர் அரசாங்கத்துடன் இணைந்ததுடன், விமல் வீரவன்ச, தலைவரின் கரங்களை பலப்படுத்த போவதாக கூறி அரசுடன் இணைந்தார். இந்நிலையில் அரசாங்கத்தை கவிழ்க்கும் எதிர்க் கட்சி ஒன்று அன்று இருக்கவில்லை.

போர் முடிந்ததும் ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் நடத்தப்பட்டது. போரில் வென்ற மஹிந்தவுக்கு மக்கள் வாக்களித்தனர். இன்று நிலைமை அப்படியல்ல. மஹிந்தவின் அமைச்சரவையில் உள்ள 9 அமைச்சர்கள் மோசடியாளர்கள் எனக் கூறி விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

கிராம மட்டத்தில் இந்த நிலைமை குறித்து கலந்துரையாடல்கள் நடந்ததன் பிரதிபலனாக பல பிரதேச சபைகளில் வரவு செலவுத் திட்டங்கள தோற்கடிக்கப்பட்டன என்றார். (அ-9)

# நாட்டை இன்னும் 20 வருடங்களுக்கு ராஜபக்ஷ குடும்பமே ஆட்சி புரியும்

ராஜபக்ஷ குடும்பம் இன்னும் 20 வருடங்களுக்கு இந்த நாட்டை ஆட்சிபுரியும். ஐ. தே. க. எவ்வளவு தான் தலைகீழாக நின்றாலும் இதனை மாற்றமுடியாது என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வாய் மூல விடைக்காக பி.ஹெரிசன் எம்.பி. எழுப்பியிருந்த கேள்விக்கு பதிலளிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2016 ஆம் ஆண்டு டிசெம்பர் வரும்போது ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுக்கும் 3 மஹிந்தோதய பாடசாலைகள் நிர்மாணிப்பதாகக் குறிப்பிட்டார்.

இடையிட்டுக் கேள்வி ஒன்றை முன்வைத்த பி.ஹெரிசன் எம்.பி. 2016 ஆகும் போது நீங்கள் கல்வி அமைச்சராக இருப்பீர்களோ தெரியாது. இந்த டிசெம்பர் ஆகும் போது ஐ. தே. க. ஆட்சியே வரப்போகிறது என்றார்.

இதற்குப் பதில் வழங்கிய அமைச்சர், மஹிந்த சிந்தனையின் கீழ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டிற்கு சிறந்த தலைமைத்துவம் வழங்கி வருகிறார். எனவே இன்னும் 20 வருடங்களுக்கு ராஜபக்ஷ ஆட்சியே இருக்கும் என்றார். (அ-9)

# பண்டைய துறைமுகம் ஒன்று கண்டுபிடிப்பு

திருகோணமலையில் பண்டைய துறைமுகம் ஒன்று இலங்கை அகழ்வாராய்ச்சி திணைக்கள அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த துறைமுகம் 8ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

சீன பீங்கான் பொருட்கள், வெளிநாட்டுக் கண்ணாடிகள், செப்புத் தகடுகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில் இந்த இடம் தொடர்பிலான ஆய்வுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளதாக களனி பல்கலைக்கழகத்தின் அகழ்வாராய்ச்சி பீட பொறுப்பாளர் டாக்டர் அனுர தந்திலகே தெரிவித்துள்ளார். (அ)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி கதிர்காமு இராசம்மா

கட்டபிராயைப் பிறப்பிடமாகவும் இருபாலை , கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு இராசம்மா கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு Riverside Funeral Home ,7410 Hopcott Road ,Delta ,Bc,V4G 1B6, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி நாகமணி சிந்தாமணி

மானிப்பாய் உடுவிலைப் பிறப்பிடமாகவும் மணற்றறைஒழுங்கை, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி சிந்தாமணி கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### ரோணேஸ் அஜே

லண்டன் Harrow ஐ பிறப்பி டமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ரோணேஸ் அஜே கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின்நல்லடக்கம் 26 ஆம் திகதி புதன் கிழமை Alperton Cemetery, Clifford Road, Wembley, Greater London HA0 1AF, United Kingdom என்னும் முகவரியில் நடைபெறும்.



### சந்தனராஜா தயானந்தபோஸ்

நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும்பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தனராஜா தயானந்தபோஸ் கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு La Maison Funeraire 7, Bld de Menlmontant ,75011 Paris, France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### சிவசம்பு குமாரசாமி

உடையார்வளவு புன்னாலைக் கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு குமாரசாமி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதிகைலாசநாதன் கமலாம்பிகை

மண்டைதீவு 8 ஆம் வட்டாரத் தைப் பிறப்பிடமாகவும் கொக் குவில் தாவடி தெற்கு பாடசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்டகைலாசநாதன் கமலாம்பிகை கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று கொக்குவில் தாவடி தெற்கு பாடசாலை வீதி என்னும் முகவரியில் நடைபெற்றுபூதவுடல் மண்டைதீவு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### கந்தையா கிருஸ்ணர்

சாவகச்சேரி மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கிருஸ்ணர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று முற்பகல் 11.30 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதிசெல்லையா செல்லம்மா

முள்ளியவளை முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நெடுங்கேணி பண்டாரக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செல்லம்மா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### கந்தையா ஆறுமுகம்

(இளைப்பாறிய அஞ்சல் அதிபர்,சமாதான நீதவான்)

வடமராட்சி கதிர்காம கோவிலடி வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆறுமுகம் கடந்த 20ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று நண்பகல் 12 மணிக்கு Bowmanville Cemetry 130 Haines Street ,Clarington ,Ontario Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

# உருவத்தின் அழகைப்பார்த்து வாக்களிக்க வேண்டாம்

## ஹிருணிகா கோரிக்கை

உருவத்தின்அழகைப்பார்த்து தனக்கு வாக்களிக்க வேண்டாம் என மேல் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டி யிடும் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

கொலன்னாவ பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், சிலர் என்னை மேடம் என்றும் சிலர் மிஸ் என்றும் அழைக்கின்றனர். என்னை அப்படி அழைக்க வேண்டாம். நான் அதனை விரும்பவில்லை. நான் இன்னும் சின்னப் பெண் என்பதால் என்னை மகள் என்று கூப்பிடுங்கள். அது எனக்கு போதும்.

எனது தந்தை கொல்லப்படும் வரை அனைவரும் லக்கி அண்ணன் என்றே அழைத்தனர். அவரை வேறு பெயர் கூறி எவரும் அழைக்கவில்லை. என்னையும் அப்படியே அழையுங்கள். எனது தந்தை கொல்லப்பட்ட தினத் தில் நான் அவரது மடியில் அமர்ந்திருநதேன். என்னை மடியில் இருந்து இறங்குமாறு தந்தை கூறினார். அப்போது நான் சுமையாகிவிட்டேனா என்று தந்தையிடம் கேட்டேன்.

எனது நிழலான எனது தந்தையை என்னிடம் இருந்து பிரித்துவிட்டனர். அவர்களுக்கு அண்மையில் ஒரு நாள் மக்கள் சிறந்த பதிலை வழங்கியிருந்தனர். எதிர்காலத்தில் அதனைவிட சிறந்த பதிலை கொடுப்பார்கள்.

நான் அழகாக இருப்பதால் வாக்களிப்பதாக சிலர் கூறுகின்றனர். அப்படி செய்ய வேண்டாம். அழகான திடகாத்திரமான உருவத்தை பார்த்து கடந்த காலத்தில் வாக்களித்து நடந்தவற்றை மறந்துவிட வேண்டாம். எனது திறமையை பார்த்து வாக்களியுங்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அணுஉலை கசிவு ஏற்படின் மக்களை பாதுகாக்க நடவடிக்கை-சம்பிக்க

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் அணு உலைகளினால் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் எதுவித ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படாத போதும் ஏதும் அணு கசிவு ஏற்படடால் மேற்கொள்ள வேண்டிய சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தொழிலநுட்ப, ஆராய்ச்சி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அணுக்கசிவு தொடர்பில் ஆரம்பகட்ட ஆய்வு நடத்தப்பட்டுள்ளதாக கூறிய அவர் 7 இடங்களில் அணுக்கசிவை அளவிடும் உபகரணங்கள பொருத்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

கூடங்குளம்அணுஉலைதொடர்பில் ரோஸி சேனாநாயக்க எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியதாவது,

கூடங்குளம் அணுஉலை இலங்கையில் இருந்து 325 கிலோ மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அணுக்கசிவின்போது 50 கிலோ மீற்றர் தூரம் வரையான பிரதேசத்துக்கே கூடுதல் பாதிப்பு உள்ளது. ஆனால் கூடங்குளம் அணு உற்பத்தி நிலையம் அணு கசிவு ஏற்படாதவாறு சர்வதேச மட்டத்துக்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள அணு உலைகள் தொடர்பில் இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள எமது தரப்பினால் இந்தியாவுக்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதுவரை இந்திய தரப்பில் இருந்து எதுவித திருப்திகரமான பதிலும் கிடைக்கவில்லை.

எமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான முன்னேற்பாடுகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். அணுக்கசிவு தொடர்பில் ஏதும் பிரச்சினை ஏற்பட்டால் சர்வதேச முகவர் நிலையம் எமக்கு சார்பாக செயற்பட வேணடும். தமது நாட்டில் அணு உலை அமைப்பதற்கு இந்தியா் எம்மிடம் அனுமதி கோரத் தேவையில்லை. நாம் அணு உலை அமைப்பதானாலும் இந்தியாவிடம் அனுமதி கேட்கத தேவையில்லை. இந்திய அணு உலைகளின் நிலைமைகள் குறித்து சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் தொடர்ந்து கவனித்து எமக்கு அறிவுறுத்தல் வழங்கி வருகிறது.

இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாத போதும் சம்பந்தப்பட்ட நாடுகள் அண்டைய நாடுகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். ஏதும் அணுக்கசிவு ஏற்பட்டால் அது குறித்து முன்கூட்டி அறிவுறுத்தவும் தேவையான நடவடிக்கை எடுக்கவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-9)

# ஜெயலலிதாவின் நடவடிக்கையில் சட்டமீறல்கள் எதுவுமில்லை

## ராம் ஜெத்மலானி


ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண் டனை பெற்ற பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுவிக்கும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் நடவடிக்கையில் சட்ட மீறல் எதுவும் இல்லை என்று இவ்வழக்கில் ஆஜரான பிரபல வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி கூறியுள்ளார்.

பேரறிவாளன், முருகன், சாந்தன ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்குத்தண்டனையை குறைக்க கோரிய வழக்கில் அவர்கள் சார்பில் ஆஜரானவர் ராம் ஜெத்மலானி.

இந்நிலையில் ராம் ஜெத்மலானி நேற்று முன்தினம் சென்னை வந்தபோது அவரை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உள்ளிட்ட அக்கட்சித் தலைவர்கள் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த ராம் ஜெத்மலானியிடம், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற பேரறிவாளன், முருகன், சாந்தன் உள்ளிட்ட 7 பேரை விடுவிக்கும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் நடவடிக்கை க்கு மத்திய அரசு எதிர்ப்பு தெரிவித்துள்ளதை பற்றி கேட்ட போது, இதில் சட்ட மீறல் எதுவும் இல்லை என செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இவ்விடுதலையை எதிர்க்கும் மத்திய அரசின் மனுவுக்கு எதிராக வெற்றி கிடைக்கும் என்றும், விடுதலை செய்யக் கூடாது என உச்ச நீதிமன்றம் தற்காலிக தடை மட்டுமே விதித்துள்ளது என்றும் தெரிவித்தார். (அ-9)



சீரடி சாயி மந்திரில் புதிய கொடிமரமும் நந்தீஸ்வரரும் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் பிரதமகுரு பிரம்மஸ்ரீ தா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெறுவதையும் சீரடிசாயி நாதன் வீதியுலா வருவதையும் படங்களில் காணலாம்.

# ஆயுதங்களை கடத்திய நபருக்கு கடூழிய சிறை

கொழும்பிற்கு ஆயுதங்களை கடத்திய விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நான்கு பொதிகளில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களை கொழும்பிற்கு எடுத்துச் சென்ற தாக குறித்த புலி உறுப்பினர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் இரண்டு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனையை உயர் நீதிமன்ற நீதவான் எஸ்.மொராயஸ் விதித்துள்ளார்.

அத்தோடு தண்டனை விதிக்கப்பட்ட புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இருவரும் வெடிபொருட்களை கடத்தியதாக நீதிமன்றில் ஒப்புக்கொண்டதனை அடுத்து அவர்களுக்கு இரண்டாண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# சீனப் பிரதிநிதிகள் குழு கொழும்பு விஜயம்

சீன பிரதிநிதிகள் குழுவொன்று வர்த்தக உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளது.

சீனாவின் வர்த்தகப் பிரமுகர்கள் அடங்கிய இக்குழு நேற்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சீன தேசிய அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையிலான பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு வந்துள்ளதோடு பிராந்தியத் தின் வர்த்தக மையமாக இலங்கையை மாற்றும் நோககு டன நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் வகையிலான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட உள்ளதாகவும் இலங்கை விஜயம் செய்யும் சீனப் பிரதிநிதிகள் பல்வேறு தரப்பினரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ-9)

# பிரச்சினைக்கு முகம்கொடுக்காமல் நாட்டைக்கட்டியெழுப்ப முடியாது

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காமல் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. நாம் பல சவால்களை சந்தித்துள்ளோம். எதிர்காலத்திலும் சவால்களைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியில் நேற்று முன்தினம் 8ஆவது தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

ஆசியாவில் உன்னத நாடாக இலங்கையைக் கட்டியெழுப்பும் போது, பல சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்பது நாம் அறிந்ததே. இந்த சவால்களுக்கு முகம்கொடுக்கத் தயார் என்பதால்தான் நாம் இச்சவாலைப் பொறுப்பெடுத்துக் கொண்டோம்.

அத்தோடு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துக்கொண்டே ஆட்சி நடத்தப்பார்க்கின்றோம். அனைத்தும் தெரிந்தே நாம் நாட்டின் ஆட்சியைப் பொறுப்பெடுத்தோம். கஷ்டத்தோடும் சரி நாம் பிரச்சினைக்குத் தீர்வு காணுவோம்.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகளையும் தெரிந்து கொண்டுள்ளோம். எமது அரசாங்கம் பலவீனமான அரசாங்கம் இல்லை. பலமான அரசாங்கம். எமது அரசாங்கத்தை நாம் மேலும் பலப்படுத்துவோம்.

இந்த நாட்டில் அனைத்து மக்களும் சகல வசதிகளையும், உரிமைகளையும், அபிவிருத்திகளையும் அனுபவிக்க வேண்டும், எமது செயற்பாடுகளை சிலர் எரிச்சலுடன் நோக்கினாலும், விமர்சித்தாலும், சர்வதேச அளவில் உலக் வங்கி, ஐ.நா. அமைப்புகள் போன்ற பிரசித்தமான உலக அமைப்புகள் எமது செயற்பாடுகளை அங்கீகரித்துள்ளன.

நாட்டிலுள்ள சகல மக்களும் அபிவிருத்தியின் பயனை அடைய வேண்டும். இனம், மதம் என்ற வித்தியாசமின்றி அனைவரும் பயன்பெறவேண்டும் என்பதே எமது நோக்கமாகும். சகலரும் நிம்மதியாக வாழக்கூடிய உரிமையை பெற்றுக்கொடுத்துள்ளோம் என தமிழில் குறிப்பிட்டார். (அ-9)

# நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்கத்திற்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையை கையளித்துள்ளது.

போதைப்பொருள் விவகாரத்திற்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான ஜோன் அமரதுங்க எம்.பியினால் கையளிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்து போனவனின் செருப்புகளுக்காக காத்திருப்பவன் வெறுங் கால்களுடனே நடக்கவேண்டி வரும். -டேனிஷ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## காணாமல் போனவர்களின் குடும்ப சீவியம் எப்படி உள்ளது?

காணாமல் போனவர்களை கண்டுபிடித்து தாருங்கள் என்ற கோரிக்கை ஒருபோதும் தணியப் போவதில்லை என்பதற்கு அண்மையில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தவர்கள் அழுத கண்ணீர் சான்றாதாரமாகும்.

எனது கணவரை ஒப்படைத்த இராணுவ அதிகாரியை என்னால் இனங்காட்ட முடியும் என்று சாட்சியம் கூறப்படுமாயின் சாட்சிய ஆதாரத்தன்மை உறுதியானது என்பது உண்மை.

அதேநேரம் காணாமல் போனவர்களின் பெரும்பாலான குடும்பங்கள் வருமானம் இன்றி நாளாந்த சீவனோபாயத்துக்கே அல்லல்படும் பரிதாபநிலையிலேயே உள்ளன என்பதை அண்மையில் நடந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் ஆதாரப்படுத்தியுள்ளன.

எனவே இப்போது காணாமல் போனவர்கள் தொடர்பில் இரு வழிகளில் ஆற்றுப்படுத்தல் செய்ய வேண்டியுள்ளது.

அதில் ஒன்று, காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்த விசாரணைகள் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகள் மீதான நீதிமன்ற விசாரணை என்பன முன்னெடுக்கப்படுதல்.

மற்றையது, காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு உடனடியாக மாதாந்தம் நிவாரணப் பொருட்களை வழங்கி அவர்களின் குடும்ப கஷ்ட நிலைமைகளை தணித்தல்.

இந்த இருவிடயங்களிலும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேநேரம் வடக்கு மாகாண அரசும் அவர்களுக்கான உதவித் திட்டங்களை வழங்க முன்வருவது அவசியம்.

அந்த உதவித்திட்டம் நிவாரணமாக அல்லது வேலைவாய்ப்பாக அல்லது சுயதொழில் முயற்சிகளுக்கான ஊக்குவிப்பாக அமையமுடியும்.

காணாமல் போனவர்கள் குடும்பத்தலைவர்களாக அல்லது அந்த குடும்பத்திற்கு வருமானம் ஈட்டிக் கொடுக்கக் கூடியவர்களாக இருந்துள்ளனர். இந்நிலையில் அந்தக் குடும்பங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு இப்போது முகம் கொடுத்துள்ளன.

எனவேதான், இத்தகைய குடும்பங்களின் வருமான நிலைமைகளை வடக்கு மாகாண அரசு அறிந்து ஏதோ ஒரு வகையில் உதவித் திட்டங்களை வழங்கவேண்டும்.

இங்கு வடக்கு மாகாண அரசின் உதவித் திட்டங்கள்- நிவாரணப்பணிகள் போரின் கொடூரத்தில் குடும்பத் தலைவனை, வருமானம் ஈட்டித் தரக்கூடிய பிள்ளையை இழந்த குடும்பங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பது ஈண்டு கவனிக்கத்தக்கது.

இத்தகைய நிவாரணக் கொடுப்பனவுகளுக்கு அரசின் உதவி வடக்கு மாகாண சபைக்கு கிடைக்காது என்று கூறுவதை விடுத்து, சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளின் உதவித் திட்டங்களை பெற்றுக் கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்வதே புத்திசாலித்தனமாக அமையும்.

காணாமல் போனவர்கள் தொடர்பில் நடைபெறும் ஒவ்வொரு விசாரணைகளின் போதும் எங்கள் தாய்மார்கள் கண்ணீர் கொட்டி முறையிடும் பரிதாபத்தை நாம் பார்த்தும் பரிகாரம் தேடத் தவறுவது எந்த வகையிலும் நியாயமானதாக இருக்க முடியாது.

ஆகவே, எங்கள் மண்ணிலும் புலத்திலும் இருக்கக் கூடிய உறவுகளின் உதவிகளையும் பெற்று கண்ணீர் துடைக்கும் பணியை விரைவில் ஆரம்பிக்க வடக்கு மாகாண அரசு முன்வரவேண்டும்.

அதேநேரம் காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணை அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு குற்றஞ்சாட்டப்பட்டவர்களை நீதிமன்றில் நிறுத்தவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாதாந்த நிவாரண உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கும் பரிந்துரை செய்து அதனை அமுல்படுத்த நம்மால் ஆன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

## வலி.வடக்கு மீள்குடியேற்றம் பதிவுகளை மேற்கொள்ள இறுதிச் சந்தர்ப்பம்

வலி.வடக்கு மீள்குடியேற்ற நடவடிக்கையை துரிதப்படுத்துதற்காக இடம்பெயர்ந்த குடும்பங்கள் இதுவரை பதிவு செய்யப்படாதிருப்பின் இன்று ஞாயிறு தொடக்கம் எதிர்வரும் 26-ம் திகதி புதன் கிழமைக்கு முன்பாக பின்வரும் இடங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதியும் இறுதி சந்தர்ப்பமாக பொ. செல்வராசா, கலட்டி வீதி, கோண்டாவில் மேற்கு , கோணப்புலம், சபாபதிபிள்ளை நலன்புரிமுகாம்கள், மல்லாம் (காங்கேசன் வெதுப்பகத்திற்கு அருகில்) மற்றும் வடமராட்சி மீனவ சங்கத்திலும் பதிவுகளை பதிய முடியும். குடும்ப அட்டையின் நிழற் பிரதியும், காணி உறுதியின் இலக்கமும், பதிவுத்திகதியும், காணியின் மொத்த நிலப்பரப்பும் பதிவுகளின் முக்கிய தரவுகளையும் பதிவின் போது வைத்திருக்கும்படி வலி.வடக்கு மீள்குடியேற்றச் சங்கத்தின் ஊடக இணைப்பாளர் ஆ.தரணிதரன் கேட்டுள்ளார். (செ)

## நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்கத்தி ற்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையை கையளித்துள்ளது.

போதைப்பொருள் விவகாரத்திற்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான ஜோன் அமரதுங்க எம்.பியினால் கையளிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஆப்கான் ஜனாதிபதி இலங்கை விஜயம்

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாயி நாளை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இரண்டு நாட்கள் தங்கி இருக்கவுள்ள அவர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஷ் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கைக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும் வகையில் அவரது விஜயம் அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)


## விரிவுரையாளருடன் கலந்துரையாடல்

பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாள்ருக்கும் வட மாகாண மீன்பிடி போக்குவரத்து கிராமிய அமைச்சருக்குமிடையிலான சந்திப்பு நேற்றுக்காலைமன்னாரில் இடம்பெற்றது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் விலங்கியல் விஞ்ஞான விவசாய கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் உதேனி எதிரிசங்கவுக்கும் அமைச்சர் டெனிஸ்வரனுக்கும் இடையிலான இச்சந்திப்பில் நன்னீர் மற்றும் கடல் நீர் மீன்பிடி தொடர்பாகவும் அதில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை மீன் பிடித்தொழிலில் எமது மக்கள் எதிர்காலத்தில் சந்திக்கக் கூடிய பிரச்சினைகள் மற்றும் மீன் பிடித்தொழின் புதிய நுட்பங்களுடன் அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ-9-266)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### வந்தனை செய்திடடா தம்பி

உண்ணாதே யுறங்காதே யூருராய்த் திரியாதே
பெண்ணாசை வையாதே- தம்பி
பிரமத்தை யறிந்திடடா
கண்ணாரக் கண்டிடடா காலைமே லேற்றிடடா
விண்ணாணம் பேசாதே- தம்பி
வேறுபொரு ளில்லையடா
எண்ணமா லெண்ணிடடா இயைந்தபடி நடந்திடடா
மண்ணாசை வையாதே- தம்பி
மலரடியைப் போற்றிடடா

## கண்ணுக்கு கருணை; பல்லுக்கு பாசம் என்னும் புதியவரிகள் எழுதுவோமா?

இன்று நமக்குத்தரப்படும் பைபிள் பகுதியில் இயேசு "கண்ணுக்குக் கண்", "பல்லுக்குப் பல்"என்று கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன். தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக, உங்களை வலக் கன்னத்தல் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள் என கூறுவதைக் நாம் பார்க்கின்றோம்.

"கண்ணுக்குக் கண்", "பல்லுக்குப் பல்"என்ற இந்த பைபிள் வரிகளை சற்று நோக்குவோமானால் இயேசு வருவதற்கு முற்பட்டகாலத்திலும் இயேசு வாழ்ந்த காலத்திலும் மக்கள் குழுக்களாக வாழ்ந்தபோது, ஒரு குழுவில் உள்ளவர் வேறொரு குழுவில் உள்ளவருக்கு தீங்கு செய்தால், அது பெரும் சண்டையாகமாறி, இரண்டு குழுக்களுக்கும் பெரும் உயிர்ச், சேதமும், சொத்துசேதமும் ஏற்பட்டுவிடுகின்ற நிலைமையே அன்று காணப்பட்டது.இதனைத் தவிர்ப்பதற்காக அவர்களுக்கு ஒரு புதிய ஒழுங்கைக்கொண்டு வருகிறார் இயேசு. அது தான் "கண்ணுக்குக் கண்", "பல்லுக்குப் பல்". இதன்படி ஒரு குழுவில் உள்ளவர் மற்ற குழுவில் உள்ளவரைத் தாக்கினால், பாதிக்கப்பட்டவருக்கும், அவரைத் தாக்கியவருக்கும் இடையே மட்டும் வழக்குத் தீர்க்கப்படும். ஒரு மனிதனுக் காக குழுகள் தங்களிடையே சண்டையில் ஈடுபடாது, பாதிக்கப்பட்டவருக்கு ஒரு கண் போயிருந்தால், அவரைத் தாக்கியவருக்கும் அதே தண்டனைக கொடுக்கப்படும். இயேசு வாழ்ந்த போது இது தான் மக்களிடையே ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருந்தது.

இயேசு இப்போது மற்றொரு நிலைக்கு மக்களை அழைத்துச்செல்கிறார். இதன்படி, பகைவருக்கும் அன்பு என்ற [illegible] மாறாக, புதுமையானது. கண்ணுக்குக் கண் என்று சொல்கிற பழைய ஏற்பாட்டில் ஏராளமான இடங்களில் பகைவருக்கு அன்பு என்கிற பார்வை மேலோங்கிக்காணப்படுகிறதையும் நாம் பார்க்கினறோம். ஆனால் கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்பது இன்றைய உலகில் பலரது பழிதீர்க்கும் மந்திரமாகக் காணப்படுகின்றது. இதற்கு நேர் மாறாக, பழியைத் தீர்க்கும் மந்திரங்களும் வழிகளும் உலகில் பல உண்டு. கண்களையும், மனதையும் திறந்து இவற்றைப் பார்க்க நாம் பழக வேண்டும் என்று இயேசு இன்றைய நற செய்தியில் நமக்கு அழைப்பு விடுக்கிறார்.

இந்த வேளையில் படித்ததில் பிடித்து என் மனதில் ஆழமாய் பதிந்துவிட்ட ஒரு செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்:

### பரமபிதா காட்டிய பாதை

2005ஆம் ஆண்டு கார்த்திகையில், Ahmad Khatib அகமட் கரிப் என்ற பாலஸ்தீனிய சிறுவன் ஒருவன் இஸ்ரயேல் வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டான். அவன் வைத்து விளையாடிக் கொண்டிருந்த பொம்மை துப்பாக்கியை உண்மைத் துப்பாக்கி என்று நினைத்த வீரர்கள் அகமட் கரிப்பை சுட்டனர். இஸ்ரயேல் வீரர்கள் தங்கள் தவறை உணர்ந்ததும், உடனே அச் சிறுவனை இஸ்ரயேல் பகுதியில் இருந்த ஒரு மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றனர். அவனது பெற்றோரையும் அழைத்துச் சென்றனர். அங்கு அகமட் கரிப்பை காப்பாற்ற முடியவில்லை. அந்த நேரத்தில் அவனது பெற்றோர் ஓர் அற்புதம் செய்தனர். கொல்லப்பட்ட தங்கள் மகன் - அகமட கரிப்பன் உடல் உறுப்புகளைத்தானம்செய்யமுன் வந்தனர். அவர்கள் அந்த உறுப்பு தானத்தை இஸ்ரயேல் பகுதியில் இருந்த மருத்துவமனையிலேயே செய்தனர்.

இதனைக் கேள்விப்பட்ட பாலஸ்தீனியர்கள் அதிர்ச்சி அடைந்தனர். பலர் கோபமடைந்தனர். ஆனால், கட்டாயம வேறு பல பாலஸ்தீனியர்கள் மகிழ் ந்திருப்பர். தங்கள மகனைக கொனறது இஸ்ரயேல் படைவீரர்கள்என்று தெரிந்தும, அந்தப் பகுதியிலேயே தங்கள் மகனின் உறுப்புக்களை அவர்கள் தானம் செய்தது பழி தீர்ப்பதில் ஓர் உயர்ந்த வகை. Ishmael- Ablah- இஸ்மாஎல்-அப்லா என்ற அந்த சிறுவனின் பெற்றோர் எளிய மக்கள். அந்தப் பெற்றோர் எடுத்த முடிவைப் பற்றி பத்திரிகையாளர்கள் கேட்ட போது.




அவரகள் சொன்னது: "எங்கள் மகனின உறுப்புக்கள்வழியே வாழப்போகும் இஸ்ரயேல் மக்கள் இனி மேலாகிலும் சமாதானத்தைவிரும்புவார் கள் என்ற நம்பிக்கையில்தான் இந்த உறுப்புகளை நாங்கள் தானம் செய்தோம்."

கண்ணுக்குக் கண் என்று பழி வாங்கத் துடித்துக் கொண்டிருக்கும் இஸ்ரயேல், பாலஸ்தீன மக்களிடையேயும் நமக்கும், கண்ணற்றோருக்குக் கண் என்று சொல்லித்தரும் இஸ்மாஎல்-அப்லா அவர்களின்பாடம், பழியைத் தீரகும் ஓர் அழகிய பாடம். ஆயிரத்தில், பலலாயிரத்தில் ஒரு சிலர் இப்படி இருப்பதாலேயே இந்த உலகம் இன்னும் மனிதர்கள் வாழும் உலகமாக் இருக்கிறது. அளந்து, கணக்குப் பார்த்து அன்பு காட்டும் பலரேதுநடுவில், பயனே தும்கருதாமல், கணக்குப் பாரக்காமல்வாழும்இஸ்மாஎல்-அப்லா போன்றவர்கள் தொடர்ந்து நம்மிடையே வாழவேண்டும் என்று வேண்டுவோம். கணக்குப் பார்த்து பழி தீர்க்கும் உலகை விட பழி தீர்ப்பதில் ஓரஉயர்ந்த வகை என நாம் இங்கு குறிப்பிட்ட நல்ல செயல்கள் வழியாக, பழிகளைதீர்ப்பதில்நம் உலகை நாம் வளர்ப்போம். அன்பையே நம் வாழ்வன அடித்தளமாக கொள்வோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண அமைச்சுக்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி



வட மாகாண விளையாட்டுத்துறைத் திணைக்களத்தினால் மாகாண அமைச்சுக்களுக்கு இடையில் 2013 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப் போட்டிகளும் பரிசில் வழங்கலும் கடந்த புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு நல்லூர ஸ்தான வித்தியாலயத்தில் நடைபெற்றது.


இறுதி நிகழ்வில் ஆண்களுக்கான கரப்பந்து, பெண்களுக்கான வலைப்பந்து, ஆண் ,பெண் இருபாலரிற்குமான கயிறிழுத்தல் என்பன இடம்பெற்றன.

ஆண்களுக்கான கரப் பந்து போட்டியில் கல்வி அமைச்சு அணி உள்ளூராட்சி அமைச்சு அணியை எதிர்கொண்டது.

இதில் 2:1 செற் அடிப்படையில் கல்வி அமைச்சு அணி வெற்றி பெற்றது.

பெண்களுக்கான வலைப் பந்து போட்டியில் பிரதம செயலாளர் கொத்தணி அணியை எதிர்த்து உட்கட்டமைப்பு அமைச்சு அணி மோதியது.

இதில் பிரதம செயலாளர் கொத்தணி அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. ஆண்களுக்கான கயிறிழுத்தல் போட்டியில் உள்ளூ



ராட்சி அமைச்சு அணியை எதிர்த்து உட்கட்டமைப்பு அமைச்சு அணி மோதியது.

இதில் உள்ளூராட்சி அமைச்சு அணி 2:1 என்னும் அடிப்படையில் வென்றது.

பெண்களுக்கான கயிறு முத்தல் போட்டியில் உள்ளூராட்சி அமைச்சு அணியை எதிர்த்து உட்கட்டமைப்பு அமைச்சு அணி மோதியது.


இதில் 2: 1 என்னும் அடிப்படையில் உட்கட்டமைப்பு அமைச்சு அணி வென்றது.



ஒட்டு மொத்த புள்ளிகளின் அடிப்படையில் உள்ளூராட்சி அமைச்சு அணி முதலாம் இடத்தைப் பெற்றது.

இறுதி நிகழ்வின் விருந்தினராக வடக்கு மாகாண கல்வி விளையாட்டு அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினரும் வடக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் இணைப்பாளருமான இ.ஆர்னல்ட், அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(க-23)

# மானிப்பாய் இந்து, தெல்லிப்பழை மகாஜனா கிரிக்கெட் சமநிலையானது



இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தினால் பாட சாலைகளுக்கிடையே 19 வயதுப் பிரிவு அணியினருக்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வீரன் குகப்பிரசாந் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தி சதம் பெற்ற போதும் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்துள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு மிடையிலான போட்டி அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர்.

இதனடிப்படையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி ஆட்ட நேர முடிவில் சகல இலக்குகளையும் இழந்து 309 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

அணி சார்பாக தனது சிறப் பாட்டத்தினை வெளிப்படுத்திய குகப்பிரசாத் சதத்தினை பூர்த்தி செய்தார்.

138 பந்துகளுக்கு முகம் கொடுத்த இவர் 4 சிக்சர்கள் 21 பவுண்டரிகள் அடங்கலாக 148 ஓட்டத்தினை பெற்றுக் கொண்டார்.

கிரிசாந்த 58 பந்துகளுக்கு முகம் கொடுத்து 60 ஓட்டங்களையும் சஜீவன் 81 பந்துகளுக்கு முகம் கொடுத்து 38 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

மகாஜனாக் கல்லூரி சார் பாக பந்து வீச்சில் சிறப்பாக செயற்பட்ட ஜனார்த்தன் கெற்றிக் சாதனையை நிலை நாட்டியதுடன் 52 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 6 விக் கெட்டுக்களையும் பெற்றுக் கொண்டார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகாஜனாக்கல்லூரி அணியினர் 190 ஓட்டத்திற்கு சகல இலக் குகளையும் இழந்தனர்.

கல்லூரி சார்பாக ஜனார்த்தனன் 6 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 66 ஓட்டத்தினையும் டினோசன் 21 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பாக பந்து வீச்சில் டிலக்ஸன் 27 ஓட்டங்களினை கொடுத்து 3 விக்கெட்டுக் களையும் பிரதீபன் 61 ஓட்டத்தினை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இனிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரியினர் எட்டு விக்கெட் இழப்பிற்கு 149 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட போது ஆட்டத்தினை நிறுத்திக் கொள்வதாக அறிவித்தனர்.

கல்லூரி சார்பாக சஜிந் 55 பந்துகளுக்கு முகங்கொடுத்து 2 சிக்ஸர் 7 பவுண்டரிகள் அடங்கலாக 58 ஓட்டத்தினையும் குகப்பிரசாந் 31 பந்துகளுக்கு முகங்கொடுத்து 5 பவுண்டரி கள் அடங்கலாக 28 ஓட்டத்தி னையும் பெற்றுக் கொண்டனர்.

மகாஜனாக் கல்லூரி சார் பாக பந்து வீச்சில் ஜனார்த்தன் 4 விக்கெட்டுக்களையும் மயூரன் 3 விக்கெட்டுக்களையும் வீழத்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகாஜனாக்கல்லூரி அணியினர் 5 விக்கெட் இழப்பிற்கு 162 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

கல்லூரி சார்பாக டிலோஜன் 61 ஓட்டங்களையும் நிசாந் 42 ஓட்டங்களையும் பவன் 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொர்ண்டனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பாக ரிலக்ஸன், குகப்பிரசாந், டிலக்ஸன் ஆகியோர் தலா ஒரு விக் கெட்டுக்களை வீழ்த்தினர். ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி நிறைவுக்கு வந்தது. (க-23)

வலம்புரி SPORTS

விளையாட்டுச் செய்திகள்

## ஸ்கந்தவரோதயாவை வீழ்த்தி சென்.ஜோன்ஸ் அபார வெற்றி



இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் 19 வயதுப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளின் 2 ஆம் சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இப் போட்டிகள் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்டதாக அமைகின்றன.

இடம் பெற்ற போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதியது நாணயற் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத்தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்.ஜோன் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 306 ஓட்டங்களை குவித்தது. இதில் கபில் ராஜ்.76, அனோஜன் 68, பிளமிங் 55 ஓட்டுங்களை பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி சார்பில் ஜனக்ஷன் 3, சரத்குமார், பாலபிரஷாந், மதுஷன் தலா 1 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 307 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 44.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இதில் துவாரகன் 75, சரத்குமார் 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் கஜீபன் 4, நிறோஜன் 3 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர். இதன்மூலம் இப்போட்டியில் 165 ஓட்டங்களால் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது. (க-23)

## தலைவர் வெற்றிக் கிண்ணம்; யூனியன்ஸ், றெட்றேஞ்சர்ஸ் வெற்றி

வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற காற்பந்து அணிகளுக்கிடையிலான போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் வெற்றிக் கிண்ணத்திற்காகவே இப் போட்டிகள் இடம் பெறுகின்றன.

வலிகாமம் லீக்கில் பதிவு பெற்று அங்கத்துவமுடைய கழகங்கள் இப் போட்டிகளில் பங்கு கொள்கின்றன.

போட்டிகள் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்றன.


கடந்த புதன்கிழமை இடம்பெற்ற போட்டியில் தெல்லிப்பழை யூனியன்ஸ் அணியும் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் அணியும் மோதியது.

இதில் 3:0 என்னும் கோல் அடிப்படையில் தெல்லிப்பழை யூனியன்ஸ் அணி வெற்றி பெற்றது.

மற்றைய போட்டியில் சாவற்காடு மகாத்மா அணியும் மாதகல் சென்தோமஸ் அணியும் மோதியது.

இதில் 2:1 என்னும் கோல் அடிப்படையில் சாவற்காடு மகாத்மா அணி வென்றது. (க-23)





யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் நா.ஜீவன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்தயாளன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவி ஒருவருக்கு கேடயம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் அணியை வீழ்த்தி தொடரை முழுமையாக வென்றது இலங்கை

பெரேரா கன்னிச் சதம்



ஆட்ட நாயகன் பெரேரா

பங்களாதேஷ் அணிக்கு எதிரான 3-வதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் இலங்கை அணி 15 பந்துகள் மீதமிருக்கையில் 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்குபற்றியது.

இத்தொடரின் இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி மிர்பூரில் நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 240 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக மொமினுல் ஹக் 60, நஸீர் ஹுசைன் 38, நயீம் இஸ்லாம் 32, அணித் தலைவர் முஸ்பிகுர் ரஹீம் 30 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றுக் கொடுத்தனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் தம்மிக்க பிரசாத் 3, சுரங்க லக்மால் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

241 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி குசல் பெரேராவின் சதம் கைகொடுக்க 47.3 ஓவர்களில் வெற்றியிலக்கை அடைந்தது.




துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குசல் பெரேரா 106, சண்டிமல் 60 ஓட்டங்களை எடுத்தனர்.

பங்களாதேஷின் பந்துவீச்சில் ரூபெல் ஹுசைன், மகமதுல்லா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரை இலங்கை அணி 3:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக குசல் பெரேரா (இலங்கை), போட்டித் தொடரின் நாயகனாக சச்சித்திர சேனநாயக்க (இலங்கை) தெரிவாகினர். (கு)

## இன்றைய போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழத்தினரால் வருடா வருடம் நடத்தப்பட்டு வரும் விக்ரம் ராஜன் கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண போட்டியின் இறுதிப் போட்டி இன்றாகும். இறுதிப்போட்டி 40 பந்து பரிமாற்றங்களை கொண்டதாக கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இன்றைய நாளில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் தலைவர் சிவசங்கர் தலைமை வகிக்க பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் சுதாகரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இன்றைய தினமே மாலை வேளை பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும். இறுதிப் போட்டியில் யாழ் பல்கலைக்கழக விளையாட்டு கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க-23)

## சொற்பொழிவு

யாழ்.கந்தர்மடம் சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 4மணிக்கு சொற்பொழிவு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் சித்தர்கள் வாழ்வியல் என்ற தலைப்பில் பேராசிரியர் நா. ஞானகுமாரன், அதனைத் தொடர்ந்து [illegible]ரோக்கிய வாழ்வை நோக்கி எனும் தலைப்பில் வைத்திய கலாநிதி வை.யோகேஸ்வரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

ஆர்வலர்கள் அனைவரும் இந் நிகழ்வில் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகின்றனர். (செ)

## 79...

கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கண்டு பிடிக்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்களின் எண்ணிக்கை 79 ஆக அதிகரித்துள்ளது.

இன்றைய அகழ்வுப்பணியின் போது அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரட்ண தலைமையிலான குழுவினர் சமுகமளிக்கவில்லை.

இதனால்கண்டு பிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் மீட்கப்படவில்லை.

மன்னார் நீதவான் முன்னிலையில் பொலிஸாரும், தொல் பொருள் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து இப்பணியில் ஈடுபட்டனர்.

மீண்டும் இன்று ஞாயிற்றுக் கிழமை 30 ஆவது தடவையாக அகழ்வுப்பணிகள் இடம்பெறவுள்ளது. (செ-11)

## ஜனாதிபதி...

நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் தமிழர்கள் பலர் கொல்லப்பட்டதாகவும் அதற்கு பழித்தீர்க்கும் வகையில் இந்த குண்டு தாக்குதல் நடத்தப்பட உள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குண்டு சாஹிரா கல்லூரியில் உள்ள கட்டிடம் ஒன்றில் குண்டு பொருத்தப்பட உள்ளதாகவும் அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

புத்தளம் தலைமையக பொலிஸ நிலையத்திற்கு கிடைத்த இந்த கடிதத்தை மதுரங்குளி - கடையாமட்டை முஸ்லிம் பாடசாலையில் 13 ஆம் ஆண்டில்பயிலும் மாணவர் ஒருவரே எழுதியிருப்பதாக அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

அந்த மாணவர் தமிழ் மாணவர் எனவும் அவர் கடையாமட்டை முஸ்லிம் பாடசாலையில் 13 ஆம் ஆண்டில் பயின்று வருவதுடன் பாடசாலையின் மாணவர் தலைவராகவும் இருந்து வருகிறார்.

அப்பாவியான இந்த மாணவர் தமிழர் என்ற போதிலும் முஸ்லிம் பாடசாலை ஒன்றின் மாணவர் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதால் ஏனைய முஸ்லிம் மாணவர்கள் அவருடன் முரண்பாட்டுடன் இருந்து வருவதாக புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அந்த பாடசாலையில் பயிலும் வேறு மூன்று மாணவர்களே இந்த கடிதத்தை எழுதியுள்ளதாக பொலிஸார் கண்டறிந்துள்ளனர். குறித்த மாணவர்கள் அவர்களின் வீடுகளில் இல்லாத நிலையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறினர்.

பாடசாலையின் மாணவர் தலைவர் பெயரில் எழுதிய மொட்டை கடிதமே பொலிஸாருக்கு கிடைத்துள்ளது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. புத்தளம் பொலிஸாரும், புலனாய்வுப் பிரிவினரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## ஆவணப்படத்திற்கு...

ஆவணப்படங்களை திரையிடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. [illegible]னவே, இந்தக் காணொளியை [illegible]வில் இலவசமாக இணை[illegible] பிரசுரிப்பதற்கு ஆவணப் படத்தின் இயக்குநர் கலம் மக்ரே தெரிவித்துள்ளார். திரையிடுவதற்கு தடை விதிக்கப்பட்ட இலங்கை, மலேசியா, நேபாளம் போன்ற நாடுகளில் இணையத்தில் இலவசமாக பார்[illegible]யிடக் கூடிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையுடனான உறவுகளில் விரிசல் ஏற்படக் கூடும் என்ற காரணத்தினால் இந்திய அதிகாரிகள திரைப்படத்தினை தடை செய்துள்ளதாக சனல் 4 ஊடகம் தெரிவித்துள்ளது. அநேகமான காட்சிகள் பார்க்கக்கூடிய வகையில் இல்லை என இந்திய திரைப்பட தணிக்கைச் சபை அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் குறித்த ஆவணப்படத்தை டெல்லியில் காட்சிப்படுத்தும் நோக்கில் இந்தியாவிற்கு விஜயம் செய்ய முயற்சித்த ஆவணப்படத்தின் இயக்குநர் கலம் மக்ரேவிற்கு விசா வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கருத்து சுதந்திரத்தை மதிக்கும் இந்தியாவில் இவ்வாறான அரசியல் நோக்கத்தை முன்னிலைப்படுத்திய நடவடிக் கைகள் இடம் பெறுகின்றமை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என மக்ரே தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் அழுத்தங்கள் காரணமாகவே ஆவணப்படத்தை திரையிடுவதற்கு அனுமதியளிக்கப்படவில்லை என குறிப்பிடப்படுகிறது. யுத்த குற்றச் செயல் தொடர்பிலான விசாரணைகளை ஒடுக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக மக்ரே குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## விரைவில் நாங்கள்...

சொல்லும் அளவுக்குத்தான் அது இருந்தது.

**கேள்வி:** முறையான விசாரணை நடைபெற்றதா?

**பதில்:** தடா நீதிமன்ற விசாரணையின் போது "சார்ஜ் ஃபிரேமிங்' எனப்படும் குற்றவனைவின் போது மட்டுமே செய்தியாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். எங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தினசரி ஊடகங்களில் அப்போது வெளியாகின. ஆனால், எங்கள் தரப்பு வாதங்களின்போது பாதுகாப்புக் காரணம் என்று கூறி செய்தியாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனது தரப்பு நியாயங்கள் மக்களுக்குத் தெரியாமலே போய் விட்டது.

**கேள்வி:** உங்களுக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தம் இல்லையா?

**பதில்:** சிரிப்புத்தான் வருகிறது. ராஜிவ் கொலையில் சம்பந்தப்பட்ட யாருமே கைது செய்யப்படவில்லை என்பதே உண்மை. சம்பவ இடத்தில் இருந்த நளினி அக்காகூட சதியில் சம்பந்தப்பட்டவர் இல்லை.

**கேள்வி:** உங்கள் மீது என்ன தான் குற்றச்சாட்டு?

**பதில்:** சதித்திட்டத்தில் ஈடுபட்டேன், சிவராசனின் நிழலாக இருந்தேன் என்று மேம்போக்காகத்தான் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

**கேள்வி:** சி.பி.ஐ தடா நீதிமன்றம் போன்றவை தவறு இழைத்தன என்று நினைக்கலாம். ஆனால், உங்களுக்கு தூக்குத் தண்டனையை உச்ச நீதிமன்றம் கூட உறுதி செய்ததே?

**பதில்:** வேதனைக்குரியது இது தான். இறந்து போன எதிரி என்று சி.பி.ஐ சொல்லும் திருச்சி சாந்தனையும், என்னையும் உச்ச நீதிமன்றம் ஒன்றாக்கிவிட்டது. என்னைப் பற்றிய பல பிரச்சினைகளில் இரண்டு நீதிபதிகள் முரண்பட்ட செய்திகளைச் சொன்னார்கள்.

**கேள்வி:** ஏன் இந்தியாவுக்கு வந்தீர்கள்?

**பதில்:** எனக்குத் தரப்பட்ட பணி ஐரோப்பிய நாடு ஒன்றில்தான். இலங்கை தலைநகர் மூலமாகப் பயணம செய்வது பாதுகாப்பானதாக இல்லை என்பதால் நானாகவே முடிவெடுத்து இந்தியாவுக்கு வந்து சேர்ந்தேன்.

**கேள்வி:** வெளிநாட்டுக்குச் செல்லும் வேலையில் ஈடுபட்ட தாகத் தெரியவில்லையே..?

**பதில்:** தவறு. நான் பயணம் செய்ய உதவிய டிராவல் ஏஜென்ட் மற்றும் அவரை ஏற்பாடு செய்து தந்தவர் என இருவரும் சாட்சியாக விசாரிக்கப்பட்டனர். இவர்கள் மட்டுமன்றி இது சம்பந்தமாக புலனாய்வு செய்த ஆய்வாளரும் நீதி மன்றத்தில் சாட்சியளித்திருக்கிறார்.

அப்படி இருந்தும் நான் வெளிநாடு போக வந்ததை மறுத்துவந்த சி.பி.ஐ ஒரு கட்டத்தில் "வெளிநாடு போக முயற்சித்தது உண்மை சதித் திட்டம் நிறைவேறியதும் தப்பிப் போகும் முயற்சியே அது' என்றது.

**கேள்வி:** உச்ச நீதிமன்றம் இதைப்பற்றி என்ன சொன்னது?

**பதில்:** சி.பி.ஐ-யை அப்படியே வழிமொழிந்தது. இதை மட்டுமல்ல... நான் சட்டவிரோதக் காவலில் வைகக்கப்பட்டிருந்த சேதியைக்கூட கண்டு கொள்ளவில்லை.

சட்டவிரோதக் காவல் தெரிந்துவிடும் என்றுதான் நான் கைது செயயப்பட்ட வீட்டில் இருந்த நால்வரும், சென்னை கொட்டி வாக்கத்தில் இருந்து பொருட்கள் சில கைப்பற்றப்பட்ட போது சாட்சியாக இருந்த நால்வரும் நீதிமன்றத்துக்கு சாட்சியமளிக்க அழைத்து வரப்படவில்லை.

இவர்களில் மூன்று பேர் சிவராசனின் சொந்த ஊரைச் சேர்ந்தவர்கள். சி.பி.ஐ-யால் பிடிக்கப்பட்ட எத்தனையோ பேர் அப்போது சைதாப்பேட்டை சிறப்பு முகாமிலும், பிறகு செங்கல்பட்டு சிறப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அந்த மூவர் மட்டும் சுதந்திரமாக விடப்பட்டதன் இரகசியம் சம்பந்தப்பட்டவர்களுக்கே தெரியும்.

**கேள்வி:** இப்போது இவ்வளவு தகவலையும் கூறும் நீங்கள், ஏன் முன்னரே வாய்திறக்கவில்லை?

**பதில்:** இங்கு எனக்கு தனிப்பட்ட ரீதியில், நான் சொல்லக்கூடிய வேலைகளைச் செய்ய உறவினர்களோ, நண்பர்களோ கிடையாது. அடுத்தது வழக்கு சம்பந்தமாக எனக்குத் தெரிந்த எதையும் யாருடனும் பகிர்ந்து கொள்ளும் விருப்பமும் இல்லை.

அதையும் மீறி 2007-ல் அப்போதைய குடியரசுத் தலைவருக்கு ஒரு பெரிய மடல் விடுத்தேன். அதில் இவற்றைப் பேசியுள்ளேன். அதை நூலாக்கும் பணியில் இப்போது எனது வழக்குரைஞர் அண்ணன் தடா சந்திரசேகரனும், தம்பி ராஜிவ் காந்தியும் ஈடுபட்டுள்ளனர்.

**கேள்வி:** உங்கள் பெற்றோரையோ, உடன் பிறப்புகளையோ அழைத்திருக்கலாமே..?

**பதில்:** அவர்களை இந்த நிலையில் நேரடியாகச் சந்திக்கும் தைரியம் எனக்கு இல்லை. கடிதம் மூலமாகவே கதைத்து வந்தேன். இறுதிக்கட்டப் போருக்குப் பிறகு அதுவும் இல்லை.

இப்போது அவர்களின் இருப்பிடமே தெரியவில்லை. என்மீது பாசமும், மதிப்பும் வைத்திருக்கிற உணர்வாளர்களும், மனித உரிமைப் போராளிகளும் மட்டுமே எனக்கு இப்போது சொந்தம்.

**கேள்வி:** உயர் நீதிமன்றத்தில் இடைக் காலத் தடை பெற்றுள்ளீர்கள் இது நிரந்தரமா?

**பதில்:** எனது விடுதலைச் செய்தி விரைவில் ஊடகங்களில் வரும், ஒட்டுமொத்த தமிழினமும் எங்களின் பக்கம் நிற்கிறது.

**கேள்வி:** தமிழக மக்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்:** இந்த உயிர் நீங்கள் போட்ட பிச்சை. கட்சி, மத, சாதி வேறுபாடுகளை மறந்து மொத்த தமிழகமும் எங்களுக்காகக் குரல் கொடுத்தது. வெளியில் தெரிந்தும், மறைமுகமாகவும் பல தலைவர்கள், பிரமுகர்கள் உழைத்திருக்கிறீர்கள்.

யாருடைய பெயரையும் இப்போது அவசரத்தில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஒரு பெயர் விடுபட்டாலும் நன்றி மறந்தவன் ஆகிவிடுவேன். பாடுபட்ட அனைவருக்கும் நன்றி.

சிறையில் தியானமும், எழுத்தும் எனக்கு ஆறுதலாக அமைந்தன. ஏற்கெனவே ஐந்து நூல்கள் வெளியாகியுள்ளன. சிறைப்பூக்கள், உள்ளொளி இதழ்களில் ஆசிரியப் பணி நல்ல முறையில் நடந்தது. இலக்கியப் போட்டிகளில் பல பரிசுகளையும் பெற்றிருக்கிற நான், தனியாக அடைக்கப்பட்ட நாட்களை ஒரு தவக் காலமாகவே நினைத்தேன்.

அனுபவங்களை எழுதியுள்ளேன். 11.8.2011-ல் இருந்து 30.8.2011 வரையிலான அந்த நாட்களில் நடந்த சிலவற்றையும் பழைய நினைவுகளையும் எழுதியுள்ளேன்.

ஒரு சிறுகதைத் தொகுப்பும், கவிதைத் தொகுப்பும் வெளியிடும் வகையில் எழுதியுள்ளேன். ஒரு வரலாற்று நாவலும், சிறையாளிகள இருவரின் வாழ்க்கை நாவலும் மனதுக்குள் உருக்கொண்டன.

பார்ப்போம்... இயற்கை அனுமதிக்கும் போது அவற்றை நூலாக்குவேன் என சாந்தன் தனது போட்டியில் தெரிவித்துள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...படிப்பகம்
...சபை, யாழ்ப்பாணம்.

## பிரிவினையை ஏற்படுத்த...

அரசாங்கத்திற்கு உரிய துறைகளாகும். இதனால் வடக்கு மாகாண சபை இந்த துறைகள் தொடர்பில் யோசனைகளை நிறைவேற்றியிருப்பது அரசியல் அமைப்புச் சட்டத்தை கடுமையாக மீறிய செயற்பாடாகும்.

போர் நடைபெற்ற காலத்தில் விடுதலைப் புலிகள் தமது இலகு ரக விமானங்கள் மூலம் அவர்களின் விமானப் பலத்தை நாட்டிற்குள் ஸ்தாபிக்க முயற்சித்தனர்.

அது மாத்திரமல்ல, போர் நடைபெற்ற காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு தேவையான ஆயுதங்கள் கடல் வழியாகவே கிடைத்து வந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் அமைப்பின் மூலம் கிடைத்துள்ள மாகாண சபை, நாடாளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் அதிகாரங்களை பயன்படுத்தி தமிழீழ பிரிவினைவாத அரசியலை வலுப்படுத்துவதற்கே தொடர்ந்தும் பயன்படுத்தி வருகிறது.

வெள்ளை உடை அணிந்து புனிதரை போல் காட்சி தரும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கட்டம் கட்டமாக வடக்கை பிரிவினையை நோக்கி தள்ளி வருகிறார்.

வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு நடவடிக்கை எடுக்காது போனால், தமிழ் நாடு மாநிலம் இந்தியாவில் மேற்கொள்வது போல், வடக்கு மாகாண சபையும் இலங்கை அரசாங்கத்தை தனது தாளத்திற்கு ஆடவைக்கக் கூடும்.

நாட்டை இரண்டாக பிரித்து வெளிநாடுகளின் உதவியுடன் வடக்கில் தமிழ் நாட்டை உருவாக்கும் பிரிவினைவாத திட்டத்திற்கே இவர்கள் தயாராகி வருகின்றனர்.

இதனால் இலங்கை அரசாங்கம் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

**கார் விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் டாக்டரின் பாவனையில் உள்ள
TOYOTA COROLLA 64-52xx Orginal Diesel
கார் விற்பனைக்கு
✦ A/c, Full option
எதிர்பார்க்கும் விலை 1350000/=
பேசித் தீர்மானிக்கலாம்
தொடர்பு: **0777 906 536**
(5670)

**SUN TRAVELS**

இந்திய வீசா விண்ணப்ப ஏற்பாடுகள்
திருமண விசேட போக்குவரத்து சேவைகள்
Car, Van, Bick வாடகை சேவை
No. 40, றக்கா வீதி, கோவில் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
077 225 9030, 021 790 3634
(5665)

**உடனடி வேலைவாய்ப்பு**

இலங்கையில் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனமான Dialog விபத்து காப்புறுதியுடன் இணைந்து வேலைசெய்ய அரியவாய்ப்பு. ஆரம்ப சம்பளம் 7500/- உடன் 35000/- மேல். Commision வழங்கப்படும்.

மேலதிக தகைமைகள்
* சாதாரண தரத்தில் / உயர் தரத்தில் சித்தியடைந்தவர்கள்.
* 18-45 வயதிற்குட்பட்டவர்கள்.
* ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
* காப்புறுதிக்கான முன் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
* வட மாகாணத்தில் உள்ள அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

தமது சுயவிபரக்கோவையை (CV) ஐ அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி.
c.rohan@milvik.se
மேலதிக விரபங்களுக்கு : **0773166610 / 0772306768** (Rajeeban) யாழ்ப்பாணம்.
(C-6573)

**கார் விற்பனைக்கு**

Mitsubishi வகை கார் விற்பனைக்கு உண்டு
••• தொடர்பு •••
077 719 0569, 077 958 7281
(5674)

## பேரறிவாளனை...

மத்திய அரசும் காங்கிரஸ் கட்சியும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அதே நேரத்தில் பேரறிவாளனை மட்டும் விடுதலை செய்யலாம் என மூத்த காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் கருத்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

மூவரையும் விடுதலை செய்த "உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு மிகவும் மோசமான தீர்ப்பு. பேரறிவாளன் மட்டும் பற்றரி வாங்கிக் கொடுத்தார் மற்றபடி அவருக்கு எதுவும் தெரியாது என்கிறார்கள்.

அதனை விசாரித்த அதிகாரியே அதைத் தான் இப்போது சொல்லியிருக்கிறார். அதனால் பேரறிவாளனை மட்டும் தண்டனை இல்லாமல் செய்தால், அதில் ஓரளவு நியாயம் இருக்கிறது. அதனை ஏற்றுக் கொள்ள முடியும்.

ஆனால், முருகன், சாந்தன் இருவரும் ராஜிவ் காந்தி கொலை செயல் நடக்கும் அந்த இடத்தில் இருந்தவர்கள். இவர்களை விடுதலை செய்யப் போகிறார்கள் என்று சொல்வது, நீதித்துறை மீதே நம்பிக்கை இல்லாமல் செய்யக்கூடிய செயல். அவர்களுக்குத் தூக்குத் தண்டனை கொடுத்தால்தான் நீதி நிலைக்கும் என்று கூறியுள்ளார். (செ-11)

**German Institute**

இம் முறை சித்தியடைந்த மாணவர்கள்.....



German, Swiss மொழிகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் Germanyயிலிருந்து வந்த ஆசிரியரால் நடைபெறுகிறது.
அடுத்த பிரிவு 26.02.2014 அன்று ஆரம்பம்.
Tel : 0771604823, 0778093278
- S. Priyanthan, P.Kajenthini
(5668)

**வேலைவாய்ப்பு**

யாழில் பிரபலமாக இயங்கிக் கொண்டிருக்கும் சர்வதேச கம்பனிக்கு துடிப்பு மிக்க இளைஞர், யுவதிகள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
✔ அனுபவம் பயிற்சியின் மூலம் வழங்கப்படும்
✔ பயிற்சிக் காலத்தில் 15,000/= வழங்கப்படும்
✔ கல்வித் தகைமை O/L
✔ வெளிநாட்டு பிரயாணங்கள் மேற்கொள்ளலாம்
✔ Medical, EPF,ETF வசதிகள் அமைத்துத் தரப்படும்
✔ வயதெல்லை 18-35 ✔ தங்குமிட, உணவு வசதிகள் இலவசம்
✔ முந்தும் 10 பேருக்கு மட்டும்
தொடர்புகளுக்கு:0777981471,0772302795,0775566226
For more deatiles:www.Granton sri lanka.com
Best of Luck for your great future
(5672)

**நிரந்தர தொழில்**

நிரந்தர தொழிலுக்கு இன்றே அழையுங்கள். 18-50 வயது ஆண்-பெண் இருபாலாருக்கும். சம்பளம் 18000/=, 38000/= கொழும்பை அ... பிரதேசங்களில் ஜேம்/கோடியல்/பிஸ்கட்/ இறைச்சி/ PVC/ கிளவுஸ்/ ...ண்ட்/ தண்ணீர்போத்தல்/ காமெண்ட் Printing/தேங்காய் பால்மா/ தேயிலை மற்றும் பல தொழிற்சாலைகளில் ✦ உற்பத்தி உதவியாளர் ✦ பொதியிடல் ✦ தரம்பிரித்தல் ✦ லேபல் பிரிவுக்கு ஆட்கள் தேவை. உணவு தங்குமிடம் குறைந்தவிலை. வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்புக்கள். (நண்பர்கள்/ குழுக்கள்/ தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்)
தொடர்பு:0775561883
(சி-6566)

**சல்லிக்கற்கள் விற்பனைக்குண்டு.**

சரியான அளவை கொண்ட (3/4") கருங்கற்சல்லிக்கற்கள் குறைந்த விலையில் **யாழ், வன்னி** போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்துதரப்படும்.



3 கியூப் 33,000/- (4 டிரக்டர் பெட்டி)
(C-6555)
**0773818799**
Branawan Enterprises
635, Pointpedro Road, Nallur, Jaffna

**SPEED LANKA EXPRESS**

**வெளிநாடுகளுக்கான**
தபால் பொதிகள் சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net
(C-6562)

## ஆணின்...

யடுத்து குளத்தினைச் சென்று பார்த்த போதே மேற்படி சடலம் தலை குப்புறவாக மிதந்து கொண்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் மீட்கப்பட்ட சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (செ-6)

UK | USA| Malaysia | India | Georgia | Latvia
Russia| Ukraine | Bangladesh | China

**STUDY MEDICINE**
**MBBS**



RECOGNISED BY
W.H.O & SRILANKAN MEDICAL COUNCIL

2014 INTAKE
APPLICATIONS ARE OPEN FOR NEXT INTAKE

LIMITED SEATS
CALL: 021 7306000
021 4926222
077 3013060

ICS Study Overseas
தொடர்புகளுக்கு
77, Clock Tower Road, Jaffna.
107, B 1/1 Galle Road, Colombo - 06
077 3013060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... யாழ்ப்பாணம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.